மு. வ. பா...

காந்தி இருக்கிறது -

இளைய தலை 2 ம் பாகம் பற்றி - 110, பக். 5.

இதழ் 19

இலக்கியம் செப்டம்பர் 1969, 25,

...ம் மதிப்பீட்டுக்கு

இதழ். 41, பக். 5.

ராஜாஜியம் மதிப்பீட்டாளர்

இதழ். 69 / No. 10

மாதம் 2 மாதம்

அக்டோபர் 1969.

ந்த ஏட்டில்

வ. ரா.
ந. பிச்சமூர்த்தி
கம்பதாசன்
வல்லிக்கண்ணன்
சி. கனகசபாபதி
சி. சு. செல்லப்பா
டி. சி. ராமலிங்கம்
கி. அ. சச்சிதாநந்தம்
பு. ந. கண்ணன்
ஹரி. சீனிவாசன்
எழில்முதல்வன்
கா. அரங்கசாமி
ஜேம்ஸ் ஜாய்ஸ்

வேதாந்த மேதை—நாவலாசிரியர்

பி. ஆர். ராஜம் அய்யர்

25-1-1872—18-5-1898

எழுத்து

ஆசிரியர்:
சி. சு. செல்லப்பா

97

ஜனவரி 67
பைசா 50

எழுத்து

ஆசிரியர்: **சி. சு. செல்லப்பா**

ஒன்பதாம் ஆண்டு ஏடு 97 ஜனவரி 1967

1	தலையங்கம்	இந்த ஏடு உங்கள் முன்
3	உபதலையங்கம்	த எ. சங்க மகாநாடு
4	,,	சிறுகதாசிரியர் மஞ்சேரி ஈஸ்வரன்
5	நினைவு நாள் கட்டுரை	பி. ஆர். ராஜம் அய்யர்
6	சிந்தனைக் கட்டுரை	ஒரே குழப்பம் வ ரா.
9	விமர்சனம்	பாரதிக்குப் பின் தமிழில் புதுக் கவிதை சி. கனகசபாபதி
13	மொழிபெயர்ப்பு கதை	அராபி ஜேம்ஸ் ஜாய்ஸ்
17	மனநிழல்	ஒற்றைத் தென்னை டி. சி ராமலிங்கம்
19	சிறுகதை	மாமியின் வீடு சி. சு. செல்லப்பா
24	கவிதைகள்	கம்பதாசன் வல்லிக்கண்ணன் கி. அ. சச்சிதாநந்தம்
25	நாடகம்	அக்பரும் தான்சனும் ந. பிச்சமூர்த்தி
29	ஸ்கிட்	மூளைக்கு ஓய்வு தேவை பு. ந. கண்ணன்
31	கவிதை	கா. அரங்கசாமி
32	பிறர் கருத்து	லகு கவிதை

⊙

எழுத்து—ஜனவரி 1967 : ஏடு 97 : ஒன்பதாம் ஆண்டு.

இங்கிலீஷ் மாதம் தோறும் முதல் தேதியன்று வெளிவரும்.

ஆசிரிய காரியாலயம் : எழுத்து, 19—A, பிள்ளையார்கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

சந்தாவிகிதம் : தனிப்பிரதி 50 பைசா. ஒரு ஆண்டு ரூ. 6/- மூன்று ஆண்டுகள் ரூ. 15/- வெளிநாடு : ஆண்டுக்கு ரூ. 8/- மூன்று ஆண்டுகள் ரூ. 20/-

இலக்கிய, கலைக் கட்டுரைகளை வெளியிடும் : கட்டுரைகளுடன் ஸ்டாம்பு ஒட்டிய, தன் விலாசமிட்ட கவர்கள் அனுப்பப்பட வேண்டும். சுருக்கமாக எழுதப்பட்ட கடிதங்கள் கருத்துகள், எழுத்து அரங்கம் பகுதியில் வெளியிடப்படும்.

கடிதப் போக்கு வரத்து, கட்டுரை அனுப்புதல் : மேலே கண்ட முகவரிக்கு ஆசிரியர், மானேஜர் என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

எழுத்து

ஆண்டு ஒன்பது | ஜனவரி 1967 | ஏடு 97

தலையங்கம்

இந்த ஏடு உங்கள் முன்

இந்த ஏடு உங்கள் முன் இருக்கிறது.

1959-ல் எழுத்து ஆரம்பமானபோது 'மக்களுக்கு இன்னன்னவைகளைக் கொடுத்து பிடிக்கச் செய்ய வேண்டும். புதுப் புதுவிதமான நோக்கும் பார்வையும் கொண்டு வெளியிட்டுச் சொல்ல வேண்டும்' என்ற இரண்டு கருத்துகளை வலியுறுத்தினோம் முதல் தலையங்கத்தில். கவிதை சம்பந்தமாக புதுக்கவிதையை தொடர்ந்துகொடுத்து இன்று தற்காலக் கவிதையை தேடிப்பிடித்து படிக்கும் ஒரு நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதே போல தனிப்பட்ட நாவல்களை எடுத்துக் கொண்டு ஆய்வு விமர்சனம் செய்யும் ஒரு நிலையும் ஏற்பட்டிருக்கிறது. எழுத்து விரும்பியது கொஞ்சம் நடந்திருப்பது திருப்தி தருவதாகும். இந்த திருப்தியோடு நின்றுவிடாமல் கொஞ்சம் அதிக ஆசையை காட்டுகிறது இந்த ஏடு.

வ. ரா. வின். மறுபிரசுர கட்டுரை பற்றி முதலில். தமிழனுக்காக அன்று சிந்தித்தவர் வ ரா. அவர் கருத்துக்களையும் கருத்து அறிவிக்கப்பட்ட விதத்தையும் காட்ட விரும்புகிறோம். அந்த மாதிரி கட்டுரைகளை எழுத்து வாசகர்கள் உன்னிப்பாய் கவனித்து, 'ஒரே குழப்பம்' போன்ற கட்டுரைகளை—பொருள் அமைப்பு இரண்டும் சிறப்பாக இருக்கும் கட்டுரைகளை—எழுதத் தூண்டும் முயற்சியாகத்தான். அடுத்து ந. பிச்சமூர்த்தியின் பழய ஓரங்க நாடகம். இன்று நாடகமே சரியாக எழுதப்படாத நிலையில் ஓரங்க நாடகங்கள் எப்படி வரமுடியும். லட்சணமான ஒரு ஓரங்க நாடகம் எப்படி இருக்க முடியும் என்பதுக்கு 'அக்பரும் தான்ஸேனும்' ஒரு உதாரணம் இதைப் படிக்கும் வாசகர்கள் ஓரங்க நாடகங்கள் எழுத, இது தூண்டக்கூடும் அல்லவா? அடுத்து மன நிழல் கட்டுரை 'ஒற்றைத் தென்னை' முப்பதுகளில் இது மாதிரி 'ரிஃப்ளக்டிவ்' கட்டுரைகள் நிறைய வந்தன இன்று காணப்படவில்லை. டி. சி. ராமலிங்கம் எழுதியுள்ள ஒற்றைத் தென்னை இந்த வகையில் ஒரு நல்ல முயற்சி.

புதுக்கவிதை நிலைத்து விட்டது. புதுக் கவிதை என்பதுக்கு பதில் தற்காலக் கவிதை என்றே இனி நாம் குறிப்பிடலாம். தமிழை முறையாகப் படித்தவர்கள். யாப்பிலக்கணம் அறிந்தவர்கள், உள்பட புதியவர்களின் கவிதைகள் எழுத்துக்கு முன்னைவிட அதிகமாககிடைக்கின்றன. மரபு வழியில் நல்ல கவிதைகள் எழுதியுள்ள கம்பதாஸன் இந்த ஏட்டில் ஒரு தற்காலக் கவிதை எழுதிஇருக்கிறார். தற்காலக்கவிதை முதல்வர்களில் ஒருவரான வல்லிக்கண்ணன் கவிதை இந்த ஏட்டில் இருக்கிறது. 'வெண்மலர்கள்' எழுதிய கி. அ. சச்சிதானந்தம் கவிதையும், அதோடு புதியவர்கள் ஹரி சீனிவாசன், எழில்முதல்வன், கா. அரங்கசாமி ஆகியோர் கவிதைகளும். இவை நல்ல ஆரம்பம் காட்டுகின்றன.

சரி, கவிதைகள் பெருகினால் போதுமா கவிதைகளை ரசிக்கச் செய்ய? அந்த வேலையை செய்யும் கட்டுரை 'பாரதிக்குப் பின் தமிழில் புதுக் கவிதை' என்ற கட்டுரை. போரில் எதிராளியிடமிருந்து இடத்தை பிடித்துவிட்டபின் அடுத்து செய்ய வேண்டிய வேலை பிடித்த இடத்தை ஆர்ஜிதப்படுத்திக் கொள்வதுதான். அதுக்குப் பின் தான் மேலே முன்னேற்றம். அதேபோல இலக்கிய சோதனை முயற்சிகள் செய்து வரவும் செய்த அளவுக்கு கணிப்பு செய்வது அடுத்த வேலை. இந்த கணிப்பு வேலையை சி. கனகசபாபதி சரியாகச் செய்கிறார். மதுரை வாசகர் வட்ட கூட்டத்தில் படிக்கப்பட்ட இந்த தொடர்கட்டுரை விமர்சனத் துறையின் இன்றய வளர்ச்சி நிலையை காட்டுவது.

அடுத்து சிறுகதைகள். மேல்நாட்டு படைப்பாளிகள் பெயரை எல்லாம் கொண்டு வந்து எங்களை பயமுறுத்தாதீர்கள், அவர்களை வைத்து எங்களை அளக்காதீர்கள் என்ற ஓலக்குரல் கிளம்பிக் கொண்டே இருப்பதை பார்க்கிறோம். சிறுகதையும் நாவலும் எழுத கற்றுக் கொண்டதே அங்கிருந்து. ஆனால் ஒப்பிட்டுப் பார்க்க மனமுறண்டு. ஏன் இது? தங்கள் படைப்பின் தரத்

தில் அவநம்பிக்கையா? அப்படி இருந்தால் 'உலகத்து சிறுகதைகளுடன் போட்டி போடும் எங்கள் கதைகள்' என்ற தற்பெருமைக்கு அர்த்தம்? ஒப்பிட்டுப் பார்த்தலின் முடிவாகத்தானே மலையாள கவி ஜி. சங்கர குருப்புக்கு அகில இந்திய பரிசு கிடைத்தது. பலமொழி இலக்கியங்களை ஒப்பிட ஒரு அளவுகோலை ஒரு குறிப்பிட்ட மொழிக்குள் மட்டும் இருந்த, உபயோகப்படுத்தப்பட்ட அளவுகோலுக்கு மேலான ஒன்றை உபயோகித்துப் பார்த்ததின் விளைவுதானே? நோபல் பரிசுக்கு ஒரு அளவுகோல் இருக்கத்தானே செய்கிறது. பரிசுக்கான அளவுகோல்களை மட்டும் சொல்லவில்லை. இலக்கியத் தர தீர்ணயத்துக்கே உலக இலக்கியப் பொதுவான அளவுகோல்கள் உருவாகிக் கொண்டிருக்கிற காலம் இது. தமிழ் மொழிக்காரர்கள் மட்டும் இந்த அசட்டுக் கருத்து கொண்டிருப்பானேன்?

இந்த ஏட்டில் வெளியாகியுள்ள ஜேம்ஸ் ஜாய்ஸின் கதையை படிக்கிறபோது ஒரு தலைசிறந்த பிறமொழி படைப்பாளி எப்படி தன் உருவத்துக்கும் உள்ளடக்கத்துக்கும் மொழியை கையாண்டிருக்கிறார் என்பது தெரியும். அப்போது தான் நம் சிறுகதைகளில் காணப்படும் நிறையும் குறையும் நமக்கு துல்யமாக தெரியவரும். நம் சிறுகதை வளர்கிறதா, தேங்கி நிற்கிறதா, தேய்கிறதா என்று தெரியும். வி. து சீனிவாசன் நன்றாக மொழி பெயர்த்திருக்கிறார். இந்த ஏட்டில் உள்ள மற்றொரு சிறுகதை 'மாமியின் வீடு.' எழுத்து ஆசிரியரே இந்த கதையை எழுதிஇருப்பதால் அதைப்பற்றி பேசவில்லை. இந்த கதையைப்பற்றின விமர்சனத்தை, ஆய்வை எதிர்பார்க்கிறோம்.

அடுத்து 'மூளைக்கு ஓய்வு தேவை' என்ற ஸ்கிட்'. ஒரு சிறு சிந்தனையை வைத்து பின்னப்பட்டது. பு. ந. கண்ணன் சாதுர்யமாக, எழுதி இருக்கிறார். தமிழில் கவிதையில் சோதனை என்றாலே பதறுகிறவர்களைப் போல மேற்கே இந்த முயற்சி ஆரம்பமான போதும் இருந்திருக்கிறார்கள். அதனால் சோதனைக்காரர்கள் தாங்களே கருத்துக்களை வெளியிட்டுச் சொல்ல வேண்டி இருந்தது. அந்த கருத்துக்கள் நமக்கு இப்போதும் உதவும். அந்த கருத்துக்கள் 'லகு கவிதை' என்ற தலைப்பில் தரப்பட்டிருக்கின்றன. இன்னும் பி. ஆர் ராஜம் அய்யரைப் பற்றியும், எழுத்தாளர் சங்கம் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் சேர்ந்து எழுத்துக்கு ஒரு புது தொனி ஏறி இருப்பதாக நினைக்கிறோம். நாங்கள் நினைப்பது அரைக் கல்யாணம் ஆனமாதிரிதானே. உங்கள் நினைப்பைப் பொறுத்தல்லவா இருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறோம். எழுத்து முதல் ஏட்டில் இலக்கிய அபிப்ராயம் சம்பந்தமாக 'மாறுபட்ட கருத்துக்களுக்கு எழுத்து களமாக அமையும்' என்று எழுதி இருந்தோம். அந்த வாக்குக்கு ஏற்பவே இதுவரையும் எழுத்து செயல்பட்டு வந்திருக்கிறது. இனியும் செயல்படும். ஆனால் சமீபத்தில் எழுத்துக்கு வந்த சில கட்டுரைகளை எழுத்துவில் போட முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாகவே இந்த விளக்கம். எழுத்து முதல் ஏட்டில் மாறுபட்ட கருத்து என்பது பற்றி குறிப்பிட்டிருந்தோம்:

'கலைகளுக்கும் சித்தாந்தங்களுக்கும் உள்ள உறவு மறுக்க முடியாதது. அது எந்த அளவுக்கு இருக்கும் என்பதைப் பொறுத்துத்தான் வாதப் பிரதிவாதங்கள் நடைபெறுகின்றன. கலை உருவங்களை ரசித்து கோட்பாடு பற்றிய வித்யாசங்களை போக்கிக் கொள்ளக்கூடும். கோட்பாடுகளை எடுத்துக்கொண்டு கலை உருவத்தை விளக்கி ஆதாரம் காட்டி கலை உருவத்தின் மதிப்பை அறியச் செய்ய முடியும். கலைகள் பல்வேறு மாறுபட்ட சித்தாந்தங்களுக்கு களமாக அமைந்துள்ளன என்பது இன்று நாம் பார்க்கிற விஷயம். அதை நினைவிலிருந்து ஒதுக்கிவிட்டு நாம் ஒரு இலக்கிய நூலை அணுக முடியாது. ஆனால் அவ்விதம் பார்ப்பதில் சில எச்சரிக்கைகளை மனதில் கொள்ளவும் தவறக் கூடாது. எனவே எழுத்து இலக்கியக் கோட்பாடுகள் தத்துவக் கோட்பாடுகள் சம்பந்தமாக திறந்த கதவாகத்தான் இருக்கும். கருத்துப் பரிமாறுதல்களின் விளைவாகத்தான் இலக்கியப் படைப்பும் ரசனையும் ஏற்பட முடியும் என்ற நம்பிக்கையை எழுத்து தன் முன் வைத்துக் கொண்டுள்ளது.'

தெளிவாகவே சொல்லி இருக்கிறோம். ஆனால் வரும் சில மாறுபட்ட கருத்து கட்டுரைகள் நாம் மேலே குறிப்பிட்டதுக்கு புறம்பானதாக இருக்கின்றன. உதாரணமாக, புதுக்கவிதைக்காரர்கள் இப்படி எழுதக் கூடாது. ஆய்வு விமர்சனமே தேவையில்லை என்ற கருத்துக் கட்டுரைகள். மாறுபட்ட கருத்து என்கிறபோது ஒரு படைப்பை சித்தாந்த ரீதியாக ஆராயும் எந்த தனியொரு விமர்சனப் பார்வையைத்தான் குறிப்பிட்டோம். ஒரு முறை வழிப் பார்வை குறிப்பிடப்பட்டதே தவிர, ஒரு குறிப்பிட்ட பார்வையையே ஒதுக்கிவிட வேண்டும் என்ற யோசனைக்கே இடம் தருவதுக்கு இல்லை. ஆய்வு விமர்சனத்தை ஏற்றுக் கொண்டு ஒருவரது ஆய்வு முறையில் காணும் குறையை, மாறுபாட்டை எடுத்துக் காட்டலாம். அதே போல புதுக் கவிதைகளை தனியொரு சித்தாந்தப் பார்வையில் பார்த்து திருப்தி தருதல், தராமையை, சத்தை, சத்தின்மையை எடுத்துக் காட்டலாம். விமர்சகனுக்கு தன் சித்தாந்தம் பெரிசு போல் கவிக்கு அவன் சித்தாந்தம் பெரிசு. இப்படி எழுதாதே இப்படி எழுது என்று ஆணையிடுவதோ. அல்லது வேண்டுகோள் விடுவதோ மாறுபட்ட கருத்தை சொல்வது ஆகாது. கருத்துப் பரிமாறிதலும் ஆகாது. படைப்பாளிக்கும் விமர்சகனுக்கும் அவன் வழியை விட்டுவிட்டு அவன் செய்திருப்பதை நாம் ஆராய வேண்டும். அடிப்படைகளையே கேள்வி கேட்டு, தகர்க்க விரும்பும் கருத்துக்களை, கருத்து வேற்றுமை, மாறுபட்ட கருத்துக்கள் என்று மதித்து இடம் கொடுக்காது எழுத்து. அந்த மாதிரி கட்டுரைகள் ஆக்கபூர்வமானவை இல்லை. இதுக்கெல்லாம் மேல் எழுந்த சத்தான கருத்துக்களை பரிமாறிக் கொள்ளத்தான் எழுத்து இடம் கொடுக்கும். அந்த அடிப்படையில் தான் இலக்கிய கோட்பாடுகள், தத்துவ கோட்பாடுகள் சம்பந்தமாக திறந்த கதவாக இருக்கும் எழுத்து இனியும்.

தமிழ் எழுத்தாளர் சங்க
பதினைலாவது மகாநாடு

சடங்குச் செயல்முறை

சென்ற டிசம்பர் 3, 4 தேதிகளில் சென்னை, தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பதினைலாவது மகாநாடு சிறப்பாக நடைபெற்றது. கவர்னர், முதலமைச்சர் போன்ற பிரமுகர்கள் துவக்கி வைத்தல், சம்பிரதாயமான வரவேற்புரை, மேலோட்டமான தலைமையுரை, தமிழில் பெருந் தொண்டாற்றியவர்களுக்கு கேடயங்கள் வழங்குதல், தமிழ் இலக்கியங்களை பிறமொழிகளில் அறிமுகப்படுத்தியவர்களுக்கு பதக்கம் வழங்குதல் ஒரு கருத்தரங்கு, சிறப்புரைகள், நடுவில் சாப்பாடு, எழுத்தாளர் அறிமுகம் இப்படியான ஒரு திட்டவட்டமான நிகழ்ச்சி நிரல்.

இவைகள் எல்லாம் வேண்டாம் என்று நாம் சொல்ல வரவில்லை. ஆனல் இவைகளோடு நின்று விட்டால் போதுமா ஒரு எழுத்தாள வர்க்கத்துக்கு, எழுத்து வளர்த்துக்கு என்பது தான் கேள்வி. பதினைலு ஆண்டுகளாக எழுத்தாளர் சங்கம் அலுப்புச் சலிப்பு இல்லாமல் கடைப்பிடிக்கும் ஒரு செயல்முறை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு என்ன செய்திருக்கிறது என்று ஒரு கணம் நின்று யாராவது நினைத்துப் பார்த்திருக்கிறார்களா? ஒரு ஆண்டுக்கான நிர்வாகிகளும் சரி, உறுப்பினர்களும் சரி கொஞ்சமும் அந்த வழியில் செயல்படும் நினைப்பு எழாமலே மரத்துப்போன உள்ளத்துடன் நடந்து கொள்வதாகவேபடுகிறது. உலகத்தில் வேறெங்கும் ஒரு எழுத்தாளர் சங்கமோ, மகாநாடோ இப்படி நடப்பதை பார்க்கவே முடியாது

படைப்பாளர் பிரச்னைகள்

படைப்பாளர்களுக்கு எவ்வளவு பிரச்னைகள் இருக்கின்றன! 'எழுத்தாளர்களிடம் எதிர்பார்ப்பது' என்று ஒரு பதிப்பாளரும் வானெலிக்காரரும் நாடகக்காரரும், திரைப்படக்காரரும் தாங்கள் விரும்புவதை தெரிவித்து உபதேசம் செய்கிறதை கேட்பதற்கு மேல் படைப்பாளிகளுக்கு பிரச்னையே இல்லையா? நம் இலக்கியம் வளர்ந்து இருக்கிற விதம், வருகிற விதம். வளர வேண்டிய விதம், அதன் நிலைபற்றி ஒப்பு நோக்குதல், காலத்துக்கு ஏற்ப படைப்பிலே ஏற்படும் திருப்பங்கள், செய்யப்பட்டுள்ள சாதனைகள் இவைகளை எல்லாம், ஆள் பார்க்காமல், அனுதாப, அபிமானம் பார்க்காமல் தரம் மதிப்பது, தரம் ஏற்றத்தக்க வழிவகைகளை சிந்திப்பது, கையாள்வது பிறமொழிகளுக்கு நம் இலக்கியத் தரமான எழுத்துக்கள் போகச் செய்ய திட்டமிடுவது, பிறமொழிகளின் தரமான இலக்கியங்கள் கிடைக்செய்வது போன்றவைகளை எல்லாம் கவனிக்க வேண்டாமா ஒரு எழுத்தாளர் சங்கம்? ஒரு சிறுகதை விழா, ஒரு நாவல் விழா ஆண்டுக்கொன்று நடத்தி விட்டால் வெட்டி முறித்து விட்டதாக திருப்தியா?

படைப்பாளர் சங்கம் தேவை.

ஆக, எழுத்தாளர் சங்கம் செயல்முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டிய ஒரு அவசியம் இருக்கிறது இப்போது. டிசம்பர் இசை விழா மகாநாடுகள்கூட இசை சம்பந்தமான ஆராய்ச்சி விவாதங்களை நடத்தும் நிபுணர்கள்குழுக்கூட்ட நிகழ்ச்சிகளை கையாளுகிறதை ஆண்டு தோறும் பார்க்கிறேமே. இசைக் கலைஞர்கள் சிந்திக்கிற அளவுக்குக் கூட படைப்பாளிகள் சிந்திக்கவில்லையே. ஏன்?

எழுத்தாளர் சங்கம் எழுத்துக்காக முதன்மையாக செயல்படுவதை மறந்து ஆளுக்காக செயல்படுவதுதான் காரணம். இந்த நிலையை மாற்றியாக முடியாதபடி சங்கம் மரத்துப் போய்விட்டது என்றால் படைப்பாளிகள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். சுத்த படைப்பாளிகளுக்காக மட்டுமே ஒரு தனிச் சங்கம் அமைத்துக் கொள்ள வேண்டிய காரியத்தைக் கூட செய்ய முயல வேண்டும் என்ற யோசனைகூட சொல்லத் தோன்றுகிறது.

நகைச்சுவை கருத்தரங்கா அது?

இது இருக்கட்டும். சம்பிரதாய சடங்குகள் விஷயம் போகட்டும் 'நகைச் சுவை கவியரங்கம்' ஒன்று நடந்தது. கோமதி சுவாமிநாதன் கவிதைதான் எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு நியாயம் செய்தது. மற்றதெல்லாம் நகைப்புக்கு இடமானதாகத் தான் இருந்தன. அடுத்து சிறப்புச் சொற்பொழிவு. 'நாவல் விழா' விமர்சன கட்டுரை புத்தகத்தை வெளியிட்டு நீதிபதி மா. அனந்தநாராயணன் பேச்சு, அ. ச. ஞானசம்பந்தம், எஸ். ராமகிருஷ்ணன் சொற்பொழிவுகள் நடந்தன. மூன்றும் குறிப்பிடத்தக்கதாக இருந்தன பேசிய மட்டுக்கு. ஆனல் அவர்கள் எதை சொல்ல நினைத்து சொற்பொழிவாற்ற வந்தார்களோ அது நிறைவேறியதா? நமக்கு சந்தேகம் தான். ஏன்?

தடம்மாறச் செய்த வரவேற்புரை

காரணம் அந்த நிகழ்ச்சிக்கு வரவேற்புப் பேச்சாளராக இருந்த எம். அப்துல் வஹாப் தான். வரவேற்பு உரைக்கு ஒரு முறை, வரையறை உண்டு. ஆனல் வரவேற்றவர் விமர்சகனுக்கு சூடுகொடுத்து அதோடு பிறமொழி படைப்பாளிகள் பெயரை எல்லாம் இழுக்கக் கூடாது என்றெல்லாம் ஒரு சொற்பொழிவே நிகழ்த்திவிட்டார். எனவே தலைவரும், சொற்பொழிவாளர்களும் அந்த பேச்சு கிளப்பிய பிரச்னைகளுக்கு பதில் சொல்ல ஏற்பட்டு விட்டது. தடம் தவறிப் போன பேச்சுகளாக இருந்தாலும் கவனிக்கத் தக்க சில நல்ல கருத்துக்கள் கொண்டிருந்தன.

ஆண்டை ஓட்டுவது போதாது

ஏதோ சென்ற ஆண்டை ஓட்டியாகிவிட்டது, இந்த ஆண்டையும் தள்ளிவிடலாம் என்று நினைக்காமல் சங்கம் இந்த ஆண்டில் செயல்படுமா? புது ஆண்டுக்கு அகிலன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவருடைய பொறுப்பு நாட்களிலாவது சங்கத்தில் நாம் நல்ல மாறுதல்களை எதிர்பார்க்கலாமா?

சிறுகதாசிரியர் மஞ்சேரி ஈஸ்வரன்

ஐம்பத்தாருவது வயதில் திடீர் மரணம் அடைந்துவிட்டார் மஞ்சேரி ஈஸ்வரன். நல்ல சிறுகதைகள் எழுதிய ஒரு முதல் தர படைப்பாளியை நாம் இழந்து வீட்டோம் ஈஸ்வரன் இங்கிலீஷில் தான் கதைகள் எழுதினார். மலையாளத்தை சேர்ந்த தமிழராளுலும் தமிழ் எழுத வராது. எனவே ஈஸ்வரனின் நெருங்கிய நண்பரான தி. ஜ. ரங்கநாதன் அவர் கதைகளின் இலக்கியத் தரத்தை கணித்து தமிழுக்கு தர வேண்டியவை என உணர்ந்து பல கதைகளை மொழிபெயர்த்து ஈஸ்வரனை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

ஈஸ்வரன் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமானது அவரது கதை 'டிராம் வண்டிக்காரன்' மூலம். 1930-க்கள் சிறுகதை பூக்க ஆரம்பித்த காலம் 'சுதந்திரச் சங்கு' வாரப் பத்திரிகை வந்துகொண்டிருந்தது. அதன் நாலாவது ஏட்டில் (15-12-33) இந்த கதை வெளிவந்தது. அப்போது அபூர்வமாக வெளிவந்து கொண்டிருந்தது நல்ல சிறுகதைகள். இந்த கதை புதுசாக இருந்தது வாசகர்க்ள் மனதை கவர்ந்தது. நல்ல இங்கிலீஷ் அறிவு வாய்ந்திருந்த ஈஸ்வரன் சிறுகதையின் ல்ட்சணங்களை எவ்வளவு மனதில் வாங்கி இருந்தார், அசட்டுத்தனமாக எழுதாமல், கலைத்தன்மை குன்றுமல் எப்படி எழுதி இருந்தார் என்பதுக்கு அவரது இந்த ஆரம்ப கால கதைகளில் ஒன்றே சரியான உதாரணம் ஆகும்.

அப்போது, பிரபலமாக இருந்த 'திருவேணி' இங்கிலீஷ் பத்திரிகையில் எழுதிக் கொண்டிருந்தார். பிறகு 'ஷார்ட் ஸ்டோரி' என்று இங்கிலீஷ் சிறுகதைப் பத்திரிகை நடத்தினார். அதன் பின் காஸா சுப்பாராவ் நடத்திய இங்கிலீஷ் 'சுதந்திரா' பத்திரிகையில் கதைகள் எழுதி வந்தார். அவருடைய கதைத் தொகுப்பு இங்கிலீஷில் வெளிவந்திருக்கிறது. சென்ற சில ஆண்டுகளாக டில்லியில் நேஷனல் புக் டிரஸ்ட்'டில் பொறுப்பான பதவி வகித்து வந்தார். பிரம்மசாரியாக அதிக காலம் இருந்தவர். நாள் கழித்தே மணம் செய்து கொண்டார். ஈஸ்வரன் நன்ருக பழகுவார். ஆர்வத்தோடு இலக்கிய விஷயங்களை தெருவில் சந்தித்தால் கூட நின்று பேசுவார்.

இங்கிலீஷிலும் தமிழிலும் வெளிவந்துள்ள அவரது கதைகள் எல்லாம் புத்தக ரூபத்தில் வெளியிடப்பட வேண்டும். அப்போது அவர் சேர்த்த வளம் நமக்குத் தெரியவரும். நல்ல படைப்பாளிகள் இருக்கிறபோது அவர்களையும் தெரிந்து கொள்ளாமல், அவர்கள் படைப்புகளையும் சரியாக மதிக்காமல் இருக்கிற நிலைதான் இன்னும். திடீரென்று ஒருநாள் அவன் மறைந்து விட்டால் துக்கநாள் கொண்டாடுவதும் பிறகு ஞாபகம் இருக்கும் வரை நினைவு நாள் கொண்டாடுவதும் இப்போது நமக்கு பழக்கமாகி விட்ட சடங்கு முறைகள். அதிலேயே அடைகிற திருப்தி; அஞ்சலி செலுத்தும் பக்தி வெளிக்காட்டு; அல்லது வீர வழிபாடு இது மாறி, படைப்பாளியின் படைப்புகளை ஒவ்வொருவரும் படித்து அவன் வாழ் நாளிலே அதை மதிப்பிட்டு அவனையும் மதித்துப் பாராட்டுகிற நாள் விரைவில் வரும் என்ற நம்பிக்கையை ஈஸ்வரனைப் ப்ற்றி குறிப்பிடுகிற இந்த சந்தர்ப்பத்தில் எழுத்து காட்டிக் கொள்கிறது.

த. வா. பேரவை

சில மாதங்களுக்கு முன் விமர்சனம் சம்பந்தமாக ஒரு கருத்தரங்கை சிறப்பாக நடத்திய மதுரை தமிழ்நாடு வாசகர் பேரவை இன்னொரு பெரிய காரியத்தை செயல் காட்டத் தொடங்கி விட்டது. சர்வகலாசாலைகளில் மானிபச் சொற்பொழிவுகள் (எண்டோமண்ட் லெக்சர்) நடத்தப்படுவது போல பேரவை சார்பில் பாரதி, வ. ரா., கல்கி, புதுமைப்பித்தன், திரு வி. க., டி. கே. சி., ஜீவா, வள்ளலார் ஆகியோர் நினைவில் ரூ. 150/- பெறுமான மானிபங்களை கொண்டு நடத்த திட்டமிட்டிருக்கிறார்கள். முதலாவதாக பாரதி நினைவுச் சொற்பொழிவு.' 'கவிதையில் ஒரு கிருத யுகம்' என்னும் தலைப்பில் நா பார்த்தசாரதி டிசம்பர் 18ல் கட்டுரை படித்தார்.

த. வா. பேரவையின் இந்த திட்டம் பாராட்டத்தக்கதாகும். தலைவர் சி. கனகசபாபதி. செயலாளர் ஏ. இப்ராஹீம் இருவரும் சில முன்னேடிக் காரியங்களை செய்யத் துணிந்திருப்பது மற்ற பல சங்கங்களுக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடியது. பேரவையின் மூன்ருவது குறிப்பிடத்தக்க காரியம் அவர்கள் ஆரம்பித்திருக்கும் 'புத்தகக் களஞ்சியம்' என்ற மும்மாத ஏடு. அவ்வப்போது வெளிவரும் புத்தகங்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கம் நல்லது. வரவேற்கிறோம்.

எழுத்துலக கூட்டங்கள்

சென்ற மாதத்தில் சென்னையிலும் மற்ற இடங்களிலும் எழுத்துலக கூட்டங்கள் நடந்திருக்கின்றன. சென்னை பட்டிமன்றம் 'பாரதிதாசனுக்குப் பின் கவிதை வளர்ந்திருக்கிறதா இல்லையா' என்ற தலைப்பில் கலாசாலை மாணவர் பேச்சுத் திறன் போட்டி நடத்தியது. ரசமாக இருந்தது. மாணவர்கள் படித்து விட்டுப் பேசினார்கள். புதுமையை வரவேற்ற பழமை அறிந்த சாமி சிதம்பரனார் பிறந்த நாளையும் பட்டிமன்றம் கொண்டாடியது. பாரதி பிறந்த நாளை செங்கல்பட்டு இலக்கிய வட்டம் நடத்தியது. சேலம் வாசகர் வட்டம் நாடகம் பற்றி கருத்தரங்கம் நடத்தி இருக்கிறது. அடுத்து 'கல்கி வெள்ளி விழாச் சிறுகதைகளைப் பற்றிய கருத்தரங்கு இருக்கும். இலங்கை எழுத்தாளர் கணேசலிங்கத்தை சந்திக்க 'தீபம்' காரியாலயத்தில் ஒரு கலந்து உரையாடல் கூட்டம் நடந்தது. சென்னை இலக்கிய சங்கம் தற்கால ஓவியம் பற்றி ஒரு சொற்பொழிவும் நான்கு தென்மொழி நாவல்கள் ஒவ்வொன்றும் பற்றி ஆய்வு, விமர்சனக் கூட்டமும் நடத்தியது. வாசகர்கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டதை இவை காட்டுகின்றன. 1967-ல் இந்த வளர்ச்சி தொகையிலும் தரத்திலும் பெருகும் என்று நம்புகிறோம். •

தமிழக
வேதாந்த
மேதை

முதல்
நடப்பியல்
நாவலாசிரியர்

பி. ஆர் ராஜம் அய்யர்

(25—1—1872 – 18-5—1898)

இந்து மதத்தின் மகிமையை உலகம் அறியச் செய்ய, சென்ற நூற்றுண்டின் இறுதியில் சுவாமி விவேகாநந்தர் அமெரிக்கா சென்றது ஒரு பெரிய நிகழ்ச்சி. அவர் போகுமுன் சென்னை வந்திருந்தார். உலகோர் விஷயங்களை தெரிந்து கொள்ள ஏதுவாக 'பிரம்மவாதின்' என்ற இங்கிலீஷ் மாதப் பத்திரிகையை சென்னையில் நடத்திவர ஏற்பாடு செய்தார். 1895-ல் அதன் ஏடு ஒன்றில் 'மனிதன், அவன் தாழ்வும் ஏற்றமும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியானது. இதை படித்த சென்னை அறிவாளிகள் இந்த கட்டுரையை எழுதியவர் யார் என்று தேடிச் சென்றார்கள். காரணம் சாதாரண புஸ்தக ஞானத்தால் எழுதும் பெரியோரது வியாசத்திற்கும் இந்த கட்டுரைக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது தான் அந்த கட்டுரையாளரை அவர்கள் சந்தித்தபோது பட்டை தீட்டப்படாத ஒரு வைரத்தை கண்டார்கள்.

அவரது கட்டுரையை படித்ததும் அவரை காண விரும்பிய, அப்போது சென்னையில் மிக அற்புதமாக நமது மத உண்மைகளை எல்லோரும் எளிதில் அறியும்படி வெளியிட்டுக் கொண்டிருந்த சாந்தானந்த சுவாமிகள் என்பவரிடம் அவரை அழைத்துச் சென்றார்கள். அதுக்கு முன் இரண்டு ஆண்டுகளாகவே தனக்கு ஒரு குருவை தேடிக் கொண்டிருந்த ஒரு சஞ்சல உள்ளம் முதல் சந்திப்பில் சுவாமிகளோடு நடத்திய விவாதத்தில் சுவாமிகள் ஒருவாறு வாசாஞானம் மாத்திரம் உடையவர் என்றும் பக்தியின் ரசத்தை முழுவதும் அறியாதவர் என்றும் கருதியது. அடுத்த சந்திப்பில், பக்தியில் உள்ள விசேஷப்பற்றால் ஞானத்தின் சிறப்பு அந்த சஞ்சல உள்ளத்திற்கு விளங்கவில்லை என்று கண்ட சுவாமிகள் அவரை ஏகாந்தத்தில் சந்தித்து ஞானனுபூதி விஷயங்களை உபதேசிக்க, அந்த சஞ்சல மனதுக்கு திருப்தியும் சமாதானமும் ஏற்பட்டு அவரையே குருவாக ஏற்றுக் கொண்டது இப்போது பட்டை தீட்டின வைரமாக ஆகிக் கொண்டிருந்தார் 'மனிதன், அவன் வாழ்வும் ஏற்றமும்' கட்டுரையின் ஆசிரியர்.

அவர் தான் பி.ஆர். ராஜம் அய்யர்—தமிழில் முதல் நடப்பியல் நாவலான 'கமலாம்பாள் சரித்திரம்' ஆசிரியர். ராஜம் அய்யரை ஒரு நாவலாசிரியராகத்தான் தமிழகம் தெரிந்து கொண்டிருக்கிறது. 'வேதாந்த சஞ்சாரம்' (ரேம்பிள்ஸ் இன் வேதாந்தா) என்ற சுமார் ஆயிரம் பக்கங்கள் கொண்ட நூலின் ஆசிரியர் என்பது தனிப்பட்ட பலருக்கு தெரியுமே தவிர பொதுஜனங்களுக்கு தெரியவராது. ராஜம் அய்யர் முதன்மையாக ஒரு வேதாந்தி. அடுத்தபடி தான் நாவலாசிரியர். தன் இருபத்தி ஆறுவது வயதில் மறைவதுக்கு முன்பே—வேதாந்தத்தை கரை கண்டு விட்டாரோ என்று கேட்பார்களே அந்த மாதிரி—வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டவர். சில ஆண்டுகளுக்கு முன் ராஜம் அய்யரின் சகோதரரின் புதல்வர் ஒருவர் ஜகத்குரு காஞ்சி காமகோடி சங்கராச்சாரியாரிடம் ராஜம் அய்யரின் உறவைப்பற்றி சொன்னபோது 'அப்படியா, அவர் பெரிய மகான்' என்று ராஜம் அய்யரைப் பற்றி ரொம்பவும் சிலாகித்துப் பேசினர்.

அத்தகைய வேதாந்த மேதை ராஜம் அய்யர் மறைந்து (1898 மே-18) இன்றேடு அறுபத்தி ஒன்பது ஆண்டுகள் ஆகிறது. அவரது பிறந்த தினம் 1872 ஜனவரி 25. இந்த ஆண்டு தொண்ணூற்றி ஐந்தாவது பிறந்த தினம் ஆகும். வேதாந்தம், இலக்கியம் இரண்டிலும் சென்ற நூற்றுண்டின் இறுதியில் ஒரு தலைசிறந்த மேதையாக விளங்கி இன்று வரை கூட தனிச் சிறப்புடன் விளங்கிக் கொண்டிருப்பவர் ராஜம் அய்யர்.

ராஜம் அய்யரின் வேதாந்த சஞ்சார கட்டுரைகளை படிக்கும்போது இந்த அல்ப ஆயுள் வாழ்வுக்குள் அறிவு இவ்வளவு ஏற்பட்ட ஒரு மூர்த்தியா அவர் என்று மூக்கின் மீது விரலை வைக்கச் செய்யும். அவ்வளவு தெளிவான மனதுடன்

முதிர்ந்த ஞானத்துடன் எழுதப்பட்டவை. ராஜம் அய்யர் இந்த கட்டுரைகளை புஸ்தகம் எழுதுவதுக்காக எழுதவில்லை. அமெரிக்காவிலிருந்து திரும்பிய விவேகாநந்தர் சென்னைக்கு வந்தபோது ராஜம் அய்யர் அவரை சந்தித்த சமயம் அவரது ஆழ்ந்த அறிவு, நிலைபெற்ற மன உருக்கம், ஞானம் இவைகளை தெரிந்து கொண்டார் விவேகாநந்தர். "பிரபுத்த பாரதா" என்று பெயர் கொண்ட ஒரு இங்கிலீஷ் மாதப் பத்திரிகையை பெயர் வைத்து ஆரம்பித்து வைத்தார். அதுக்கு ஆசிரியராக இருந்தவர் ராஜம் அய்யர். 1896 ஜூலையில் ஆரம்பித்து 1898 மே முடிய இரண்டு ஆண்டு காலத்தில் அவர் இந்த பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே 'வேதாந்த சஞ்சாரம்' என்ற இந்த புத்தகம்.

வேதாந்த சஞ்சார நூல் என்றால் ஏதோ எளிதில் ஜீரணிக்க முடியாத, புரியாத கருத்துகளை கரடுமுரடான நடையில் எழுதிய நூல் என்று நினைக்கத் தக்க நூல் இல்லை இது. 'பிரபுத்த பாரதா'வை ஆரம்பிக்குமுன் சுவாமி விவேகாநந்தர் கடிதம் எழுதினாராம்: 'இந்த பத்திரிகையை நடத்துவதில் அதிக கல்வித் திறனை காட்டி மொழி நடையை கடினமாகப் போக விடாதிருக்க வேண்டும். அப்படிச் செய்தால் உலகம் எங்கும் இது எளிதில் பரவும் என்பதில் சந்தேகமே இல்லை. எளிய நடையில் எழுதினால் தான் உங்களுக்கு சீக்கிரத்தில் எடுத்த காரியம் கூடும்... உங்கள் பத்திரிகையில், பொருள் எளிதில் விளங்காத நுட்பமான சாஸ்திர அல்லது வேதாந்த விஷயங்கள் அதிகமாக இருக்கக் கூடாது. எளிய கதைகள் மூலமாகவே வெளியிடுவதே உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும்' என்ற விவேகாநந்தரது யோசனையின்படியே இந்த பத்திரிகையை நடத்தினார் ராஜம் அய்யர். பத்திரிகையின் முதல் தலையங்கத்தில் இதை குறிப்பிட்டு விளக்கி இருக்கிறார்.

ராஜம் அய்யர் வேதாந்தம் பேசினதோடு நிற்கவில்லை. அவரது வாழ்வே ஒரு வேதாந்தியின் வாழ்வு. 'காதறுந்த ஊசியும் வாராது காண் கடைவழிக்கே' என்ற உபதேச மொழி பட்டினத்தடிகளை மாற்றியது போல, பி. எல். பரீக்ஷையில் முதல் தடவை தவறியது தான் அவர் மனோநிலையை மாற்றியது. மத விஷயங்களில் கவனம் செலுத்த ஆரம்பித்து பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு நிஷ்டை பழகும் அளவுக்கு ஞானியாகி விட்டார். தன் காலம் முழுவதையும் நிஷ்டையிலே கழித்தால் நல்லது என்று கருதி விட்ட அவரை 'பிரபுத்த பாரதா' ஆசிரிய பதவிதான் மனம் திருப்பியது. அவரே தலையங்கத்தில் எழுதி இருப்பது போல் 'நாங்கள் கேட்டு ஆனந்திக்கும் விஷயங்கள் உலகில் சிறுபாலருக்காவது ஆனந்தம் விளைவிக்கலாம் என்பதும் இவ் விஷயங்களை உள்ளவாறு எழுதி வெளியிடுவதால் நாங்கள் கேட்ட விஷயங்கள் எங்களுள் வேரூன்ற நாம் மேன்மை அடைவோம் என்பதுமே எங்கள் முக்கிய எண்ணங்களாக இருந்தன' என்று நினைப்பு அவருக்கு ஏற்பட்டதே இந்த திருப்பம். இந்த மனநிலை மாறுதல் ஏற்பட்டிராமல் வாழ்நாளை தியானத்திலும் யோகத்திலும் முழுக்க ஈடுபடுத்தி இருந்தால் அவரது வேதாந்த சஞ்சார கருத்துக்கள் நமக்கு கிடைத்திருக்காது. தன் பதினெட்டாவது வயதிலேயே வேதாந்தத்தில் ஈடுபட்டு இருபத்தியாறாவது வயதுக்குள் இவ்வளவு வேதாந்த ஞானம் காட்டிய ராஜம் அய்யர் வேதாந்தத்தில் மட்டும் இல்லை, இலக்கியத்திலும் பரந்த அறிவு பெற்றிருந்தார். அவரது முதல் கட்டுரையிலேயே தமிழ், இங்கிலீஷ் இலக்கியங்களில் அவருக்கு உள்ள பரிச்சயம், ரசனைசக்தி, இந்துமத, பிறமத தத்துவம், விஞ்ஞானம் பற்றிய அறிவு எவ்வளவு இருந்தது என்பதை காட்டுகிறது.

இங்கிலீஷில் எழுத ஆரம்பிக்கும்முன்பே ராஜம் அய்யர் தமிழில் எழுத ஆரம்பித்திருந்தார். ராஜம் அய்யருக்குபோதிய ஆதரவுகிடைக்காததால்அவர் இங்கிலீஷில் எழுதப்போய்விட்டார்என்று பாரதியார் எழுதி இருக்கிறார். இது சரியான காரணமாக இருக்க முடியாது. விவேகானந்தரோடு அறிமுகம், பிரபுத்த பாரதா முயற்சி இரண்டும் தந்த வாய்ப்புதான் இங்கிலீஷில் ராஜம் அய்யர் எழுதச் செய்திருக்குமே தவிர தமிழில் எழுதி பயன் பெறாமல் மனம்மாறி இங்கிலீஷில் எழுதினார் என்று சொல்ல முடியாது.

கமலாம்பாள் சரித்திரத்தை எழுதிய பின் ராஜம் அய்யர் அடுத்து 'சீதை' என்ற ஒரு கதையையும் தொடர்ச்சியாக எழுதி வந்ததாகத் தெரிகிறது. ஆனால் அந்த நாவல் பற்றிய தகவல் எதுவும் இதுவரை தெரியவில்லை.

1892-ல் கமலாம்பாள் சரித்திரம் எழுதுமுன், சென்னை கிறிஸ்துவ கல்லூரி சஞ்சிகையில், கணித வித்வான் பேராசிரியர் ரங்கநாத முதலியார் எழுதிய 'கச்சிக் கலம்பகம்' பற்றி குணா குண விமர்சனம் ஒன்று எழுதினார். இந்த விமர்சனக் கட்டுரை ரொம்ப சிறப்பானதாக கருதப்பட்டிருக்கிறது. அந்த கட்டுரையும் இதுவரை நமக்கு தெரிய வரவில்லை. ராஜம் அய்யரின் தமிழ்ப் புலமையும் அறிவின் நுட்பமும் இந்த கட்டுரை மூலம் பலருக்கு தெரிய வந்தது. இவரது கமலாம்பாள் சரித்திரம் பற்றி மனோன்மணியம் பி. சுந்தரம் பிள்ளை 'ஐரோப்பாவில் உள்ள எந்த முதல் தர பத்திரிகைக்கும் பெருமைத் தரக்கூடிய ஒரு நாவல் என்று குறிப்பிட்டிருக்கிறார். கம்பன், தாயுமானவர் முதல் ஷெல்லி, கீட்ஸ் வோட்ஸ்வொர்த் வரை அவர் 'கரைத்துக் குடித்தவர்' என்பதை அவரது எழுத்துக்கள் காட்டும்.

ஆக, சென்ற நூற்றாண்டு பெற்றெடுத்த ஒரு பாரத—தமிழக—வேதாந்த மேதை, இலக்கிய மேதை, ராஜம் அய்யர். தாகூர், விவேகாநந்தர், பாரதிபோல தமிழகம் மட்டும் இல்லை பாரதமே நூற்றாண்டு விழாக் கொண்டாட வேண்டிய மகா புருஷன் அவர். அவர் பிறந்த மாதமான ஜனவரியை எழுத்து தன் நினைவில் கொண்டு இந்த ஏட்டில் அவர் உருவப்படத்தை வெளியீட்டு அவரைப் பற்றியும் குறிப்பெழுதி இன்றய தலைமுறைக்கு அவரை நினைவூ படுத்துகிறது.

ஒரே குழப்பம்

வ. ரா.

வ. ரா. மனிதனுடன் பழகுவதில்லை, கொள்கைகளுடன் தான் பழகுகிறார் என்று ந பிச்சமூர்த்தி கூறி இருக்கிறார். வ ரா வின் எந்த படைப்பு உருவமும் இதை நிரூபிக்கும். தத்துவ தரிசிகளும் அரசியல் வாதிகளும் தான் மக்களுக்கு உபதேசம் செய்யத் தகுதி பெற்றவர்கள் என்பது இல்லை.

எழுத்தாளனும் மக்களுக்காக சிந்தித்து புத்தி சொல்லக் கூடியவன் என்பதை பாரதிக்கும் ஒரு படி முன் சென்று காட்டியவர் வ.ரா. தமிழன் சிந்திக்க வேண்டும், சிந்திக்க வேண்டும் என்று முட்டிக் கொண்டார் வ ரா. இந்த கட்டுரை அவரது ஆசை வெறியை காட்டுவது. இன்னமும் அந்த கட்டுரை எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. இந்த மாதிரி கட்டுரைகள் இன்று தமிழில் தேவை.

வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுபவன் பழுத்த முட்டாள். மூளையை வைத்துக்கொண்டு யோசிக்க மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறவனை என்ன பெயரிட்டு அழைப்பது என்று தெரியவில்லை. வாழ்க்கையை எப்படியோ தள்ளி காலம் கழித்து விடுவோம் என்று வாய் கூசாமல் பேசுகிறவர்களைக் கண்டால் எனக்கு ஆத்திரம் பொங்குகிறது.

வாழத் தெரியாமல் திண்டாடுவதெல்லாம் சிந்தனைக் குறைவால் தான். 'நாம் யோசனை செய்து என்ன பண்ண ? நாம் நினைக்கிறபடி ஏதாவது ஒன்று நடக்கிறதா என்று புலம்புகிறார்கள். இந்தப் புலம்பலுக்கு தேவையுமில்லை, அர்த்தமும் கிடையாது 'உலகத்தின் போக்கு என்ன ? எந்த மூல சக்திகள் தாண்டவமாடுகின்றன ? அவைகளின் விளைவுகள் என்ன?' என்று யோசனை செய்ய முடியாமல் போனால் பிறகு சிந்தனை எதற்காக ?

தான் நினைக்கிறபடி சுகமோ; சௌகரியமோ கிடைக்க வில்லையானால்' 'நான் ஏன் பிறந்தேன்' என்று பிலாக்கணம் பாடுகிறார்கள். குடியிருக்க வீடும் உண்ண போதிய உணவும், உடுத்த அழகான ஆடையும், சல்லாபம் செய்ய சினேகிதர்களும், பார்த்துப் பூரித்துப் போக காட்சிகளும், படிக்கப் படிக்கத் தெவிட்டாத நூல்களும்; ஏறிச் செல்லவாகன வசதிகளும், இன்பம் துய்க்க காதல் மனையாளும், அழுகையைக் கனவிலும் அறியாத குழந்தைகளும், கடன் என்று கேட்கத் தேவையில்லாத நிலைமையும், நோயில்லாத தீர்க்க ஆயுளும் இவைகள் கற்பனைகளோ என்று சந்தேகிக்கும்படியான புதிய புதிய அறிவுத் தோட்டங்களும் அபரிமிதமாக இம்மண்ணுலகில் இருப்பின், 'நான் ஏன் பிறந்தேன்' என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.

சங்கீதத்தில் ஆழ்ந்து கிடப்பார்கள்; தவறு சொல்லிவிட்டேன். சங்கீதத்தில் மிதந்து ஆனந்த சாகரத்தில் ஆழ்வார்கள். இப்பேர்ப்பட்ட உலகத்தை, ஆண்டவன் தான் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமா ? மனித முயற்சிக்கு ஆசி கூறுவதுதான் ஆண்டவனது வேலை. கடவுள் என்று ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்த காந்தி ஒரு விநாடி கூட வேலை செய்யாமல் இருந்ததில்லை. ஒவ்வொரு விஷயத்தையும் நுட்பமாக ஆராய்ச்சி செய்யாமல் இருந்ததில்லை. எல்லாம் வல்ல இறைவன் எதையும் செய்து முடித்து விடுவார் என்று சோம்பல் பேச்சு பேசுகிறவர்களுக்கு, வாழ்க்கையைப்பற்றி எவ்வித அக்கறையும் இருக்காது.

'சோம்பல் மிகக் கெடுதி பாப்பா' என்று குழந்தைகளுக்கு உபதேசம் செய்த பாரதியார் எவ்வளவு தீர்க்காலோசனையுடன் எதையும் தமிழர்களுக்கு எடுத்துரைத்தார் என்று நினைக்கையில் அளவில்லாத சந்தோஷம் உண்டாகிறது.

காந்தி எத்தனையோ அற்புதங்களை செய்திருக்கிறார். அவைகளில் சிகரம் போன்ற ஒன்றை குறிப்பிடுகிறேன். சோம்பலையும் வாழ்க்கைக்கு பொருத்தமில்லாத தர்க்கவாதத்தையும் இந்த நாட்டை விட்டு ஓட்டினது தான் – காந்தி தோற்றுவித்த அற்புதங்களில் சிகரம் போன்றது.

சோம்பல் செய்கிற விநோத சேஷ்டைகளை வர்ணிக்கவே முடியாது; அவைகள் வார்த்தைகளுக்கு அப்பால் பட்டவை.

சோம்பல் என்பது சைத்தானுடைய பிரதம மந்திரி, யமனுடைய கையாள்; மனிதவர்க்கத்தின் முற்போக்கை தடுத்து, இதம் கூறுவது போல அதை எதிர்த்துப் போராடும் மாபெரும் விரோதி. சகுனியைப் போன்ற சூட்சும புத்தியும் சதியாலோசனையும் கொண்ட நீசத்தன்மை படைத்தது சோம்பல்.

உன்னைக் காப்பாற்றுவேன் என்று சொல்வதைப் போல் நடித்து மனிதனை, படுகுழியில் தள்ளும் துரோகி சோம்பல் என்றால் அது மிகையாகாது. பயத்துக்கு தாயகம் சோம்பல்; அலட்சியத்துக்கு தங்குமிடம் சோம்பல்; பொறுப்பின்மைக்கு ஊற்றுக்கண் சோம்பல்; செயல் செய்யாமல் தடுப்பது சோம்பல்; அற்ப ஆயுளுக்கு அஸ்திவாரம் கோலுவது சோம்பல்.

இந்த சோம்பலை சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு மேலாக நம்மவர்கள் வளர்த்துக் கொண்டு வந்திருக்கிறது தெரியுமா? உதட்டிலிருக்கிற வாழைப்பழத்தை உள்ளே தள்ளுவதற்குக்கூட ஒரு ஆள் வேண்டி இருக்கிறது.

சிரத்தையும் பொறுப்பும் இல்லாமல் போனால் வாழ முடியாது, வாழத் தெரியாது. மூச்சை உள்ளே இழுத்து, வெளியே வாங்கி, பசித்தபோது சாப்பிட்டு களைத்தபோது தூங்கி கொட்டாவி விட்டுக் கொண்டிருப்பதற்கு, வாழ்க்கை என்ற பெயர் கொடுக்கலாமா?

உள்ளதைச் சொல்லப் போனால் நம்மவர்களின் வாழ்க்கை இவ்வளவில் சுருக்கமடைந்துவிட்டது; ஆகவே உயர்ந்த சரக்கு எது மட்டமான வஸ்து எது என்று மதிப்பிடும் வல்லமையை இழந்து நிற்கின்றோம்.

சுதந்திரத்தைக் காட்டிலும் ஜாதி பெரிது என்று பிடிவாதம் பிடிக்கும் அசட்டுத்தனத்துக்கு நோபல் பரிசு கொடுத்தாலும் போதாது. ஆராய்ச்சியால் ஏற்பட்ட அறிவைக் காட்டிலும், பரம்பரையாலும் வதந்தியாலும் உண்டான மூடபக்தி உயர்ந்தது என்று சொல்லும் அபத்தத்துக்கு, கோயில் கட்டி, கும்பிடத்தான் வேண்டும்.

நாலு பேர் சேர்ந்து பேசினால் சண்டை வரும் என்று கொண்டு, நாகரீக முறையில் பேசக் கற்றுக் கொள்வது பயனற்ற வேலை என்று வாதம் செய்யும் அடி முட்டாளுக்கு, என்ன தண்டனை விதித்தாலும் போதாது.

தேவர்களோ அசுரர்களோ செய்த சூழ்ச்சியாலும் காந்தியின் நிகரில்லாத சாகசத்தாலும் இந்தியா சுதந்திரம் பெற்றது. அது சென்ற ஆகஸ்ட் மாதத்திலிருந்து இந்த நாட்டில் எழும் கோஷங்களைக் கேட்டால் மனதுக்கு இனிப்பாகவே இல்லை.

வகுப்புப் போர், வர்க்கப் போர், தர்க்கப் போர், மதப்போர் என்று அர்த்தமில்லாமல் கூச்சல்போடுகிறார்கள். வகுப்புக்குள்ளே வகுப்பு. இது ஒரு விசித்திரம். வாழ்க்கை என்பது என்ன என்று கேட்டால், 'எங்களை ஆண்ட ஆங்கிலேயனைக் கேளுங்கள்' என்று சொல்வதைப் போல பெரும்பான்மையோர் நடந்து கொள்கிறார்கள். சிந்தனை செய்யும் சிலருக்கும் பெரும்பான்மையான மற்றவர்களுக்கும் தொடர்பு இல்லை.

நம்மவர்களுடைய வாழ்க்கையை கேவலப்படுத்தி வரும் மந்திரக்காரன், ஜோசியர், சன்னியாசி, பில்லி சூன்யம் வைப்பவன் கள்ளுக்கடைக்காரன், கருஞ்சந்தைப் பேர்வழி, வகுப்புவாதக்காரன் போன்றவர்களுக்குத்தான் இன்னும் நமது சமுதாய வாழ்க்கையில் செல்வாக்கு இருக்கிறது. இந்த நிலைமை மோசமானதல்லவா?

அப்படியே ஒரு சில சிந்தனையாளர்களுக்கு செல்வாக்கு இருந்தாலும், அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. ஒருவர் மற்றவருடைய காலை வாரிவிடும் சிறுமை குணம் தான் தாண்டவமாடுகிறது.

சமுதாயத்தை காப்பாற்றி, அதை முன்னேறச் செய்தால் அன்றி நாம் எல்லோரும் தனித்தனியாகவும் கூட்டமாகவும் அழிந்து போவோம் அல்லது அடிமைப்பட்டுப் போவோம் என்ற நினைப்பே இல்லாமல் தங்கள் தங்கள் வாழ்வுதான் பெரிது என்றும் தேசத்துரோகம் செய்தும் வாழலாம் என்று எண்ணக் கூடிய பதர்கள் இருக்கிறார்கள்.

இருபத்தி நான்கு மணி நேரமும் நாட்டைப் பற்றியும் நம்மவர்களின் வாழ்க்கையைப் பற்றியும் காந்தி சிந்தனை செய்தார். ஆகவே மகத்தான காரியங்களை சாதித்தார். காந்திக்கு தனிப் பெருமை இதனாலே என்று கூடச் சொல்லலாம்.

ஆகவே வாழ்க்கையைப் பற்றி யோசியுங்கள். குழப்பத்துக்கு ஆளாகாதீர்கள். சோம்பலை உதறித் தள்ளுங்கள். இது தான் இப்பொழுது தமிழர்களுக்கு சொல்லக் கூடியது.

விமர்சனம்

பாரதிக்கு பிறகு தமிழில் புதுக்கவிதை

சி. கனகசபாபதி

தற்கால உலக கவிதையின் போக்கை உணர்ந்த மூன்று நான்கு பேர்கள் முப்பதுக்களில் தமிழில் புதுக் கவிதை சோதனை செய்தபோது கிண்டல் செய்தவர்கள், பிறகு அலட்சியம் செய்திருந்தார்கள். 1959-ல் 'எழுத்து' மூலம் புதுக் கவிதை—தற்கால கவிதை—ஒரு இயக்கமாக ஆரம்பமாகி இன்று நூற்றுக் கணக்கான நல்ல கவிதைகள் வெளிவரவும், பரிகசித்தவர்களும், அலட்சியப்படுத்தியவர்களும் தங்கள் தலையை சொரிந்துகொண்டு இப்போது அதன்மீது சீறி விழ, தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள். சமீபத்தில் சென்னையில் நடந்த சில கூட்டங்களிலும், சில பத்திரிகை கட்டுரைகளிலும் இந்த போக்கு தெரிகிறது. புதுக் கவிதை இந்த அளவுக்கு அவர்களை பாதித்திருக்கிறதே !

புதுக் கவிதை என்பதுக்காக நாம் அவை அத்தனையையும் தலையில் வைத்துக் கொண்டாடி விடமாட்டோம். ஆனால் புதுசாக இருப்பதாலேயே அதை எதிர்க்கும் அர்த்தமற்ற போக்கையும் மதிக்க வேண்டியதில்லை. புதுக் கவிதைகள் என்ன சொல்கின்றன எப்படி சொல்கின்றன என்பதை விருப்பு வெறுப்பு இல்லாமல் பொறுமையுடன் பார்க்க முற்படும் ஒரு கவிதை வாசகனுக்குத்தான் சொர்க்க வாசல் கதவு திறக்கும்.

இத்தகைய வாசகர்களில், ரசிகர்களில் ஒருவர் இந்த கட்டுரையாளர் சி. கனகசபாபதி. தமிழை முறையாக படித்து எம். ஏ. பட்டம் பெற்று விருதுநகரில் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக இருக்கிறார். அவருக்கு புதுக் கவிதையில் ஈடுபாடு. எழுத்துவில் இந்த எட்டு ஆண்டு காலத்தில் நிறைய கட்டுரைகள் எழுதி இருக்கிறார். அவருடைய கட்டுரைகளை படித்தவர்களுக்கு அவர் ஏதோ மோகத்தாலோ, அபிமானத்தாலோ எழுதவில்லை என்பதும் சங்க கால கவிதைக்கும் வாரிசாக புதுக் கவிதை இருக்கக் கூடியது என்று ஆராய்ச்சி ரீதியாக எழுதி வருகிறார். அவர் மாதிரி இன்று கவிதை விமர்சனம் செய்பவர்கள் அபூர்வம்.

புதுக் கவிதை பற்றி வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் அவரது தொடர் கட்டுரையை இங்கே தருகிறோம்.

தற்காலக் கவிதை

தமிழில் தற்காலக் கவிதையில் ஒரு கிளைதான் இந்தப் புதுக் கவிதை. தற்காலக் கவிதை என்பது 1906 முதல் பாரதி தொடங்கி என்று காலக் கணக்கு இடலாம். பாரதிக்குப் படைப்புக் காலம் 12 ஆண்டுகள். ''எனது எழுத்துப் பிரதிகள் யாவும்—என்னுடைய பன்னிரண்டு வருஷ அஞ்ஞாத வாசத்தின் பலன்கள்—புதுவையிலிருந்து இங்கு வந்து சேர்ந்து விட்டன'' என்று பாரதி ஒரு கடிதத்தில் தெரிவித்ததாலும் இது புலப்படுகிறது.

தற்காலக் கவிதை பாரதி தொடங்கியே தோன்றிவருகிறது என்பது திட்டவட்டமான உண்மை. பாரதிக்கு முன்பு சிறு பிரபந்தங்களின் தோரணை ஜமீன்களிலும் மடங்களிலும் கொலுவிருந்தது. சிறு பிரபந்தங்களின் தோரணையிலிருந்து மரபு மாறி வந்தது பாரதியின் தற்காலத் தோரணை. சிறுபிரபந்தங்களின் மரபுத் தொடர்ச்சியையும் பாரதி கவிதையிடம் நாம் காண முடிகிறது. இருந்தாலும் சிறு பிரபந்தத் தோரணையிலிருந்து மிகப்பெரும் பங்கு உருவத்தாலும் உள்ளடக்கத்தாலும் மாறி வந்திருப்பதே பாரதியின் தற்காலக் கவிதை. காதல் பிரபந்தம் என்ற தோரணையிலிருந்து பாரதியின் குயிலும், திவ்யப் பிரபந்தத்திலிருந்து பாரதியின் கண்ணன் பாட்டும் உருவ உள்ளடக்கம் மாறி விளங்குகிறதை உதாரணத்துக்கு எடுத்துச் சொல்லலாம்.

சிறு பிரபந்தங்களிலும் இரண்டு வகைகளை நாம் பார்க்கலாம். ஒன்று இலக்கியத் துறைப் பிரபந்தம்; மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்

பிள்ளை, குமர குருபரர் மாம்பழக் கவிராயர், குணங்குடி மஸ்தான், சுப்ரதீபக் கவிராயர் போன்ற புலவர்கள் இலக்கியத்துறைப் பிரபந்தங் களைச் செய்தார்கள். மற்றொன்று நாடோடித் துறைப் பிரபந்தம். கோபால கிருஷ்ண பாரதி, அண்ணாமலை ரெட்டியார், திரிகூட ராசப்ப கவிராயர், வேலுத்தம்பி, வில்லியுப்ப பிள்ளை போன்ற கவிஞர்கள் நாடோடித்துறைப் பிரபந்தங்களைப் படைத்தார்கள். இந்த இரண்டு துறைகளில் பாரதி நாடோடித் துறையான பிரபந்த வகையை யாப்புருவங்களுக்கும் ஒலிநயங்களுக்கும் ஒரு மரபுத் தொடர்ச்சியில் ஒரு பகுதி பின்பற்றினார் என்று தெரிகிறது. இருந்தாலும் அவைகளைப் பாரதி பயன்படுத்திக் கொண்டிருப்பது தற்காலப் பாங்கு முத்திரையாக விழும்படி. இதனால் சிறு பிரபந்தத் தோரணையிலிருந்து மாறி வந்திருக்கிற தற்காலக் கவிஞர் பாரதி என்று தான் நாம் மதிப்பிடும்படி ஆகிறது.

புதுக்கவிதை ஒரு கிளை

இப்படியாக, பாரதி தொடங்கித் தோன்றியது தமிழில் தற்காலக் கவிதை. தற்காலக் கவிதையில் ஒரு கிளைதான் இந்தப் புதுக் கவிதை. இவ்விடம் நான் சொல்லி வருகிறதைத் திரும்பவும் தெளிவுக்காகக் கூறுகிறேன். சிறு பிரபந்தத் தோரணையில் ஒரு கிளை பாரதியின் தற்காலக் கவிதை அல்ல. பாரதி தொடங்கித் தோன்றிய தற்காலக் கவிதையில் ஒரு கிளை இன்று நாம் எடுத்துக் கொண்டிருக்கிற புதுக் கவிதை.

பாரதிதான் தமிழில் தற்காலக் கவிதையின் முன்னோடி. தொடர்ந்து வரும் தத்துவ—இலக்கிய அடிப்படைகள் என்று சொல்லி, பாரதியின் இடத்தைச் சரியாக மதிப்பிடாமல், இடத்தைப் பின்னுக்குக் கொண்டு வந்து போடுவது உண்மைக்கு மாறானது; பாரதியைத் தத்துவச் சிமிழுக்குள்—பக்திக் குடத்தில் அடைத்து விடுவது போலாகும்.

பாரதிக்கு இடம்

1906 முதல் 1917 வரை பாரதியின் தற்காலக் கவிதை படைப்பான காலம். 1921-லும் அதுக்குப்பின் சில ஆண்டுகள் வரைக்கும் பாரதியை இலக்கிய பூர்வமாக நமது தமிழகத்தின் எல்லா வர்க்கங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக மத்திய தரவர்க்கம் விழித்துக்கொண்டு ஒப்புக்கொள்ளவும், அதனுடன் தொழிலாளிவர்க்கமும் பாரதியைச் சேர்த்துக் கொண்டது. பாரதிதாசன் பாரதியின் தற்காலத் தோரணையில் பாடி வளரத் தொடங்கியதும் மத்திய தரவர்க்கம் எல்லாமே, தொழிலாளி வர்க்கம் முழுசுமே பாரதிக்குத் தமிழ் இலக்கியத்தில் நிரந்தர இடம் தேடிக் கொடுத்தன. இன்று விவசாயி வர்க்கத்தின் பட்டிதொட்டிகள் வரைக்கும் பாரதி தற்காலத் தமிழ்க் கவிஞராகி நன்றாகத் தெரியப்பட்டிருக்கிறார்.

1947-ல் நாட்டு விடுதலை. அது முதல் பாரதி இலக்கியத்தின் தாக்கம் முன்னைவிடவும் தமிழ் நிலத்தில் அழுந்தி 'வேர் பாய்ந்தது. 1959 வரைக்கும் பாரதி பெயரை வைத்து நல்ல அறுவடை.

1959-லீ நாட்டு விடுதலைக்குப் பிறகு 12 ஆண்டுகள், ஐந்தாண்டுத் திட்டம், பத்திரிகைகள் புத்தகப் பதிப்புகளின் வளர்ச்சி, வசனத்துறையில் சிறுகதை, நாவல், கட்டுரைகளின் பெருக்கம். தமிழ் மக்களிடம் 'வாசகத் திறன்' கூடியது; பாரதியைக் கவிஞர் என்றும் முன்னோடி என்றும் ஒப்புக்கொண்டு விட்ட காலம். பாரதியின் கவிதை மதிப்பைப் பற்றிச் சந்தேகம் அறவே இல்லை.

புதிய துறைகள்

நம்மிடையே குறைகளும் காணக்கூடிய மனப் போக்கும் ஓரளவு உருவாகி விட்டது. வ. ரா.வின் எழுத்தை வைத்து இதை நாம் நினைக்கலாம்.

நம்மிடையே உலகச் சார்பில் இலக்கிய வளர்ச்சி காணவேண்டும் என்ற மனத்தெளிவும் ஓரளவு பிறந்து விட்டது. டி. கே. சி.யின் எழுத்தை வைத்து இதை நாம் எண்ணிப் பார்க்கலாம்.

இலக்கியப் புதுத் துறைகளில் ஒவ்வொன்றாக ஒப்புக்கொள்ளப்பட்டது; சிறுகதைக்கு நாளடைவில் மற்றவைகளைவிட அமோக வரவேற்பு; இதுக்குக் காரணம் நம் மக்கள் கதை உலகச் சஞ்சாரம் ரொம்ப உடையவர்கள். நாவலுக்கு வந்த போது ஆரம்பத்தில் அவ்வளவாக வரவேற்பு கிடைக்கவில்லை. இதுக்குக் காரணம் நம்மிடத்தில் இருக்கிற ஈனத்தனங்களையும் கண்மூடித் தனங்களையும் அரங்கத்தில் இழுத்துவிட்டு விடுமே 'கொச்சையான நாவலானது' என்ற எண்ணமாக இருக்கலாம். கட்டுரைத் துறையைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். வரவர, நம் மக்களின் பழக்கத்தில் இருப்பது கட்டுரைக்கும் திறன்

வித்வான்கள் ஆசை !

இலக்கண வித்வான்கள் கூடத் தாம் கவி பாடாமல் இருந்தால் அது மதிப்புக் குறைவென்று நினைத்துக் கொள்கிறார்கள். —பாரதி

பாவம் ! அவர் இருந்து பார்க்க கொடுத்து வைக்கவில்லை ! இன்றைய வித்வான்களும் பேராசிரியர்களும், விரிஉரையாளர்களும்—கவிதை கிடக்கட்டும்—நாவல் சிறுகதை எழுதாமல் இருந்தால் தமக்கு என்ன மதிப்பு என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்களே !

ஆகையால், அதுவும் சேர்த்துக் கொள்ளப் பட்டது.

நம்மிடையே குறைகளும் காணக்கூடிய மனப் போக்கு ஓரளவு உருவாகிவிட்ட சூழ்நிலையில் நாடகத் துறை வளர்ச்சி அடையாதது ஏன் என்று சரியாகத் தெரியவில்லை. இன்னும் உண்மையாக, அதிகமாக நம்மிடையே குறைகளைக் காணக்கூடிய மனப் பக்குவம் கைகூடினால் தான் நாடகம் தமிழில் வளர முடியும் என்று எனக்குச் சொல்லத் தோன்றுகிறது. இன்று கதாகாலட்சேபங்கள் பெருங்கூட்டங்களைக் கூட்டி விடுகின்றன. ஆனால், வந்து கேட்பவர்களின் குறைகளை யெல்லாம் முழுப்பூசினியைச் சோற்றில் மறைப்பது போல் செய்கின்றன. பரிதாபமாக நாடகம் நலிவுற்றுக் கிடக்கிறது தற்காலத் தமிழகத்தில்.

தர மதிப்பீடு

கவிதைக்கு வரவேற்பு பத்திரிகைகளிலும் வெளி அரங்குகளிலும் வானொலி அரங்குகளிலும் விழாக் காலங்களிலும் நாளடைவில் அதிகப் பட்டது. 1959-லும் பாரதி வாழ்ந்திருந்தால் 77 வயது முதிய கவிஞராக இருந்திருப்பார்; தம்முடன் தொடங்கித் தோன்றிய தற்காலக் கவிதைக்குத் தமிழ் மக்களிடம் கிடைத்துவிட்ட ஆதரவைக் கண்டு ஆச்சரியத்தால் பூரித்திருப்பார்.

இவ்வாறு சிறுகதையும் நாவலும் கட்டுரையும் தற்காலக் கவிதையும் ஆதரவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சூழ்நிலையில், உருவ அமைதியின் மேல் ஒரு நனவுநிலை உண்டானது; அதுவே தமிழகத்தில் வரவரக் குறையத் தொடங்கியது. தரமற்ற இலக்கியப் போக்கு, பிரசாரப் போக்கு, பத்திரிகைப் பொழுது போக்கு, நீதி அறிவுறுத்தல் போக்கு முதலியவை தலையெடுத்தன. சிறுகதை நாவல்களில் வெறும் பாவனை நவிற்சிப் போக்கு கல்கிக்குப் பிறகும் ரொம்ப இடம் பிடித்தது. 1959 வாக்கில் நடைபெற்றதையே சொல்லி வருகிறேன். தற்காலத்தில் எழுதப்பட்டவைகளில் தரமதிப்பீடு செய்து பார்க்கவும் 1959 வரைக்கும் கூடத் தமிழகம் பெரிய முயற்சி எடுக்கவில்லை.

3

புற்றீசல் கவிதைகள்

கதை இலக்கியத்தின் படைப்புமுறை வெறும் பொழுது போக்கில் திரும்பிய சூழ்நிலையில் பாரதி படைத்து உருவாக்கிய தற்காலக் கவிதையின் பாதையிலும் ஒரு படைப்பு நிலைத் தேக்கம் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல் தோன்றியது. கதைப் பாட்டுக்களைக் கருத்து அறிவுறுத்தலுக்காக எழுதுவதும், குவட்டாவில் பூகம்பம் என்றால் புலம்பலுக்கும் பிலாக்கணத்துக்கும் பேனாவை எடுப்பதும், பிள்ளையோ பிள்ளை என்று கதறலையே கவிதை என்று சொல்லிக் கொள்வதும், பொங்கலுக்கும் தீபாவளிக்கும் வானொலிக்கும் கவி அரங்குக்கும் பிளேட்டுக் கவிதைகளும் காக்காய்க் கவிதைகளும் பரிசுக் கவிதைகளும் மளமள வென்று ஈசலிட்டு வந்தன. (கேரளத்தின் தென்னைமர இளநீரையும் கேரளத்துக் கட்டழகியின் கும்பமுலையையும் வர்ணித்த வக்கரிப்பும், ஜலதோஷ வெண்பா பாடிய 'சிக்கிரி'ப்பும் இன்று வரைக்கும் கூட நாம் காண்கிற காட்சிதான்.) ரொம்ப பலரிடம் தற்காலக் கவிதையில் பாரதிக்குப் பிறகு 'அதீதப் புனைவியல் அழகுப் போக்கு' வெள்ளம் எடுத்துப் பாய்ந்ததை இன்னும் பாய்கிறதை நாம் அறிய வேண்டும். இதனால் வாழ்வின் நிகழ்நிமிடம் மறக்கடிக்கப்படுகிறது; வாழ்வின் கொதி உலை கேலிக்கு உரியதாக்கப்படுகிறது; நடப்பு வாழ்வு புறக்கணிப்பாகிறது. பாரதிக்குப் பிந்திய தற்காலக் கவிதைகளில் ரொம்ப கொஞ்சம் நடப்பியல் பொருந்தியிருக்கலாம்.

அதீதப் புனைவியல்

பாரதி வழிக் கவிஞர்கள் பலரின் அதீதப் புனைவியல் அழகுப் போக்கை நாம் நன்றாக விளங்கிக் கொள்ள ஒரு சில உதாரணங்களைத் தருகிறேன்.

நினைவுக் காட்டில் சுற்றினாராம் ஒரு கவிஞர். நிலவின் அணைப்பில் அவர் அமரவில்லையாம். கனவுக் குமைப்பில் மோனத்தில் கண்ணை மூடித் தனிமையிலே இருந்தாராம். அப்போது இதயக் கூண்டில் ஒரு பறவை இரை தா வென்று கூப்பிடுதாம்.

காதலர் சந்திப்பைப் பாடுகிறார் வேறொரு கவிஞர். தாபத்தில் நிலாவைப் பார்த்தபடி அவள் அமர்ந்திருப்பாள் என்று எண்ணித் திரும்பினான் அவன். அங்கே லாபத்து முழுப் பணமாய் அவள் நின்றாளாம்; லச்சைக்கே மணம்போகி நின்றாளாம். அதன் பிறகு? காதலர் சந்திப்பை நாம் இங்கே சொல்ல வேண்டாம்.

இன்னொரு கவிஞரின் அதீதப் புனைவியலைப் பாருங்கள். பூமி என்ற காதலியுடன் வானம் என்ற காதலன் கலவி செய்கிறான். அவன் வாய் மென்ற தம்பலத்தைத் துப்புகிறான். அது 'சித்திர வானவில் ஆனதடா.'

சூரியனையும் தாமரையையும் வைத்து ஒரு கற்பனையைக் கேளுங்கள். சூரியன் எத்தனைதான் தூரத்தில் இருந்தாலும் எழிலோடு ஒளியாக வந்து தாமரையுடன் காதலை மேலும் வளர்த்து நிற்க ஆசைப்படுகிறான். அதற்கு என்ன செய்யலாம்? தாமரை தன் மேனி முழுசையும் காட்ட வேண்டுமாம். தாமரை மேனியை நீரில் மறைத்து முகத்தை மட்டும் காட்டி நித்தம் ஏய்க்கின்றாளாம் சூரியனை.

காதலர் இருவர் புதர்ச்செறிவில். காதலி விளையாட்டாக ஒரு புன்சிரிப்பை வீசினாள். அது தான் நிலாப் பிஞ்சாம்.

தந்தையின் மடியில் குழந்தை. குழந்தை முகத்துக்குப் பின்னால் நிலா உள்ளம் கொழிக்கச் செய்ய இயற்றிய கவிதை ஏடு. வானை முத்தம் இடுகின்ற மாமலை; மாலைபோல் அருவிகள் வீழ் வன. இப்படியே அருவிகளை வயிரத் தொங்கல் என்றும், அடர்கொடியைப் பச்சைப்பட்டு என் றும், குருவிகளைத் தங்கக் கட்டி என்றும் வர்ணிக் கும் அளவுக்கு இந்த அதீதப் புனைவியல் அழகுப் போக்கு பித்தேறிவிட்டது.

புனைவியல் அழகு ரொம்பு அளவு ஆசை நிறைவின் விளைவுதான். புனைவியல் அழகு உலக நடப்பிலிருந்து வேணுமென்றே தப்பிப்பு; நாட்டு விடுதலைக்குப்பிந்தி அதிலும் 1959-லும் வாழ்க்கை நிலைமைக்குப் பொருந்தவே பொருந்தாது.

புனைவியலை உதறிய கவிஞர்கள்

இந்தப் புனைவியல் அழகை எப்போதோ உத றித் தள்ளிவிட்டு நடப்பியலுக்கு உயர்ந்திருக் கிறார்கள் உலகக் கவிஞர்கள். உதாரணத்துக்கு டி. எஸ். இலியெட்டின் 'புருபிராக்' கவிதையை இங்கே பார்ப்போம். அதில் புருபிராக் கவலை யோடு பாடுகிறான் :

"நான் வெள்ளை பிளானல் கால்சட்டை
அணிந்து
கடற்கரையிலே நடப்பேன்.
நான் கடற்கன்னிகள் ஒருவர்க்கொருவர்
பாடிக்கொள்வார்கள் என்று கேள்விப்
பட்டிருக்கிறேன்.
நான் நினைக்கவில்லை அவர்கள் எனக்குப்
பாடிக் காட்டுவார்கள் என்று."

இதில் கவிதையின் பெண்டுலம் இலட்சியக் கற் பனையிலிருந்து நடப்புக்கு மாறி வந்திருப்பதை நாம் பார்க்கலாம். இலியெட்டின் இந்தக் கவிதை 1917-ல் வெளிவந்திருக்கிறது. நடப்புக்குக் கவிதை மாறிவர வேண்டுவதை டி. யூ. ஹ்யூம் ரொம்ப வலுவாக வற்புறுத்தினார். புனைவியல் தோரணையில் படைப்பாகி உள்ள எந்த நல்ல கவிதையைக்கூட வரவேற்க விரும்பவில்லை டி. யூ. ஹ்யூம். நாம் அவர் அளவுக்குக் கண்டனத்தில் இறங்க வேண்டாம் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் நமக்குத் தமிழில் பாரதியின் புதிய புனைவியல் தோரணையோடு தான் தற்காலக் கவிதை தோன்றியிருக்கிறது. டி. யூ. ஹ்யூமின் கணிப்பில் பாரதியின் குயில்கூட நிற்க முடியாமல் போகும்.

தமிழில் புதுக்கவிதைத் தோற்றம்

தற்காலக் கவிதையின் ஒரு கிளையாக, இலக் கியத்தின் படைப்புமுறை வெறும் பொழுது போக்கு அல்ல என்று ஆகும்படி, பாரதிக்குப் பிறகு தோன்றிவிட்ட அதீதப் புனைவியல் அழகுப் போக்குக்கு எதிரிடையாக, தமிழ் இலக்கியம் இலட்சிய வாதத்திலிருந்து நடப்பியலுக்குத் திரும்பவேணும் என்ற கருத்தோட்டத்தில், 1959-ல் தவிர்க்க முடியாத இயற்கையான தேவையில் ஏற்பட்டதுதான் ந. பிச்சமூர்த்தி யுடன் தொடங்கிய புதுக் கவிதை.

"சரித்திரம் வரலாறென்று
மண்வெட்டி குந்தாலத்தோடு
பிணக்குழி பறித்துப் பார்த்தால்
வாழ்வின் கொதிஉலைக்குப்
பருப்பாமா ?
பாபைரஸ் சுருளும்
பனைஓலைப் பழம்பழுப்பும்
சென்ற பெருமையும்
வழக்கொழிந்த பண்பாடும்,
இன்றைய வாழ்வுக்கு
வழிவந்து காட்டுமா ?
மண்வெட்டி வந்தால்
புழுதி எழும்.
தர்க்கப் பந்தலெழும்,
இன, மொழி, தேதிச் சுளுக்கு
நிகழ்நிமிஷப் பரியின் கழுத்தில்
சூழ்ந்து கொண்டிறுகிக் கொல்லும்..."

நடப்பியலுக்கு உயர்கிற கவிதை வரிகள் இவை. நிகழ் நிமிஷத்தைக் குதிரை என்றதும், இன, மொழி, தேதிகளை அந்தக் குதிரையின் கழுத் தில் சுளுக்கு என்றதும் நடப்புக்குரிய கற்பனை, மேலும் பாரதியின் தற்காலப் பாங்கு இதிலுள்ள சொற்களில் தெரிகிறது. இதில் புனைவியலில் அதீ தமோ, புனைவியலோகூட இல்லை. புதுக் கவிதை யில் புனைவியலுக்கு எதிரிடையாக நடப்பியல் தான் நாம் பார்க்கிற பொதுப் பாங்கு. ஆனால் ஒரு சில புதுக் கவிதைகளில் புனைவியலும் குறுக் கிடுகிறது. இது ஏன் என்று கேட்டு மறுக்கிற தைக் காட்டிலும், ஒரு சில புதுக் கவிதைகளில் வரக்கூடிய புனைவியல் அதீதமாகப் போகாமல் இருக்கிறதா என்று ஆய்ந்து பார்ப்பது நல்லது. டி. யூ. ஹ்யூமை வரிக்குவரி தழுவிக்கொள்வது தமிழில் தற்காலத்துக்கு முறையல்ல.

"கிணற்றில் விழுந்த நிலவைக் கீழிறங்கித்
தூக்கிவிடு
நனைந்த அவள் உடலை நழுவாமல் தூக்கிவிடு
மணக்கும் அவள் உடலை மணல்மீது
தோயவிடு
நடுக்கும் ஒளியுடலை நாணல்கொண்டு
போர்த்திவிடு..."

எஸ். வைத்தீஸ்வரன் எழுதியுள்ள 'கிணற் றில் விழுந்த நிலவு' என்னும் புதுக் கவிதையில் தொடங்கும்போது வருகின்றன இந்த வரிகள். இந்தக் கவிதை முழுவதிலும் நிலா ஒரு புனைவியல் குறியீடு; ஒழுக்கத்தில் தவறி விழுந்த பெண்ணைக் குறிக்கிறது. அவளைத் தடுத்தாட் கொள்ளச் சொல்லும் உத்தேசம் உள்ள அழகிய கவிதை இது என்பதை இதன் வாசகர்கள் நன்றாக உணர முடி யும். இதில் புனைவியல் அதீதமாகப் போய் விடாதது நாம் ரசனையில் காணுகிற உண்மை.

(தொடரும்)

அ
ரா
பி

ஜேம்ஸ் ஜாய்ஸ்

(வி. து. சீனிவாசன் மொழிபெயர்த்தது)

இன்று தமிழ் சிறுகதை வளம் பெருகி இருக்கிறது. 'குளத்தங்கரை அரசமரம்' முதல் சமீபத்திய கதை வரையில் சுமார் ஐம்பதாண்டு காலத்தில் ஆயிரக்கணக்கான கதைகளை படித்து இருக்கிற வாசகர்கள் நாம். ஆனால் இன்று வெளியிடும் புற்றீசல் கதைகளை படிக்கிற போது நாம் குறிப்பிடத்தக்க கதை ஒன்றிரண்டு ஒரு மாதத்தில் கிடைத்தாலே பெரிய திருப்தி. ஏன் இந்த நிலை ? வாசகர்களாகிய நாம் சிந்தித்துப் பார்த்தோமா ?

கால் நூற்றுண்டுக்கு முன்பு சிறுகதையில் சோதனை செய்து பார்த்தனர் ஒரு சில சிறு கதையாசிரியர்கள். இன்று சுவடு தேய்ந்த பாதையில் செல்லும் எழுத்தாளர் வெள்ளம்; எங்கள் தமிழ் இலக்கியத்துக்கு இணையாக உலகத்தில் எந்த இலக்கியமும் இல்லை. எங்கள் கதாசிரியர்கள் உலக எழுத்தாளர் பட்டியலில் இடம் பெறுபவர்கள், ஏன் அவர்களையும் மிஞ்சுபவர்கள் என்று பெருமை பேசும் வாய் நமக்கு. ஆனால், உலக இலக்கியத்தில் சிறுகதை வளம் பெருகியிருப்பது, அதில் அவ்வப்போது செய்யப்பட்டிருக்கும் புதுப்புது சோதனைகள், சாதனைகள் அறிய மாட்டோம். அவைகளோடு ஒப்பிட்டு தமிழ் சிறுகதையின் தரத்தை மதிப்பதைக் காண முகம் சுளிப்போம். ஒப்பிட்டுப் பார்த்தால்தான் தெரியும் நாம் எங்கே இருக்கிறோம் என்று.

இந்த நினைப்போடு தான் இங்கே ஒரு மொழிபெயர்ப்பு கதை தரப்படுகிறது. இந்த கதையை எழுதியிருக்கும் ஜேம்ஸ் ஜாய்ஸ் நனவோடை உத்தியை சிறப்பாக கையாண்டு இரண்டு நாவல்கள் எழுதியவர். அவருடைய 'டப்ளினர்ஸ்' சிறுகதை தொகுதியிலிருந்து இந்த கதை. சம்பவக் கதைகளிலிருந்து மாறுபட்டு முன்னேற்றமான ஒரு திருப்பம் மனோ தத்துவக் கதைகள். அப்படி மனவோட்டத்தை வெளியிடுவதிலும் அடிமனதில், பிரக்ஞை நிலையிலும் கூட எழும் நினைப்பை வெளியிடும் ஒரு உத்தியான நனவோடை உத்திக்கு ஒரு ஆரம்பத்தை இங்கே காணலாம். கதையின் தூல சம்பவத்தை பின் தள்ளி விட்டு மனப் பதிவுப் போக்காக கதையை உருவாக்கி நாம் படித்து முடித்ததும் கதையின் தூல வடிவம் நம் மனதில் உருவாகும்படியாக ஒரு முயற்சி இந்த விதமான கதை அமைப்பு.

அராபி ஜாய்ஸின் சிறந்த கதைகளில் ஒன்று. இதை படிக்கிறபோது ஒன்றன்பின் ஒன்றாக வரும் வரிகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று உறவுகொண்டு கதை பின்னுகின்றன என்பதை பார்க்கலாம். எழுதப்பட்ட விஷயத்தை விட எழுதப்படும் விதமே கலையில் முதல் இடம். அந்த விதம் இங்கே புதுமையானது வேகமாக வரிகளை ஓட்டிவிடாமல் நிதானித்து படிக்கிற போது தான் படைப்புக்கும் நமக்கும் உறவு ஏற்படும். இந்த மாதிரி எழுத முடிகிற கைகள் நமக்கு இன்று தேவை.

வடக்கு ரிச்மாண்ட் தெரு. ஒரு முனைத் தெருவாக இருந்ததால், கிருஸ்துவ சகோதரர்கள் பள்ளிக்கூடம் தன் மாணவர்களை வெளியில் அவிழ்த்துவிட்ட நேரத்தைத் தவிர மற்ற நேரத்தில் வெறிச்சோடி இருந்தது. குடியற்ற இரட்டை மாடி வீடொன்று தெருக் கோடியில் அண்டைவீடுகளிடமிருந்து தன்னை சுற்றிலும் சதுரமான தோட்டத்தால் பிரித்துக்கொண்டு நின்றது. அத் தெருவின் மற்றைய வீடுகள் தன்னுள் நல்ல குடிகளைக் கொண்ட உணர்விலோ என்னவோ, ஒன்றை

ஒன்று கலக்கமற்ற காவி முகத்தினுல் பார்த்துக் கொண்டன

எங்கள் வீட்டில் முன்பு குடியிருந்த மதகுரு, வீட்டின் பின்னறையில் இறந்து போஞர். காற்று, நீண்ட நாள் மூடியிருந்ததால் புழுங்கி எல்லா அறைகளிலும் தொங்கிக் கொண்டிருந்தது. சமயலறைக்கு அருகாமையில் இருந்த உக்கிராண அறையில் உபயோகமற்ற காகிதக் குவியல் குவிக்கப்பட்டிருந்தது. அதனிடையே வால்டர் ஸ்காட் எழுதிய ஆபட்டும், டிவோட் கம்யூனிகண்ட், விடாக்கின் நினைவுகளும் நைந்து ஏடுகள் சுருங்கிக் கிடக்க நான் கண்டேன். கடைசியில் சொன்ன புத்தகத்தை அதன் ஏடுகள் பழுப்படைந்த காரணத்தால் நான் மிகவும் விரும்பினேன். புதர் மண்டிய வீட்டின் பின்புறத் தோட்டத்தின் நடுவே நின்ற ஆப்பிள் மரத்தின் அருகே இருந்த சில புதரடியில் முந்திய குடியின் துருப்பிடித்த சைக்கிள் பம்பொன்றை நான் கண்டேன். அவர் மிகவும் தாராள மனமுடைய மதகுருவாய் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் தன் உயிலில் சொத்துக்கள் அனைத்தையும் பல சங்கங்களுக்கும் தட்டு முட்டுச் சாமான்களைத் தன் சகோதரிக்கும் எழுதி வைத்திருந்தார்.

கூதிர் காலத்தின் குறுகிய பகல்கள் வந்தபோது, மதிய உணவை நாங்கள் நன்கு சாப்பிட்டு முடிக்கு முன்னரே மாலை கவிழ்ந்தது. தெருவில் நாங்கள் சந்தித்துக் கொள்ளும் பொழுது வீடுகள் கூம்பி நின்றன. எங்கள் தலைக்குமேல் இருந்த வான வெளியில் கணத்திற்குக் கணம் மாறும் நீல நிறத்தில் மங்கிய தெருவிளக்குகள் எட்டிப் பார்த்தன. குளிர் காற்று எங்களைக் கொட்டியதால் உடல் சூடேறும் வரை நாங்கள் விளையாடினேம். தெருவின் அமைதியில் எங்கள் கூச்சல் எதிரொலித்தது. எங்கள் விளையாட்டின் போக்கு வீடுகளின் பின்புறமிருந்த மண்படிந்த சந்துகளில் எங்களை இழுத்து வந்தது. அங்கே நாங்கள் குடிசைகளில் குடியிருந்த முரட்டு உயிரினங்களின் கவசத்தைத் துளைத்தும் பின் கதவுகளின் வழியாக தொங்கிய செடிகளின் இடையே எருக் குழிகளில் இருந்து கமழுகின்ற மணத்தை முகர்ந்தும் நாற்றம் மிகுந்து இருள் மண்டிய லாயத்தில் குதிரைக்காரன் குதிரையைத் துடைத்து அதன் முடியைக் கோதிக் கொண்டிருப்பதைக் கண்டும் அல்லது அவை கடிவாளத்தை அசைப்பதால் உண்டாகும் மணியோசையைக் கேட்டும் பொழுதைக் கழித்தோம். மீண்டும் தெருவை வந்தடையும்போது சமயலறை ஜன்னல் வழியே வரும் ஒளி தெருவை நிரப்பியிருக்கும். என் சித்தப்பா தெரு முனையில் திரும்புவதைக் கண்டால் பத்திரமாய் வீடு சேரும் வரை நாங்கள் இருளில் ஒண்டிக் கொள்வோம். அல்லது மாங்கனின் சகோதரி கதவருகே வந்து சகோதரனை தேனீருக்காக அழைக்கும்போது நாங்கள் இருளில் இருந்து அவளை மேலும் கீழுமாகக் கூர்ந்து பார்ப்பது வழக்கம். நாங்கள் அவள் அங்கேயே நிற்கிருளா அல்லது உள்ளே செல்கிருளா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். அவள் அப்படி அங்கேயே தங்கிவிட்டால் மறைவிடத்தை விட்டு மாங்கனின் இருப்பிடத்தை நோக்கி விதியில்லை யென்று நடப்போம். அவள் எங்களுக்காகக் காத்துக் கொண்டிருப்பாள். அவள் உருவம் பாதி திறந்த கதவொளியில் தெளிவாகத் தெரியும். அவள் சகோதரன் தான் பணிவதற்கு முன் அவளைச் சீண்டுவது வழக்கம். நான் படிகளிலிருந்து அவளைப் பார்த்துக் கொண்டிருப்பேன். அவள் தன் உடலை அசைக்கும்போது அவளாடை அசையும், அவள் கேசத்தில் இருந்த நாடா இப்புறமும் அப்புறமும் அசையும்.

ஒவ்வொரு காலையும் வீட்டின் முன் நடையில் கிடந்து அவள் கதவை நோக்கிக் கொண்டிருப்பேன். திரையை ஓரங்குல இடைவெளியளவு என்னைக் கண்டு விடக் கூடாது என்பதற்காக இழுத்து விட்டிருப்பேன். அவள் நிலைப்படியைத் தாண்டி வரும்போது என் இதயம் எம்பிக் குதிக்கும். நான் ஹாலுக்கு ஓடி என் புத்தகங்களை வெடுக்கென எடுத்து அவளைப் பின் தொடர்வேன். அவளுடைய பழுப்பு உருவத்தை சதா கண்ணில் பதித்து, எங்கு எங்கள் வழிகள் பிரிகிறதோ அவ்விடம் வந்தவுடன் என் நடையைத் துரிதப்படுத்தி அவளைக் கடந்து செல்வேன். இது ஒவ்வொரு காலையும் விடாது நடந்தது சில பொதுவான உரையாடல்களைத் தவிர்த்து நான் அவளிடம் பேசியதில்லை. எனினும், அவள் பெயர் என் முட்டாள் ரத்தத்தை ஈர்த்தது.

இனிய உணர்ச்சிகளுக்குச் சற்றும் பொறுத்தமில்லா இடங்களில்கூட அவள் உருவம் என்னைத் தொடர்ந்து வந்தது. சனிக்கிழமை மாலைகளில் என் சித்தி மார்க்கெட்டுக்குச் செல்லும்போது சில சாமான்களை எடுத்துக் கொண்டு வர நானும் செல்ல வேண்டியிருக்கும். கூட்டம் நிறைந்த தெருக்களிடையே குடிகாரர்களால் மோதப்பட்டும், பேரம் பேசும் பெண்களை விலக்கிக் கொண்டும், தொழிலாளர்கள் வசவினையும் கடையோரம் கீச்சுக்குரலிடும் கடைப் பையன்களின் ஓசையிடையும். ஓ டோனேவான் ரோசாவின் 'அனைவரும் வாருங்கள்' என்ற பாட்டையோ அல்லது நாட்டின் வருமையையோ பாட்டிசைக்கும் தெருப் பாடகர்கள் இடையேயும் நுழைந்து செல்வோம். இந்த ஓசைகள் குவிந்து எனக்கு வாழ்வின் இதயத் துடிப்பாகப்பட்டது. என் கோப்பையை சூழுமி நிற்கும் எதிரிகளிடையே பத்திரமாகக் கொண்டு செல்வது போன்று நான் கற்பனை செய்து கொள்வேன். அவள் பெயர் சில கணங்களில் முளைத்து என் உதடுகளில் அசாதாரண பிரார்த்தனைகளையும் புகழ்மாலைகளையும் கொட்டும். அவை எனக்கே புரியாது. என் கண்கள் பலநேரம் கண்ணீர் மல்கியிருக்கும். (ஏனென்று என்னுல் சொல்ல முடியாது) சில நேரம் இதயத்திலிருந்து ஒருவித வெள்ளம் பொங்கி என் நெஞ்சில் வடியும். எதிர் காலத்தைப் பற்றி நான் சிறிதும் நினைத்ததில்லை. அவளிடம் எப்போதாவது பேசுவேனு மாட்டேனு என்பதைப் பற்றி எனக்கே தெரியாது. அப்படிப் பேசினுலும் எப்படி என் குழப்புமடைந்த அன்பை எடுத்து இயம்புவேனே? அவள் சொற்களும் அசைவுகளும் விரல்களாக என் உடலாகிய வீணையின் தம்பியில் நாதம் இழைத்தன.

ஒரு நாள் மாலை எந்தப் பின்னறையில் மத

குரு இறந்தாரோ; அங்கு சென்றேன். அது இருள் கவ்விய மழைக்கால மாலை. வீட்டில் எவ்வித சப்தமும் இல்லாமல் இருந்தது. உடைந்த ஒரு ஓட்டின் வழியாக விழுந்த மழைத் துளிகள் நிலத்தின் மீது மோதும் ஓசையை நான் கேட்டேன். அந்த அருமையான நீர்த்துளிகள் இடைவிடா ஊசிகளாய் நனைந்த தரையில் விளையாடிக் கொண்டிருந்தன. ஏதோ தூரத்து விளக்கு அல்லது விளக்கேற்றிய ஜன்னல் என் கீழே ஒளித்துக் கொண்டிருந்தது. சிறிதளவே பார்க்க முடிந்ததை நினைத்து நான் திருப்தி அடைந்தேன். எல்லாப் புலன்களும் திரைமூடி ஒடுங்க ஆசைப்பட்டன. அவற்றிடமிருந்து நழுவி ஓடுவது போன்ற ஓர் உணர்வு. என் இரு உள்ளங்கைகளையும் அவை நடுங்கும்வரை அழுத்திச் சேர்த்துக்கொண்டே 'ஓ அன்பே' எனப் பலமுறை முணு முணுத்தேன்.

முடிவாக எப்படியோ அவள் என்னிடம் பேசினாள். அவள் முதல் வார்த்தைகளை என்னைப் பார்த்து விளித்த போது நான் அடைந்த குழப்பத்தினால் என்ன பேசுவது என்றே எனக்குப் புரியவில்லை. 'அராபிக்கு நீ போகிறாயா ?' என அவள் கேட்டாள். ஆமாம் என்றேனா இல்லையென்று பதில் சொன்னேனா என்பதை நான் மறந்து விட்டேன். அது ஒரு பெரிய பஜார். அங்கு செல்ல அவள் மிகவும் விரும்பினாள் என்று அவள் சொன்னாள்.

''அப்படியானால் ஏன் நீ போகக் கூடாது ?'' நான் கேட்டேன்.

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே மணிக்கட்டில் இருந்த வெள்ளி வளையலை அப்படியும் இப்படியும் திருப்பிக் கொண்டிருந்தாள். கான்வெல்டில் அந்த வாரம் வேலை இருப்பதனால் தான் செல்ல முடியாதெனச் சொன்னாள். அவளுடைய சகோதரனும் இன்னும் இரண்டு பையன்களும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். கிராதியில் நான் மட்டும் இருந்தேன். ஒரு கம்பியைப் பிடித்த வண்ணம் என்னை நோக்கித் தலை குனிந்தாள். எங்கள் வீட்டின் எதிரிலிருந்த விளக்கொளி அவள் வெண்மையான கழுத்தில் பிரதிபலித்து, தங்கியும் சற்றே சரிந்து கொண்டும் இருந்த அவள் கேசத்திற்கும் கிராதியைப் பிடித்திருந்த கரத்திற்கும் ஒளியூட்டியது. ஒய்யாரமாக நின்றிருந்த அவள் உள்ளாடையில் சற்றே தெரிந்த வெண்ணிறக் கரை அவள் ஆடையின் ஓருபுறம் பட்டு ஒளியால் தெரிந்தது.

'அங்கு போவது உனக்கு நல்லது' என்றாள் அவள்.

',நான் அங்கு போனால் உனக்கு ஏதாவது வாங்கி வருவேன்'' என்றேன் நான்.

எத்தனை அசட்டுக் கீற்பனைகள், அந்த மாலைக்குப் பிறகு என் விழிப்பையும் உறக்கத்தையும் வீணாக்கின ! களைப்பூட்டும் இடைவெளி நாட்களை அழித்துவிட நான் எவ்வளவு விரும்பினேன். பள்ளி வேலைகளை நான் அசட்டை செய்து விட்டேன். படுக்கையில் இரவும் பள்ளியில் பகலிலும் அவள் உருவம் எனக்கும் நான் படிக்க விழைந்த புத்தக ஏடுகளுக்கும் இடையே வந்து நின்றது. அராபி என்ற வார்த்தையின் எழுத்துக்கள் கிழக்கத்திய மந்திரம் போல் என். அமைதியைப் பீரிட்டு என் உயிருக்கு ஓருவித மோகனத்தை அளித்தது, சனியிரவு சந்தைக்குப் போக அனுமதி கேட்டேன். என் சித்தி இது ஒரு பிரிமாசனின் வேலையல்லவே என ஆச்சரியம் அடைந்தாள். பள்ளியில் வெகு சில கேள்விகளுக்கே விடையிறுத்தேன். என் ஆசிரியரின் முகம் கருணையிலிருந்து கடுமைக்கு மாறக் கண்டேன், நான் சோம்பேறியாகாமல் இருக்க வேண்டுமே என அவர் சிந்தித்தார். அலையும் என் எண்ணங்களை ஒழுங்குப்படுத்த முடியவில்லை வாழ்க்கையில் முக்கியக் கடமைகள் இப்பொழுது எனக்கும் என் ஆசைக்கும் குறுக்கே நின்றமையால் அதைக் கண்டு சகியாதவனானேன். அவை குழந்தை விளையாட்டாக அழகில்லாக் களைப்பூட்டும் குழந்தை விளையாட்டாக எனக்குத் தோன்றின.

அன்று, சனி காலை நான் சந்தைக்கு மாலை செல்ல இருப்பதை சித்தப்பாவிடம் நினைவூட்டினேன். ஹாலின் நடுவே ஹேட் பிரஸுக்காகதேடிக் கொண்டிருந்த அவர் வெடுக்கென பதிலுறுத்தார்:

''ஆமாம் பயலே எனக்குத் தெரியும்.''

அவர் ஹாலில் இருந்தமையால் நான் முன்னறைக்குச் சென்று ஜன்னலருகே நிற்க முடியவில்லை. நொந்த உள்ளத்தோடு வீட்டை விட்டுப் பள்ளி நோக்கிச் செல்லலானேன். இங்கிதமற்ற காற்றின் இடையே என் நெஞ்சும் கைவிட்டது.

உணவிற்காக வீடு வந்த நான் என் சித்தப்பா இன்னும் வீடு திரும்பாததைக் கண்டேன். என்றாலும் இன்னும் நேரமிருந்தது. சிறிது நேரம் கடிகாரத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்த எனக்கு அதன் டிக்டிக் சப்தம் எரிச்சலை மூட்டியது. அறையை விட்டகன்றேன். படிக்கட்டை ஏறி வீட்டின் மாடிக்குச் சென்றேன். குளிர் மிகுந்த, சோம்பியிருந்த அறைகள் சிறிது என்னை வேதனையிலிருந்து விடுவித்தன. அறைக்கு அறை பாடிக் கொண்டே சென்றேன் முன் ஜன்னலின் வழியாக என் தோழர்கள் கீழே விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவர்களின் குரல்கள் வலிவிழந்து பொருளிழந்து என்னை அடைந்தன. குளிர்ந்த கண்ணாடியில் என் நெற்றியைப் பதித்தவாறு இருள்படிந்த அவள் வீட்டை நோக்கினேன். ஒரு மணி நேரம் நான் நின்று கொண்டிருந்தேன் போலும். எதையும் பார்க்காமல் என் கற்பனை உருவாக்கிய பழுப்பு நிற உருவத்தை விளக்கொளியில் பிரகாசித்த அவள் வளை கழுத்தை கிராதியைப் பிடித்துக் கொண்டிருந்த அவள் கரத்தை ஆடையின் கீழே தெரிந்த அந்தக் கரையைப் பார்த்தேன்.

நான் கீழே இறங்கி வரும்போது கனலடுப்பு அருகே மெர்சர் அம்மையார் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன் அவள் இறந்துபோன ஒரு வட்டிக்காரனின் மனைவி. அவள் சில நல்ல காரியங்களுக்காக பழைய தபால்-தலைகளைச் சேகரிப்பது வழக்கம். தேனீர் அருந்தும்போது அவர்கள் பேசும் திண்ணைப் பேச்சுக்களை நான் சகித்துக் கொள்ள வேண்டியிருந்தது. உணவருந்துவது ஒரு மணி நேரம் நீண்டும் என் சித்தப்பா வரவில்லை. மெர்சர் அம்மையார் புறப்பட எழுந்தார். எட்டு மணி ஆகிவிட்டதாலும், இரவுக் காற்று அவள் உடல் நிலைக்கு ஒவ்வாததாலும் அவள் தான் போக

வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினாள். அவள் சென்ற பிறகு அறையில் மேலும் கீழும் நடந்த வாறே அடிக்கடி கைகளைப் பிசைந்த வண்ணம் இருந்தேன். என் சித்தி சொன்னாள்.

'நீ இன்று சந்தைக்குச் செல்வதைக் கைவிட வேண்டி வருமோ என நான் அஞ்சுகிறேன்.''

ஒன்பது மணியிருக்கும். என் சித்தப்பா ஹால் கதவைத் திறக்கும் சப்தம் கேட்டது அவர் தனக்குத் தானே பேசிக் கொள்வதையும் அவர் கோட்டை ஹால் ஸ்டாண்டில் வீசியதால் உண்டான சப்தத்தையும் கேட்டேன். அவர் உணவருந்தும் இடை நேரத்தில் நான் செலவுக்குப் பணம் கேட்டேன். அவர் அதை மறந்துவிட்டார்.

'இன்னேரம் எல்லோரும் உறங்கி, அவர்கள் முதல் தூக்கத்தில் இருப்பார்களே என்றார் அவர்.

நான் சிரிக்கவில்லை. என் சித்தி அழுத்தமாக அவரிடம் சொன்னார்.

''பணத்தைக் கொடுத்து அவனைப் போக விடக் கூடாதா? நீங்கள் என்னவோ இத்தனை நேரம் அவனைக் காக்க வைத்தாகி விட்டது.''

என் சித்தப்பா தான் மறந்ததற்கு மிகவும் வருந்துவதாகச் சொன்னார். அவர் மீண்டும் ''எப்பொழுதும் வேலை செய்வதும் ஒரு பொழுதும் விளையாடாதிருப்பதும் ஜாக்கை மட்டியாக்கியது'' என்ற பழமொழியைத் தானும் நம்புவதாகச் சொன்னார். மீண்டும் நீ எங்கே போகிறாய் என்று அவர் கேட்ட போது இரண்டாம் முறையாக நான் சொல்ல வேண்டியதாயிற்று. ''அராபியன் தன் குதிரையிடம் விடைபெற்றதை நீ அறிவாயா?'' என்று கேட்டார்.

நான் சமயலறையைவிட்டு வெளியேறும் போது அதிலிருந்து சில துவக்க வரிகளை என் சித்திக்குச் சொல்வது என் காதில் விழுந்தது. கையிலே ஒரு ஃப்ளோரின் நாணயத்தை இறுகப் பிடித்துக் கொண்டு பக்கிங்காம் தெருவழியே ஸ்டேஷனை நோக்கி நடந்தேன். தெருக்கள் முழுவதும் நிரம்பி வழிந்த கூட்டமும் விளக்கொளியும் என் பயணத்தின் நோக்கை நினைவூட்டின. வெறிச்சோடிய ரயில் வண்டியின் மூன்றும் வகுப்பு பெஞ்சொன்றில் நான் அமர்ந்தேன். பொறுக்க முடியாத காலதாமதத்திற்குப் பிறகு ஸ்டேஷனை விட்டு வண்டி ஊர்ந்தது. அது இடிந்த வீடுகளின் ஊடேயும் மின்னும் ஆற்றின் மேலேயும் ஊர்ந்தது. வெஸ்ட்லேன்ட்ரோ ஸ்டேஷனில் மக்கள் கூட்டம் ஒன்று பெட்டிக்குள் நுழையப்பார்த்தது. இது சந்தைப் ஸ்பெஷல் என அக் கூட்டத்தை விலக்கி விட்டான் ஒரு போர்ட்டர். நான் அந்தத் தனித்த பெட்டியில் தனித்திருந்தேன். சில நிமிஷங்களுக்குப் பிறகு பழுதடைந்த மர பிளாட்பாரம் அருகே வண்டி நின்றது நான் நடந்து பாதையை அடைந்தேன். அங்கே ஒளிர்ந்த கெடிகாரத்தின் உதவியால் பத்து மணிக்குப் பத்து நிமிடம் இருப்பதை உணர்ந்தேன். என் முன்னே இருந்த பெரிய கட்டிடம் அந்த மாயப் பெயரைச் சூட்டிக் கொண்டிருந்தது. ஆறு பென்னி நுழைவிடத்தைக் காண முடியாத நான் எங்கே பஜார் மூடிவிடுமோ என்று அஞ்சி சலிப்புடன் நின்று கொண்டிருந்த ஒருவனிடம் ஷில்லிங் கட்டணம் கொடுத்து உள்ளே நுழைந்தேன். காலரியில் அரை மடங்கு உயரம் தூக்கலாக நின்ற பெரிய தொரு ஹாலில் நான் நுழைந்தேன். ஏறத்தனவே முக்கால் பகுதி ஸ்டால்கள் மூடியிருந்தன. ஹாலின் பெரும் பகுதி இருள் மண்டிக் கிடந்தது. தொழுகை முடிந்த மாதா கோயிலின் அமைதியை அது எனக்கு நினைவூட்டியது. தயக்கத்துடன் பஜாரின் நடுப்பகுதியை அடைந்தேன். அங்குமிங்கும் சில ஜனங்கள் திறந்திருந்த சில ஸ்டால்களுக்கு அருகே குழுமியிருந்தனர். வண்ண விளக்குகளால் கஃபே சாண்டாஸ்ட் என்று எழுதப்பட்ட திரைக்கு முன்னால் இரண்டு மனிதர்கள் நாணயங்களை எண்ணிக் கொண்டிருந்தார்கள். அவை விழும் ஒலியை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

மிகுந்த கஷ்டத்துடன் நான் ஏன் இங்கு வந்தேன் என்பதை நினைப்பூட்டிக் கொண்டு ஒரு பீங்கான் பாத்திரக்கடையில் இருந்த பாத்திரங்களையும் டீ செட்டுக்களையும் ஆராய்ந்தேன். கடைக்கதவருகே ஒரு இளம்பெண் இரண்டு வாலிபர்களுடன் சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டும் இருந்தாள். அவர்கள் ஆங்கில உச்சரிப்பைக் கவனித்தும் அவர்கள்பேச்சைசரியாய்க்கவனியாதும் நான் நின்றேன்.

'ஓ அதைப் போல நான் சொல்லவில்லை.''

''ஹும் அதைப் போல நீ சொன்னாய்.''

''ஊகூம். நான் சொல்லலே

''என்ன அவள் அப்படிச் சொல்லவில்லை''

''ஆமாம்'' அவள்சொன்னதைக்கேட்டேன்.''

''ஓ...அது வந்து...புளுகு.''

என்னைக் கண்ட அந்த இளம் பெண் அருகே வந்து ''ஏதாவது நீ வாங்க விரும்புகிறாயா?'' எனக் கேட்டாள். அவள் குரல் ஊக்கம் அளிப்பதாய் இல்லை. ஏதோ கடமைக்காகச் சொன்னது போல் தோன்றிற்று.

கிழக்கத்திய துவாரபாலகர்களைப் போல் தோற்றமளித்த இரண்டு பெரிய ஜாடிகள் இருண்ட வழியின் இருபுறமும் இருப்பதைப் பணிவுடன் கண்ட நான் மெல்ல முணுமுணுத்தேன்.

''இல்லை...ரொம்ப நன்றி.''

அவள் ஒரு பூந்தொட்டியின் இடத்தைச் சிறிது மாற்றிவிட்டு அந்த இரு வாலிபர் அருகே திரும்பிச் சென்றாள். அவர்கள் அதே செய்தியை மீண்டும் பேசத் தொடங்கினார்கள். ஒன்றல்லது இருமுறை அவள் தன் தோள்பட்டை வழியாக என்னைப் பார்த்தாள். ஸ்டால் அருகே சிறிது நேரம் தயங்கி நின்ற நான் நிற்பதால் பயனில்லை என்று அறிந்ததும் ஏதோ அவளுடைய பீங்கான் சாமான்களில் உண்மையான விருப்பத்தை உண்டாக்க முயன்று கொண்டிருந்தேன். பின்னர் திரும்பி பஜாரின் நடுவுக்கு மெல்ல நடந்தேன். இரண்டு பென்னிகளை மெல்ல, மீதியிருந்த ஆறு பென்னிகளோடு பையில் கலக்க விட்டேன். காலரியின் ஒரு புறத்திலிருந்து விளக்குகள் அணைந்து விட்டன என ஒரு குரல் கேட்டது. ஹாலின் மேல் பகுதி இப்பொழுது முழுவதும் இருள் மண்டிக் கிடந்தது.

அந்த இருளை வெறித்து நோக்கியநான் ஏதோ ஆணவத்தால் விரட்டப்பட்டு அழிக்கப்பட்ட ஒரு பிராணியைப்போல் என்னைக்கண்டேன்; என் கண்கள் வேதனையாலும் கோபத்தாலும் எரிந்தன.

ஒற்றைத் தென்னை

டி. சி. ராமலிங்கம்

மனநிழல் என்ற ஒரு இலக்கிய வடிவத்தை முதலில் கையாண்டவர் ந. பிச்சமூர்த்தி. 1934-ல் 'ஈஸ்வர லீலே' என்ற தலைப்பில் 'சுதந்திரச் சங்கு' வாரப் பத்திரிகையில் எழுத ஆரம்பித்து இதுவரை பல எழுதி இருக்கிறார். அவை புத்தக வடிவில் வெளி வர இருக்கிறது.

சிந்தனை, உணர்ச்சி இரண்டும் இழைந்தோடும் ஒரு மன நிலையை காட்டும், கதையாக இல்லாமல் கதை போலவும் கட்டுரையாக இல்லாமல் கட்டுரை போலவும் தொனிக்கும் ஒரு இலக்கிய உருவம். இங்கு வெளியிடப்பட்டு கட்டுரை அந்த ரகத்தை சேர்ந்தது.

வானத்தைப் பார்த்தேன் ஒரு பொட்டு மேகம் இல்லாமல் நிர்வாணமாகக் கிடந்தது அது. எனது கண்கள் வெய்யிலிலே கூசிச் சுருங்கி வானின் மடியை நோக்கி இறங்கின. உடல்கள் யாவற்றிற்கும் மடியிலேதான் ஜனனம்; தொட்டில்; சுகம்! காலையிலே வானப் பெண்ணின் கிழக்கு மடியிலே உதரத்தைக் கிழித்துக்கொண்டு இந்த சூரியன் ஜனித்தான். அப்போது பார்த்தேன்—உலகெங்கும் வானின் ஜனனேந்திரியத்திலிருந்து ரத்தம் பீறிப்பாய்ந்து நிறைந்தது. வானின் உடலில்தான் என்ன—ஒரே உதிர வெள்ளம்! பச்சையாக ரத்தநாளங்கள் பிளந்து தசைத் துணுக்குகள் சுற்றி மிதக்க இந்த சூரியனைச் சுற்றி ரத்தம் வழிந்து கடலில் ஓடியதை இந்தக் கண்களால் பார்த்தேன். அருவருத்தது என்கிறாயா? முட்டாளுக்குத்தான் அருவருக்கும்.

மாலை வரும். அப்போது மீண்டும் ஒரு ரத்தப் பிரவாகம். இந்த சூரியனை காலதேவன் சிதைப்பான். தனது நாள் என்கிற பட்டாக் கத்தியினால். அப்போது இந்தக் கதிரவன் கிழவனாகி விடுவான். மலைவாயில்தான் பிணக்காடு. யுகம் யுகமாக கல்ப கோடி சூர்யர்களைப் புதைத்த பயங்கரமான பிணக்காடு. புதைத்த அல்ல!—எரித்த சுடு காடு!

மாலைகளிலே போர்க்களத்தைப் பார்க்கலாம் மேற்கிலே! சூர்யனின் கிரண வாட்களுக்கும் கால தேவனின் பட்டாக் கத்திக்கும் வீச்சுப்போர் நிகழும். தீப்பொறி பறப்பதை நீ காண வேண்டுமா? ஏன் காலதேவனைத்தான் காண வேண்டுமா? மேல் வானத்தில் பரிதிக் கிழவன் சாவை நோக்கித் தனது ஒற்றைச் சில்லு ரதத்தில் இறங்கும் போது உற்றுக் கவனி! சூர்யன் அன்று காலைதான் பிரசவமாகினவன். அவனுக்கு மரணம் தெரியாது தனக்கு முன் பின் என்ற கதைகள் உன்னையும் என்னையும் போல் அவனுக்கும் தெரியாது. வானத்தாய் அவனுக்கு அந்த ரகசியங்களைச் சொல்லமாட்டாள். அவளுக்கு மங்காத சோகம்! அந்த சோகத்தோடு குழந்தை சாவை நோக்கிப் போகிற பட படப்பையும் அடக்கிக் கொண்டான். குழந்தைக்குச் சொல்லி என்ன? சிருஷ்டியின் நியதியை இந்தத் திவலையினால் தகர்க்க முடியுமா? அவனுக்கும் அழிவு என்கிற ஸ்மரணையை ஏற்றி நாள் முற்றிலும் படபடப்பில் தள்ள வேண்டுமா? சொன்னால் தான் அவன் நம்பப் போகிறானா? —ஏன், நீயும் நானும் நம்பவில்லையே! நம்பினால் மூஞ்சியை மூஞ்சியைப் பார்த்துக் கொண்டு வேறொரு காரியமும் பார்க்காமல் சுடுகாட்டு வாசலில் அல்லவா நீயும் நானும் குந்தியிருப்போம். இந்த அமிர்தம் தேங்கிய சரீரிக்கு இது தெரியும்.

பால சூர்யனாக மைய வானத்தை நோக்கி ஏறித் தவழ்ந்து, நடுவானத்தருகே, வீறுபெற்ற இளமைத் துடிப்பிலே, உலகத்தைத் தன் வாள்களின் கூர் நுனியில் குத்தி வதைத்து, முதுமையை நோக்கி வழுகி, வாளும் உடலும் ஒளி

கரைந்து வீழ்கிற சூர்யனை—தன் உடலின் ஒளியை, மகனைத்தான்—காலதேவன் காத்து மேற்குச் சுடுகாட்டருகே நிற்பான். அவனைப் பார்ப்பது சுலபம். மறதி இருந்தால் போதும். அவனது தேர் இருட்டு! போர் முடிந்த பிறகு தான். தேர், கிழக்கிலிருந்து சரேலென்று கறுப்புக் குதிரைகள். ஒரு கோடி இழுத்துப் பாய தன் அரசனை ஏற்றிச் செல்வதற்குப் புறப்படும்.

உலகத்தை மற! அதன் அறிவுப் படுகையைக் கிழித்து விட்டு உள்ளே ஒரு இருட்டுச் சகதியுள் புழுமாதிரி நுழையத் தெரிய வேண்டும் அப்போது தெரியும் காலத்தின் உருவம். அந்த வாட்களின் மின் சுழற்சியிலே இடிகளின் கோர கர்ஜனைகளாக மோதித் தெறிக்கும் மரணத்தின் கெக்கலிச் சப்தம் பொறித்துக் கேட்கும்!

சூர்யனின் தலையிலே காலதேவன் வாளினால் மோதுவான். ஒரே ரத்தம்!

சாவு!

குழந்தையின் ரத்தத் திவலைகளோடு அன்னையின் கண்ணீர் வெள்ளம் கலந்து எங்கும் சிவந்த ஒளிப்புனல் பாயும். சூர்யனுடைய குதிரைகளின் உடலங்கள், தேரின் உடைந்த பாகங்கள் சுற்றி மிதக்கும். மரணம் நமட்டுச் சிரிப்புச் சிரிக்கும்.

இருட்டுத் தேரிலே காலதேவன் ஆரோகணித்து எழுந்து வானக் காதலியைப் பார்த்துச் சிரிப்பான்.

அவளுடைய உடல் குளிரிலே சிலிர்க்க, புதிய சேர்க்கையை எண்ணி இணங்குவாள்! இல்லையானால், நியதி?

மீண்டும் புணர்ச்சி!

நான் வெய்யில் பரவி உலகம் எரிகிறதுபோல் தகிக்கும் வெளியின் முடிவைப் பார்த்தேன்.

ஒரு தென்னை ஒன்றே ஒன்று.

நான் திகைத்தேன்! கண்களைக் கசக்கி விட்டுப் பார்த்தேன். ஆமாம்! ஒரு தென்னை வானும் பூமியும் முட்டிக் கொண்டு கோடு போடும் கீழ்த் திசையின் வழியில் திடீரென்று காட்சியளித்தது.

அன்று வரை, அந்த விநாடிவரை அந்த இடத்தில் அது இருந்ததில்லை.

இரண்டு திசைகளிலிருந்து காட்டு மரங்கள் அடர்ந்து அந்தத் தென்னை தோன்றின இடத்தில் ஒரு வழிவிட்டிருந்தன. இன்று சரியாக, அந்த வழியை, நான் நின்றது மேட்டு நிலமாதலால் எனக்குத் தொடுவானம் தெரியாதபடி மறைக்க ஒரு திரை! என் உள்ளங்கால்களை ஏதோ நெருடிக் குறு குறு வென்று கிச்சுக்கிச்சு மூட்டியது. குனிந்து பார்த்தேன். பச்சைப் புற்கள் தலையாட்டி நிமிர்ந்தன. என்னை யாரோ பின்புறத்திலிருந்து தூக்கி எறிய முயன்றார்கள். திகைத்துத் திரும்பினேன். ஒன்றுமில்லை. காற்று என் ஷர்ட்டினுள் புகுந்து சுழன்றது!—காற்று மிரண்டு சுழன்று எழுந்து, 'ஹோ' என்று அழுதபடி தாயை நோக்கிப் பாய்ந்தோடும் குழந்தையைப் போல விண்ணை முட்ட எழும்பிற்று. அதன் உருவம் புழுதி உடல் பெற்று விம்மிக் கொண்டிருந்தது. யாரோ கடகட வென்று உச்சிக்கு மேலே சிரித்தார்கள். வெய்யில் திடீரெனப் பறந்து மறைந்தது.

நிமிர்ந்தேன்! கோரமான பல் ஒன்று வெள்ளை ஒளி வீசிச் சரேலென்று முகில்களின் முரசிலிருந்து செங்குத்தாக வீழ்ந்தது!—மீண்டும் பயங்கரமான சிரிப்பு!

தீ! ஆமாம், அந்த ஒற்றைத் தென்னை வெடித்து எரிந்தது!

மறுகணம் எங்கும் ஒரே இரைச்சல்! நான் என் வீட்டினுள் நுழையு முன்பே மழை என்னைத் தெப்பமாக நனைத்து விட்டது!

பரபரப்புடன் ஆடைகளைக் களைந்து புது ஆடைகளை அணிந்தேன். அப்போது தான் நினைவில் மின்னலடித்தது. அந்த ஒற்றைத் தென்னையின் இலைகளிலே மறைந்து நின்ற தொடுவானம்...!

மனைவியின் நினைப்பு வந்தது. நெஞ்சை எண்ணங்களும் ஆசையும் கசக்கின. கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டு கனவில் குதித்தேன்.

காலதேவனின் இருண்ட உடல் வானைத் 'தழுவு கிறதைப் பொறுமையோடு கவனித்தேன். இரவின் மோனம் சுருதி ஏறிக்கொண்டு போகிறது. தவளைகளின் குரல்கள் குதித்துக் குதித்து காதுப்பறையில் துள்ளுகின்றன. வானக் கன்னிக்கு வெட்கம். நடுநிசியில் இச்சையின் வெறியிலே தன்னை மறக்கும் வரை வெட்கம்! காலத்தின் இருண்ட உடலில் பரவித் துளித்துக் கிடக்கிற விந்துத் திவலைகள் ஜீவத்துடிப்போடு சிருஷ்டியின் நியதியிலே கயிற்றில் கோர்த்த மணிகள் புரள்கிறுப் போல் புரளுகின்றன. கோடி கோடி திவலைகள்! அவற்றில் ஜீவரஸம் வர்ண வீச்சுச் செய்ய உலகை நோக்கி இரவு முழுவதும் கண்ணடிக்கின்றன. இரவு முழுவதும் காலதேவனும் வானும் பிணைந்து நிலைமாறுமல் கிடக்கின்றனர். காலையில் அவளுடைய உதரத்தை நாடிக் காலத்தின் உடலிலே கொட்டிக் கிடந்த விந்துத் துளிகள் உருண்டு மயங்கி மறைகின்றன!—காலதேவன் உடலை நெகிழ்த்தி மேற்குக் கட்டிலுக்கு அப்பால் புரண்டு படுக்கிறான்.

அந்த ஒற்றைத் தென்னையின் திரைக்கு அப்பால்!—மனம் சுண்டி இழுத்து உடலின் இச்சைத் துடிப்பு அவ்வளவையும் சுருக்கிப் புதைக்கிற மர்மம்!

நான் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டேன். பிரசவத்திற்குப் போனவளின் நினைப்பு!—அவளுடைய உடல் அந்த ஒற்றைத் தென்னைத் திரை உரிந்து மனசிலே ஏறிப் படுக்கிறது.

வெளியே பிரசவ வேதனையில் வானம் புரண்டு முனங்கும் ஓயாத சப்தம்!

மாமியின் வீடு

சி. சு. செல்லப்பா

நடக்க நடக்க அந்த தெரு நீண்டது. எத்தனையோ தடவை நான் கால்களை எட்டிப் போட்டிருந்த அதே தெருதான். ஆனால், அது இப்போதெல்லாம் இல்லை. நூற்றாண்டு கணக்கில் சொல்வதானால் ஒருகால் நூற்றாண்டுக்கும் முந்தி. அப்போ எனக்கு வயது பதினைந்து, இப்போ நாற்பதுக்கு மேலே. ஆனாலும் தெரு இப்போ எனக்கு புதுசாக பட்டது. தெருவின் தென் கோடி முனை திருப்பத்திலே ஒரு சில்லுப் பெயர்ந்த மாதிரி ஒரு லேசான இறக்கம் ஆரம்பிக்கும். தெரு நடுவுக்கு வந்து திரும்பிப்பார்த்தால் பூசினமாதிரி மேடு ஏறுவது—இரண்டு பக்கமும்—தெரியும். இது கூட எனக்கு அவ்வளவு துல்யமாக ஞாபகத்திலே இருந்திருக்காது. நான் சைக்கிள் கற்றுக்கொண்டு மாமா பிள்ளை சந்திரன் பின்னாலே அந்த மூலை திரும்புகிறபோது வேகத்தை தணிக்க முன் பிரேக்கை போட்டு சைக்கிளோடே வீழ்ந்து முழங்காலில் ரத்தம் கசிய நொண்டி, மாமி ஆத்துக்கு நடந்தது, அதுக்கு அப்புறம் சைக்கிளிலேயே ஏறாதது, இந்த நினைவு வரவும் தான் அந்த தெரு வாகு மனதிலே பளிச்சென ஞாபகத்துக்கு வந்தது.

இப்போ அந்த இறக்கத்தையும் முனையிலே காணோம். மட்ட மல்லாக்க படுத்துக் கிடந்த மாதிரி இருந்தது. அது மட்டும் இல்லை. இரண்டு பக்கத்து வீட்டு படிகள் எல்லாம் அடியிலே இருந்து சிலதை காணோம். வெள்ளம் வந்த ஆற்றோர படிக்கட்டுகள் முங்கிப்போய் கிடந்த மாதிரி இருந்தது, இந்த இருபத்தைந்து வருஷத்திலே தெரு இரண்டடியா உயர்ந்திருக்கும்? இதென்ன, சத்ரப்பட்டி கணவாய் மேடு—செங்குத்தான இறக்கம்—எத்தனை வண்டி மாட்டை, வண்டிக்காரனை பலி வாங்கி இருக்கு அந்த கட்டவண்டி பிரயாண நாளிலே—அந்த ரோடு இப்போ பழனிக்கு பஸ்ஸிலே போகிறபோது ஒரு மேடாகவா தெரிகிறது? பள்ளம் மேடாக ஆகிறதும், மேடு பள்ளமாக ஆகிறதும். ஒரு முப்பது வருஷத்திலே, திண்டுக்கல் பாறைக் குளம் முறட்டு கருங்கல் கரடு 'வேட்டு வைத்து வேட்டு' வைத்து இப்போ நிஜமாக குளமாகவே குழிந்து போச்சே.

இந்த நினைப்பிலேயே நடந்துண்டு இருந்தேன். கால் சடக்கென வேகத்தை அடங்கிக் கொண்டது—பழக்கப்பட்ட கால் தன் வீடு வந்ததும் நிற்கிற மாதிரி—என். கண்களை முந்திக் கொண்டு. கால் நிற்கவும் தான் கண்ணை திருப்பினேன். இடது பக்கம். வெறிச்சோடின சந்து. என் கால்கள் சரியாகத்தான் அந்த இடத்தை குறித்திருக்கின்றன. உறுத்து, ஏன் வெறித்துக்கூட அந்த சந்தையே பார்த்தேன். மேடு பள்ளமாகிறதும் பள்ளம் மேடாகிறதும் சரி. மனை வீடாகிறதும் பார்த்திருக்கிறது. வீடு மனையாகிறது—அதுவும் சந்தாகிறது? அந்த சந்து நூல்பிடித்த மாதிரி இல்லை. நெட்டுக்கு பாதி போய் முதுகு ஒடிந்தவன் மாதிரி மடங்கி எதிர் கோடி தெரியாமல் மறைந்து திருகிப் போய் கிடந்தது. இந்தக் காலத்து பிளான் போட்டு கட்டின கிராஸ்ரோடு, எக்ஸ்டென்ஷன் தெரு, சந்தாக இருந்திருந்தால் அது ஓர்சாக இருந்திருக்கும் யாரோ ஒரு பாண்டியன் காலத்திலே ஏற்பட்ட ஒரு ஊரோட தெருவை உண்டாக்கினவர்கள் இந்த பிளான் போட்ட சீட்டுக் கட்டு, சோப் டப்பா பாஷன் வீடுகளையா அப்போது நினைத்திருப்பார்கள். கீழ்த் திண்ணை, மேல் திண்ணை, ரேழி. கூடம், நடை, முத்தம், கிணற்றடி, கொட்டம் புழக்கடை, இப்படி, நாராசம் வரைக்கும் வீடு ப்ர்லாங்குக்கு நீளும்.

அறுபதுக்கு நாற்பது பிளாட், முன்னே பத்தடி, பின்னே ஐந்தடி, பக்கங்களில் ஐந்து அடிவிட்டு, தெருவிலே இருந்தே ஹால் ஆரம்பித்து—வீட்டு அந்தரங்கம் பூராவையும் தெருவுக்கே திறந்து காட்டுகிற மாதிரி—அங்கேயே சமயலறை, படுக்கிற அறை, கக்கூஸ் கூட—அது அநாகரீக வார்த்தை—லெவட்ரி—கம் பாத்ருமாக ஹாலிலிருந்தே எல்லாத்துக்கும் கதவு திறக்கும்படியாக இருக்கிற 'ஸெல்ஃப் ஸஃபிஷண்ட்' நாகரீக வீடு அந்

தக் காலத்து அநாகரிகங்களுக்கு எங்கே தெரிந்திருக்கப் போகிறது. வீட்டுக்கு கக்கூஸே இருக்காதே, நாராசம் இருக்கிற போது. சென்டிமீட்டருக்கு இவ்வளவு என்று மனைக்கு கணக்குப் போடுகிற காலத்துக்கு தக்க வீடு இது. கல்லெறிகிற தூரத்துக்கு இவ்வளவு என்று மதிப்பு போட்ட காலத்திலே பிறந்த வீடுகள் ஒடுங்கியா கிடக்கும். நாலு தடவை வாசலுக்கும் கொல்லைக்கும் நடந்தால் முழங்கால் விழுந்து போகும்னு பேசிக் கொள்ளும் படியாக அப்படி வீடு ஓடும் ஒரு கோடியிலிருந்து பார்த்தால். முழங்கால் இந்தக் காலத்து நமக்குத் தான் விழும். அந்த காலத்தாருக்கு ததீசி முழங்கால்கள் கிடையாது.

அந்த சந்தை பார்த்து நின்றவன் நின்றவன் தான். அந்த சந்து என் கண்ணில் பட்டதா? அந்த சந்து பிறந்த கதை தான் அங்கே படம் ஓடிக் கொண்டிருந்தது. சந்து பிறந்த கதை என்ன, நான் பிறந்த கதையே அதில் தானே இருந்தது. நான் அங்கே வந்ததும் மாமி ஒரு அறையை காட்டினாள். நீ இந்த உள்ளில் பிறந்தாய். இதிலா? நெல் போட்டிருக்கே? ஆமாம், மூணும் வருஷத்து அரிசி பழக இது களஞ்சியம். உங்கம்மா பிரசவ உள்ளும் இது தான். நெல் மூட்டையாக மூணு மாசத்துக்கு முக்கால் கூடத்தை அடைத்து விடும். நெல் இறைபடும் வீடு பூராவும். நான் ஏன் இங்கே பிறந்தேன்? நல்ல கேள்விடா, அம்மா அவள் அண்ணா ஆத்துக்கு பிள்ளைப் பெற வந்தால் நீ வேறே எங்கேயோ பிறப்பியாக்கும்? அப்போ அம்மாஞ்சி? அவன் அவன் மாமா ஆத்து பாவுள்ளில் பிறந்தான். களஞ்சியத்திலேயும் பாவுளிலுமா நாங்கள் பிறந்தோம்? இப்போதெல்லாம் நர்சிங் ஹோமில் பிறக்கிறோம். மருந்து வச்சி போய் லேடி டாக்டர். தலைக்கு மேல் எலக்டிரிக் விசிறி, ஸ்பிரிங் காட். அப்போ? கட்டாந்தரை தான், மிஞ்சிப் போனால் ஒரு பெஞ்சி. அதுவும் பெரியாத்துலே இருந்து வாங்கி வந்தால் தான். இது பெரியாம் இல்லையா! பெரியாம் தான். வயிற்று எரிச்சலை ஏன் கிளப்பறே? உங்கள் தாத்தா இந்த ஒண்ணை பாக்கி வச்சுட்டமேன்னு நெஞ்சுக் குறையோடே போனார். உங்கள் பாட்டி பேரிலே இருந்ததோ, சூப்டியாகாமே பிழச்சதோ. எங்க தாத்தா அப்படியா? போருமே உங்க தாத்தாவும் நீயும். அவர் பேர் தானே எனக்கு? தாத்தா பேரை எடுத்துடாதேடாப்பா குழந்தை. உங்க...அம்மா, மன்னி ஆத்துலே இருந்து தன் குழந்தை படிக்கட்டும்னு ஆசையோடே அனுப்பி இருக்கா. நன்றாக படிச்சு முன்னுக்குவா. மாமிக்கு மருமானை நன்றாக வளர்த்தாள் என்று பேர் வாங்கிவை.

மாமி ஆத்துலே இருந்து நான் காலேஜுக்கு படித்தபோது இப்படி ஏதேதோ 'ஆதியிலே போனது அந்தத்துலே போனது' என்று மாமியே வாய்க்கு வாய் சொல்கிறமாதிரி என்னென்ன பழங்கதைகள் எல்லாமோ சொல்லிக் கொண்டிருப்பாள். இந்த வீட்டுக்கும் வந்ததாம் ஆபத்து! தாத்தா பாட்டியிடம் அதை என் பேருக்கு மாற்றிவிடு—அது பாட்டியோட அப்பா சொத்து பாட்டி அவள் அப்பாவுக்கு ஒரே பெண்—என்று கேட்டாராம். பாட்டி எல்லாவற்றையும் முன்னமே தாத்தாவுக்கு கொடுத்துட்டாளாம். ஆனால் இதுலே மட்டும் முழிச்சுண்டுட்டாளாம். இதையும் கொண்டு போய் அவளுக்கு அழவா? என்னை வெட்டி கிணற்றிலே போட்டாலும் சரி. இது ஒண்ணுவது அவன் நம்மை நாளைக்கு சாம்பல் கரைக்காமல்—சாப்பிட ரெண்டு அரிசி இல்லாட்டாலும் நிழலுக்காவது தங்கி இருக்க இருக்கட்டும்னு தாத்தாவை எதிர்த்தது—அதுதான் பாட்டி ஆயுசிலே தாத்தாவை எதிர்த்தது. முதல் தடவையும் கடைசியும் கூட. தாத்தா நிலையிலே முட்டிண்ட மாதிரி பொறி கலங்கி அப்புறம் சாகிற வரைக்கும் ஒரு வார்த்தை மூச்சு விடவில்லையாம். அதனாலேதான் இந்த பெரியாம் உங்கள் மாமாவுக்கு தப்பிச்சுது. அதுக்கு அப்புறம் தான், நான் இந்தாத்துக்கு வாழ்க்கைப்பட்டு வந்தப்புறம், உங்கள் அம்மாவுக்கு கல்யாணமாகி பத்து வருஷம் கழிச்சு நீ பிறந்தாய். இந்த வீடு தப்பிச்சுதோ நாமும் இந்த ஊர்லே நாலு பேர் முன்னாலே மனுஷான்னு நடமாடினோமோ. இல்லையானால் உங்க மாமாவும் நானுமா எங்கே குடிசையை தூக்கிஇருக்கணுமோ, இல்லை, சிரிக்கிறவா முன்னாலே இடறி விழுகிற மாதிரி வாடகை வீட்டுலே இருந்திருக்கணுமோ? உங்க மாமாவுக்கு என்ன? வயிறு பசிச்ச இடத்திலே சாப்பாடு, கால் வலித்த இடத்திலே படுக்கை என்று அடிக்கடி சொல்வாரே, அது மாதிரியே செய்துடக்கூடியவர். அப்பா பிள்ளை தானே. இன்னொரு விதம். உங்க அம்மாதான் சொன்னாள். இந்த வீட்டை நீ கடைசி வரைக்கும் காப்பாற்றி வாரிசுகளுக்கு கொடு அண்ணா இந்த ஊரிலே இருந்து. உனக்கு வருகிற காசு போதும். ரெண்டு நெல்லும் கையகல வீடும்னு சொல்வா. பொண்டாட்டி பேச்சு உறைக்காட்டாலும் தங்கை பேச்சுக்கு மசிந்துதான் உங்க மாமா ஊரைவிட்டு நகராமல் இந்த வீட்டிலேயே இருந்து செத்தும் வச்சா. சொந்த வீடுன்னு சாகறதுக்காவது இருந்ததே.

நான் படிக்க வந்த போது மாமி மட்டும் தான் அந்த வீட்டிலே இருந்தாள். மாமா போய் நாளாச்சு. சின்ன அம்மாஞ்சி ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தான். பெரிய அம்மாஞ்சி பட்டணத்துலே வேலையாக இருந்தான். அம்மா, எனக்கு ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்கவில்லை. வந்தபோது சொன்னான். புரிகிறதுடா நீ ஊரைச் சுற்றி வளைக்கிறது. என்னை அடியோடே இதை விட்டு கிளப்பி பறப்பட்டிணத்து சந்திக்கு கொண்டு போய் நிறுத்திட்டாத்தான் உனக்கும் உன் தம்பிக்கும்—அவனுக்கும் பட்டணம் வைத்தியம்--திருப்தியா இருக்கும். இல்லையா? பெரிய அம்மாஞ்சி அதுக்கு அப்புறம் அம்மாகிட்ட பட்டணம் பேச்சே எடுக்க வில்லை. மாமி மட்டும் சொல்லி நிறுத்தினாள்: இந்தா ராகவா, உனக்கு ஒரு கல்யாணம் ஆகி இவளையும் அங்கே கொண்டு படிக்கவச்சுக்கோ. ஏன் கையும் காலும் கீழே தொங்கிப் போகிற வரைக்கும் இந்த மண்தரை,

பாதி லர்கடம் பாதி ஓடுமாக இருக்கிற இந்த வீட்டிலே வாசலுக்கும் கொல்லைக்கும் வீசி நடந்து காலை அசத்திக்கிறேன். நீயும் உன் பெண்டாட்டியும் தம்பியுமாக—குண்டு சட்டிக்குள்ளே குதிரை ஓட்ரது என்பா—படுத்தா காலும் கையும் இடிக்கிற—எட்டடிக் குச்சுக்குள்ளே இறைவா எப்படி நான் இருப்பேன் பாட்டு மாதிரி—உன் சம்பளத்திலே பாதியை கொடுத்து மூக்கோட்டை ரூமிலே குடித்தனம் பண்ணுங்கோ. நான் வேணுமானால் ஒரு நடை ஒரு ரயில்லே வந்து நீங்கள் குடித்தனம் பண்ணுகிற அழகை பார்த்துட்டு அடுத்த ரயில்லே திரும்பி விடுகிறேன். அம்மாவை பார்க்கணுமானால் நீங்கள் வாங்கோ. போங்கோ. உன் பெண்டாட்டியை வேணா பத்து நாள் அனுப்பிவை. கொல்லைத் தென்னை மரத்து தேங்காய் துவையலை சாப்பிட்டுட்டு போகட்டும். அம்மாஞ்சி சிரித்தான். ஒரு பொண்ணை நாளைக்கே பட்டணத்துலே தேடி கல்யாணம் பண்ணிண்டு இங்கே அடுத்த தபாலில் அனுப்பி வைக்கிறேம்மா. நீ முதலில் துவையலை பண்ணிவை. ராகவன் தன் கடைசி முயற்சி தோல்வியோடே பட்டணம் திரும்பி விட்டான்.

மாமிக்கு அந்த வீட்டு மேலே இருந்த அவ்வளவு பாசம் அந்த கொல்லை தென்னை மரங்கள் மேலேயும். நீ பவுன் கொடுத்து வாங்கினாலும் இந்த தேங்காய் கிடைக்காதுடா உங்கள் பட்டணச் சந்தியிலே. தேங்காய் துவையலும் சாதமும் மாமிக்கு போதும். கொல்லைக் கீரையும். கையாலே மண்ணைக் கிளறி நாலு விதையை தூவிக் கொண்டே இருப்பாள், நாங்கள் கொல்லைப் பக்கம் போகிற போதெல்லாம், ஆமடா, இப்படி நினைச்சாப்லே உங்க பட்டணத்திலே உட்கார்ந்த இடத்திலேயே இருந்து கொத்து கீரையை வாங்கிடுவே. இல்லை, ரசத்தை அடுப்பிலே இருந்து இறக்கினவுடனே ரெண்டு கொத்தமல்லி. கருவேப்பிலை கசக்கிப்போட காசை எடுத்துக்கொண்டு மார்க்கெட்டுக்கு ஓடுவே. எட்டினாப் போலே இருந்த கொல்லை கருவேப்பிலை செடி மேலே மாமிக்கு உசிர். தீட்டுக் கை பட்டால் கருவேப்பிலை போச்சுடா. வீட்டுக்கு விலக்கமாக இருக்கிற மூணு நாளும் அந்த கருவேப்பிலை செடி கிட்டவே போக மாட்டாள். மாமியாத்து கொல்லைத் தேங்காய் துவையலும் கொத்தமல்லி கருவேப்பிலை கசக்கிப் போட்ட ரசமும்சாப்பிட்ட ருசி இப்பவும் என் நுனி நாக்குக்கு வந்து நிற்கிறது.

நான் படிக்கிற உள்ளுக்கு வந்து மாமி சொல்லுவாள். உங்க தாத்தா இந்த உள்ளே தான் பூஜை செய்வாராம். என்ன, எங்க தாத்தா பூஜை செய்வாரா? அது தான் விசேஷம். உங்கள் பாட்டியே சொல்லுவாள்—அந்த ஒரு பைத்தியம் தவிர வேறே உங்க தாத்தாவுக்கு ஈடாக ஒரு ஆளு இந்த தெருவிலே என்ன, ஊரிலேயே கிடையாதுன்னு. கர்ப்பக்கிரஹம் மாதிரி வாசனை வீசுமாம். பூஜை அறை. நான் கூட மனசுக்கு நிம்மதி வேணுமானால் இந்த உள்ளே தான் வந்து சித்தெ நாழி தலையை சாய்ப்பேன். உங்க மாமா கூட இந்த ரூமிலே தான் பிராணனை விட்டார். உங்க பாட்டி கூட தாத்தா போய் இருந்த பத்து வருஷம்—அதுலே கால் முடங்கி ஒரு நாலு வருஷம் இருந்து இங்கே தான் கண்ணை மூடினார். 'ஏன்,' உங்க தாத்தா பூஜை பண்ணிண்டு இருக்கிற போதே 'ஆ'ன்னாராம். பாட்டி பூஜை மணி விழுந்த சத்தம் கேட்டு என்னன்னு ஓடிவரதுக்குள்ளே சாய்ந்து விட்டாராம்.

இந்த உள்ளேயா அவர்கள் எல்லாரும் செத்துப் போனா! பின்னே தெருவிலே சாவாளா? கேள்வி கேட்கிறயே. பிறக்கறதுக்கு ஒரு உள் இருந்தால் சாக ஒரு உள் வேண்டாமா. ஆகி வந்த உள்ளுகள்னு உங்க பாட்டி சொல்வார். அவர் நாத்தனார்கள் வரிசை வரிசையாக பிள்ளைப் பெற வருவதைப் பற்றி வேடிக்கையாக சொல்வார். உங்கம்மா வந்தால் கூட, அந்த உள்ளிலே நெல் இருக்கு வேறே உள் என்கிற பேச்சை எடுத்தாலே, நெல்லைக் கொண்டு ரேழியிலே குவி என்பாள். என்னவோ அன்று கண்ட மேனி அழியாமே இருக்கு இந்த வீடு இன்னும். அத்தான் அம்மாஞ்சி எல்லாம் இந்த வீட்டை எனக்கு அப்புறம் ஏப்படி வச்சுக்கப் போறேளோ ஹும்... மாமி பெருமூச்சு நியாயமானது. வீடு பழய காலத்து வீடுதான். ஆனால், மாமி கையில் கருக்கழியாத பாத்திரம். வாலோடின வீட்டுக்கு வெள்ளியும் செவ்வாயும் வாசல்லே இருந்து கொட்டம் வரைக்கும் தன் கையால் மொழுகினால்தான் மாமிக்கு திருப்தி. மாமி வேலைக்காரி வைத்துக் கொள்ளவே இல்லை. கருவேப்பிலை செடியும், துளசிமாடமும் தீட்டுப்பட்டுடுமாம். அசத்து ஏதாவது எக்குத் தப்பாக ஏதாவது செய்து தொலைத்து விட்டதானால்? ஏன், கக்கூஸ்காரிகூட வரமாட்டாள். கக்கூஸ் இருந்தால்தானே. விசாலமான கொல்லை போதுமே. பன்னி சுத்தப்படுத்திவிடும்.

நான் பார்த்துக்கொண்டே இருப்பேன். மாமி தினசரி செய்கிறதை எல்லாம். இருட்டோடு எழுந்து—ஸ்விட்ச் போட்டு கண்ணை குத்துகிற வெளிச்சத்தை உண்டாக்க முடியாதே அப்போதெல்லாம்—ஒரு பவர்லைட் கூடத்திலே தொங்கும், 'டெயிட்ஸ்' பித்தளை ஹரிக்கேன் லைட் ஒன்று மட்டும் இருக்கும். அடுக்குள்ளில் ஒரு சுவரொட்டி, ஒரு ஷேடு கூட இருக்கும். இருந்தாலும்—மாமி ஒரு கச்சட்டி விளக்கை ஏற்றிக்கொண்டு—தரையிலே கீறினாலே பற்றிக்கிற ஜெர்மன் தீக்குச்சி உண்டு—இருட்டோடேயே வாசலுக்கு சாணம் தெளிக்கிறதிலிருந்து ஆரம்பித்து ராத்திரி நாராசத்துக் கதவிலே இருந்து ஒவ்வொரு கதவாக நாதாங்கி போட்டு பட்டாவும் போட்டு திண்டுக்கல் பூட்டை பூட்டி கூடத்து நடுவிலே பாயை விரிச்சு கட்டைப் பலகையிலே தலையை வைத்து—இத்தனை வயசுக்கு மேலே எனக்கு ஜமக்காளமும் தலைகாணியும்தான் குறைச்சல்—படுக்கிற வரைக்கும் அந்த வீடு, வீடு மாமி நெஞ்சை அடைத்துக் கொண்டிருக்கும். அம்மா, மாமியை ஒரு நாள் கேலி செய்தாளாம். மன்னியை இந்த வீட்டை விட்டு கால் நாழி அசைக்க முடியாது. அதுக்கு மாமி கேலி. போகிறபோது கொண்டு போக முடிந்தால் கொண்டு போயிடுவேன். அந்த மாதிரிதான் மாமி வீட்டை தொட்டுத் தொட்டுப் பார்த்து வைத்துக்கொண்

டிருந்தாள். இவ்வளவு இடத்துக்கு ஒரு குடித்தனம் வைத்தால் என்று யாரோ வாயெடுத்த போது மாமி வெடுக்கென, வீடு குப்பை மேடாக ஆகிவிடும் என்று சொல்லி விட்டாளாம். மாமிக்கு விளக்கு வேணும் என்கிற அவசியமே இல்லை. இருட்டிலேயே எப்படி மாமி வீடு பூராவும் சுற்றி வந்தாள்! இந்த பாதத்துக்கு ஒவ்வொரு மயிரிழை இடமும் தெரியும்டா ரகு. விரல் சரியாக எதையும் தொட்டுடும். அப்படி வைத்தது வைத்த இடத்தில் இருக்கும் மாமி வீட்டில். அந்தந்த நிலைப்படிக்குத் தக்கபடி தலை தணிந்துக்கும், கால் இடறாமல் தாண்டும். கண்மூடி திறப்பதுக்குள் மாமி மையிருட்டில் வாசலுக்கும் கொல்லைக்கும் நடந்து விடுவாள். உங்க மாமிக்கு ஒரு கண் காலிலே, இன்னொரு கண் கையிலே. இது அறுபது வயதுக்கு மாமி சொன்னது. மாமிக்கு உடம்பு தளர்ந்து தான் போச்சு, வைராக்கியம் காப்பாற்றிக் கொண்டு வந்தது. அப்படி மாமி கட்டிக் காப்பாற்றின வீடு மனையாக, அதுவும் சந்தாகி—

ஸார்! காதிலே எங்கேயிருந்தோ யாரையோ. உங்களைத்தான் ஸார்! கூப்பாடு எனக்குத் தான் போலிருந்தது. மனசுதான் இப்படி இவ்வளவு வேகமாக ஓடி இருக்கு. கண் சந்தைக்கூட பார்வையிலே. இழுத்துண்டுதோ என்னமோ. எந்த பக்கமோ திரும்பினேன். கண் தடுமாறினது. இதோ, இங்கே. சந்துக்கு இடப் பக்கத்து வீட்டுமேலே கண் துளாவியது. ஈஸிசேரில் ஒருவர்—கிழவர் தான். சாயாமல் நிமிர்ந்து உட்கார்ந்து என்னை பார்த்துக் கொண்டிருந்தார். கையில் பேப்பர். மூக்கில் கண்ணாடி. வாங்கோ. கூப்பிட்டார். எதுக்கோ. படி நோக்கி நடந்தேன் படிக்கிட்ட போகவும், வாங்கோ. உட்காருங்கோ, சந்துப் பக்கமே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேளே. எதை, யாரை தேடறேள்? கேட்கத்தான் கூப்பிட்டேன். போய் உட்கார எனக்கு தயக்கம் எதுவும் இல்லை. நமஸ்காரம் சொல்லிக் கொண்டே போய் அவருக்கு எதிரே இருந்தஸ்டூலில் உட்கார்ந்தேன். அவரை கவனித்தேன். அவரும் என்னை கவனித்தார். என்னை தெரியவில்லையா? நான் கேட்டேன். அவர் கண்களை நெருக்கி பார்த்தார். இனம் காண முடியவில்லை. சந்துப் பக்கம் விரலை சுட்டினேன். ஓஹோ, பாகீரதி மாமி பிள்ளையா? இல்லை, மருமான். சரி, சரி சுந்தரி பிள்ளையா? உன் பேர் ரகு இல்லை, இங்கே படித்தாய் இல்லே? என் ஆமாம் தலையசைப்பு. இருபத்தைந்து வருஷத்துக்கும் அப்புறம் பார்க்கிறோம், சின்ன பையன் அப்போ. ஏய், இந்தா. அவர் மனைவி வந்தாள். அடுத்தாத்து பாகீரதி மாமி மருமான் ரகு. அறிமுகப்படுத்தினார். வைரத்தோடு ஆட ஒரு அழுத்தல் பாவத்தோடு, சுந்தரி பிள்ளை. அம்மா சவுக்யமா? அம்மா காலம் ஆகி நாலு வருஷம் ஆச்சே. போயிட்டாளா? இந்த வீடு இருக்கிற வரைக்கும் வந்தால் எங்காத்து படியை மிதிக்காமல் போக மாட்டாள். நாத்தனாரும் மதனியும் ஒற்றுமை எப்படித்தான். பாகீரதி மாமியும் போனாள். வீடும் போச்சு. குங்குமம் இட்டுக்கிறமாதிரி வீட்டை வச்சுண்டு இருந்தாள் பாகீரதி மாமி. இப்போ மூத்திரச் சந்தா—நரகத்தை நாங்கள் தான் அனுபவிக்கிறோம். மாமி சொர்க்கத்திலே தான் இருப்பாள். ஆனால் இந்த வீட்டு அஞ்ஞானம் இன்னும் மாமியை விட்டிருக்காது. ஹூம்...

பாகீரதி மாமி இன்னிக்கும் இருப்பா. அந்த அடி விழுந்தது தான் தாங்கலலே. வீடு போகிறதுக்கு முந்தியே அவர் முந்திக்கொண்டு விட்டாரே. வைரத்தோடு மாமி இதெல்லாம் சொல்றபோதே என் மனசும் கூடவே நடந்ததை எல்லாம் தொடர்ந்தது. இந்த மாமிக்கு எப்பவுமே பேச்சு பிரியம். நிறுத்தாமல் சொல்லிக் கொண்டே போனாள். மாமி சொன்னதெல்லாம் நடந்தபோது நான் அங்கே இல்லை. பட்டணத்துக்கு படிக்கப் போய் விட்டேன். ரூமிலே இருக்கிற போது அப்பா கிட்ட இருந்து கடிதம் வந்தது. உங்க மாமி செத்துப் போய் விட்டாள். மூணு நாள் ஜுரத்திலே. ஒரு வாரம் ஆச்சு. நானும் உங்க அம்மாவும் வந்திருக்கோம். அப்பா என்னை வரும்படியாக சொல்லவில்லை. பெரியவர்கள் காரியத்துக்கு பெரியவர்கள் போயிருக்கிறார்கள். மாமி படுக்கையாக கிடந்தாலும் போய் பார்க்க ஆசைப்படுவதில் அர்த்தம் உண்டு. இல்லை, பெரிய அம்மாஞ்சி பட்டணத்திலே இருந்தாலும்—பம்பாய்க்கு மாற்றலாகிப் போய் விட்டான்—எனக்கு தகவல் அவனோடேயே தெரிந்திருக்கும். மாமி முகத்தையாவது பார்த்திருக்கலாம். அப்பாவோட அடுத்த கடிதம் என்னை அலட்டி விட்டது இன்னும். மாமி மதுரை வீட்டை முனிசிபாலிடிக்காரர் எடுத்துக் கொண்டு விட்டார்கள். ஏதோ உபாயமாக ஒரு விலை மதிப்பு போட்டு. உங்க அம்மாஞ்சிகளுக்கு ஏதோ பிச்சைக்காசு வரும். இருந்த வீட்டை முனிசிபாலிட்டி எடுத்துக் கொண்டு ...

வைரத்தோடு அம்மாமி, சொல்லிக்கொண்டிருந்தாள். முனிசிபாலிடிக்காரா இருந்து இருந்து பாகீரதி மாமி தலையிலேயா கை வைக்கணும். அவர் மறுப்பு. என்ன உளருகிறே. வடக்குத் தெரு தென் சரகமும் தெற்குத் தெரு வட சரகமும் ஒட்டிண்டு தானே இருந்தது. இரண்டு பக்கத்து வீட்டுக் கொல்லையும் முட்டிண்டு இருக்கும் பாதி வரைக்கும். கிழக்குப் பக்கத்திலே இருந்து ஒரு காலிமனை பாதி வரைக்கும் வந்திருக்கும். மேற்கே இருந்து பாகீரதி மாமி வீடுதான் அடைப்பாக இருந்தது. இப்போ பாரு. கடைசி வரைக்கும் ஒரே சந்து. கக்கூஸ்காரி வாசல் வழியாகத் தானே போக வேண்டி இருந்தது. இப்போ பின் வழி இருக்கு. அந்த உபத்ரவத்துக்காகத் தானே இரண்டு தெருக்காரரும் முனைந்து வேலை செய்து விடாப் பிடியாக சாதித்து விட்டார்கள்.

புரிந்தது நீங்கள் சொல்றது. பாகீரதி அம்மாமி நெஞ்சுக் குறையை சொல்கிறேன். முனிசிபாலிட்டிகிட்ட இருந்து கடிதம் வருவதுக்கு முன்னாடியே மாமியிடம் முனிசிபாலிட்டி கூட்டத்திலே இந்த மாதிரி சந்து உண்டாக்குவதுக்காக இன்ன தெரு இத்தனாம் நம்பர் வீட்டை சந்துஉபயோகத்துக்காக விலை கொடுத்து எடுத்துக்கிறதாக தீர்மானம் பாஸான சமாச்சாரம் பேப்பர்லே வந்ததாக யாரோ வந்து சொன்னா. யார் சொன்னா? நான்

தான் பேப்பரை படித்துவிட்டுப் போய்ச் சொன்னேன். உனக்கு மறந்து போச்சா. ஆமாம், நீங்கள் தான் சொன்னேள். நான் அப்புறம் மாமியை போய் பார்த்தபோது இடிந்துபோய் உட்கார்ந்து இருந்தா. மாமி கன்னத்துலே கை வைத்து உட்கார்ந்து நான் அது வரைக்கும் பார்த்ததேயில்லே. நம் ஆத்துக்கு அப்படி ஏற்பட்டிருந்தால். நானும் அப்படித்தான் இருந்திருப்பேன். ஆனல் மாமிக்கு வீட்டு மேலே இருந்த பாசம் மாதிரி—மாமி சொல்லிண்டே போனுள்—மறுபடியும் இரண்டு நாள் கழித்து நான் மாமியை பார்க்கப் போனேன். நெற்றி புடைத்து இருந்தது. பாதத்தில் கரிப்பவளம் பத்து போட்டுண்டு இருந்தா. என்ன மாமி? நேற்று ராத்திரி இருட்டிலே கொட்டத்துப் பக்கம் போகிற போது ரேழி நி ப்படியிலே கால் தடுக்கி தடுமாறி நெற்றியை கதவில் முட்டிக் கொண்டுட்டேன். நான் மாமியோடு பழகின இத்தனை வருஷத்திலே மாமிக்கு தன் வீட்டில் கால் இடறினதாக கேட்டது, பார்த்தது அது தான் முதல் தடவை. இனிமேல் தடுக்கிக்க ஆரம்பித்தாச்சு. தடுக்கிண்டேதான் இருக்கும். இது என் வீடு இல்லையே இனிமேலே. புதுசாக போகப் போகிற இடத்துலே--பெரியவன் பம்பாயிலே இருக்கான். சின்னவன் கல்கத்தாவுக்கு போவான். அங்கெல்லாம் எப்படி யெல்லாம் தடுக்கப் போகிறதோ. ஒரு தரம் தடுக்கினு அப்புறம் –?

ஆனல் மாமிக்கு அப்பறம் தடுக்கிக்க ஏற்படவே இல்லையே. என்றுர் அவர். ஆமாம் முனிசிபாலிடிக்காரர் காகிதம் அப்புறம் வந்தது. அதை எடுத்துண்டு என்கிட்டே தான் மாமி வந்தாள். நீ தானே கூட்டிக்கொண்டு வந்தே. இதுக்கு என்ன செய்யணுமோ செய்யுங்கோ. பெரியவனுக்கு எழுதி இருக்கேன். என்றுள். அவன் தான் என்ன பண்ண முடியும்? வேறே தடியடிக் காரியம், அடாதுடிக்காரன் என்றுல் கோர்ட்டு நாட்டு பார்க்கலாம். இது சர்க்கார் சமாச்சாரம். ஊர்ப் பொதுவாக செய்த முடிவு. நம்ம வார்டு கவுன்சிலரே இதுக்கு ஆதரவு. ஆமாம், அவர் வீட்டுக்கு பின் வழி வேண்டுமே. இருந்தாலும் மாமி சொன்னத்துக்காக வக்கணையாக எழுதிப் போட்டேன். நடக்கவில்லே. நடக்காதுஎன்பதும்தெரிந்ததுதான். அவர்கள் முடிவுப்படி நடந்தது. ஏதோ நடப்பு மதிப்பு என்று அவர்களே தீர்மானித்து ரூபாய், மூவாயிரமோ என்னவோ ஞாபகம், எழுதினுர்கள்.

மாமிதான் அந்த ரூபாயை கையாலே வாங்கவில்லையே. பின்னுடி பிள்ளைகள் தானே வாங்கிக் கொண்டார்கள். ஒரு நாள் மாமியை பார்க்கப் போனேன். கூடத்து ஓரத்திலே கரியடுப்பு வைத்து சமைத்துக் கொண்டிருந்தார். என்ன மாமி இவ்வளவு இடம் இருக்கிறபோது? ஆமாம் ஒண்டுக் குடித்தனம் எங்கேயாவது போயிருக்க இப்பவே கற்றுக் கொண்டால் தானே? ஆறு மாசத் தவணை கொடுத்திருக்கா அவா. பம்பாயிலே வீடு பார்த்துண்டு இருக்கானும் பெரியவன். பார்த்து கடிதம் எழுதினதும் புறப்படணும். மாமி தீர்க்கமாக மனசுலே எதுவும் உறுத்தாத மாதிரி தெரியத்தான் பேசினுள். சொல்லிக் கொண்டே எழுந்தவர் எதிர் மூலையில் எதையோ எடுக்கப் போனுர். எதையோ பார்த்துவிட்டு ஒரு கம்பை எடுத்து ஒட்டடையை அகற்றினர். பார்த்த எனக்கு மனது உழம்பினது. துளி ஒட்டடையை சகிக்காத மாமி வீட்டை—வாரிக் கொடுத்த மாதிரி விட்டுட்டு—

அப்புறம் போறபோதெல்லாம் பார்ப்பேன். வீடு வீடாக இல்லே. தரை மட்டமாக ஆகப் போகிற வீட்டுக்கு என்ன சொகுசு என்கிற மாதிரி இருந்தது. மாமி முகம் சோபையாக இல்லாதது மாதிரி வீடு சோகை பிடித்து இருந்தது. திடீரென்று உங்க அம்மாஞ்சி, சந்திரனு அவன் பெயர்—வந்து அம்மாவுக்கு ஜுரம் என்றதும் பார்க்கப் போனேன். பூஜை அறையிலே படுத்துக் கிடந்தார். ஜன்னி, பிதற்றல். மடியிலே—வீடு... உடைக்காதே. முழுசா வச்சுக்கோ... வண்டியிலே ஏற்றி... தொடாதே... தேங்காய் எங்கே... பம்... பாய்... க்... கு இப்படி. போகிற உசிரை டாக்டர் வைத்தியாலே மட்டும் இருக்க வைக்க முடியுமா? மூத்தபிள்ளை கொள்ளி கிடைக்கவில்லே. சின்னவனுவது இருந்தானே.

இதெல்லாம் உனக்கு தெரியுமோ என்னமோ என்றுர் அவர். விஷயம் தெரியும். அப்பா அம்மா சொன்னுர்கள். விவரம் தெரியாது. அதுவும் ஓடிப் போச்சு இருபத்தைந்து வருஷத்துக்கு மேலே. இப்போ யாருக்கு அதெல்லாம் ஞாபகம். அந்த சந்து ஏதோ இந்த ஊர் உண்டான திலே இருந்து இருப்பதாகத்தான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பா. அதுக்கு சரித்திரம் உண்டு என்கிறது யாருக்குத் தெரிய நியாயம்? நாங்களும் போயிட்டால். ஏன், நாங்களே மறந்து இருந்தது தானே. நீ—சம்பந்தப்பட்டவனை பார்த்ததுனலே இவ்வளவு பேச்சு, நினைப்பு—வந்ததுனலே ஒரு விஷயம். எழுந்திருந்தார், என்னையும் அழைத்தார் கூட வர. படியிறங்கி சந்துக்குப் போனேம். சந்து சுவரை காட்டினுர். பார்த்தேன். நீலத் தகட்டில் பாகீரதி அம்மாள் சந்து என்று இருந்தது. படிக்கவும் நான் திகைத்துப் போனேன். கலவரமும்கூட மனதில். அவரைப் பார்த்தேன். நான் தான் நமது கவுன்சிலர் கிட்ட சொல்லி போர்வைக்கச் சொன்னேன். நான் என்ன நினைக்கிறேன் என்பது போல் என்னை அறிய முயன்ற பார்வை காட்டினுர். எனக்கு பதில் எதுவும் சொல்லத் தோன்றவில்லை. அவரிடமும் வைரத்தோடு மாமியிடமும் மேலும் சில வார்த்தைகள் ஏதோ பேசிவிட்டு விடை பெற்றுக் கொண்டேன். சந்தை கடந்து நேர் தெருவில் போகப் போனவன், காலே மடக்கி சந்துக்குள் நடந்தேன். அந்த பெயர் தகடை பார்த்தேன் மறுபடியும். பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் எனக்கும் பிறகும் கூட மாமி மறக்கப்படமாட்டாள். அவரவர் கதை யூகித்துக் கொள்வார்கள், சந்தின் நாற்றம் மூக்கில் ஏறினது. நான் நடுவாக நடந்து கொண்டே போனேன். திண்ணை, நடை, கூடம், ரேழி, முத்தம், கிணற்றடி, கொட்டம், கொல்லே நான் பிறந்த உள் பூஜை அறை—மிதிபட்ட இடத்தை எல்லாம் மனதில் சொல்லிக் கொண்டே கடந்து மெயின் தெருவுக்கு கூடி நடந்தேன். நடக்க நடக்க தெரு சுருங்கினது.

மனிதக்கட்டு

கம்பதாசன்

மனிதக்கட்டு......

எட்டும் அறிவு !—தலை
எழுத்தில் உண்டா ?
மண்டை ஓட்டுக்
கூட்டு நிலவு,—நிலை
கலங்குவதைக் கண்டா ?
எட்டும் அறிவு...

வரம்பு கணிக்கும்
இலக்கிய உதயம்
வேலை !
விழிப்பின்
சோலை !
மொழியின்
ஆலை !

தனிப்பில் சிட்டு......

பிய்த்து எறிந்தார்—தோல்;
பிழிந்தார் சாற்றை;
ஆப்பிள் தட்டு
ஆர்ய உலவு;—மீள்
விதை, மீன்; நிலம்; காற்றை;
எட்டும் அறிவு...
இரும்பு மனிதன்
உயிரிலா இதயம்
நாளை !
பயிரிடும்
மூளை !
பசியிலா
வாளை !

கனியில் மொட்டு......

உன் கண்கள்

வல்லிக்கண்ணன்

சூழ்நிலைப் பாலையில்
வாழ்க்கை வெயிலில்
சுற்றித் திரியும்
என் கண்களுக்கு
குளுகுளு ஓயஸிஸ்
ஆயின, அன்பே !
உன்னிரு விழிகள்.

அலுவல் அலைகளில்
எற்றுண்டு இடறி,
காகிதக் கடலில்
புரண்டு தவிக்கும்
என் விழிகள்
தங்கி இன்புற
பசுமைத் தீவாய்
உதவும், பெண்ணே
உன் ஒளிக் கண்கள்.

புகலிடம்

கி. அ. சச்சிதானந்தம்

ஊர் நீங்கிய சேய்மையில்
பாலத்தின் மேல்படுத்து
போகும் நெடுஞ்சாலை.
பாலத்தின் கண்களிடையே
பால்நிலா தளுக்குக்காரியின்
பவனித் தோற்றம்
வடிந்து செல்லும் வாலிபநதி
வடிவழகியை நோக்கி ஓடுகிறது.
பாதை நீங்கிய அப்பால்

பரந்து கிடந்த பாழ்வெளியில்
பாழடைந்த மாளிகை
இடிந்து சிதைந்து
உருக்குலைந்த மாளிகை
சடைகள் முகத்தில் ஆடிடும்
கோலத்தில்—
மோனத்தவத்தில்
மாளிகை.

மாளிகை—நான்
அர்த்த நாரீசுவரன்
நாடோடிக் காற்று
கிழிந்திருந்த சாளரக் கதவை
என்னை ஆட்டுகிறது
சுடலை அமைதியில்
சுரீரென்று எழும் சப்தம்
வானமுகட்டில் முட்டி
சிதறி ஒலித்து
உயிரின் நெட்டுயிர்ப்பில்
ஓங்காரத்தில்
உருகிவிட்டது.
ஓங்கி நின்றிருந்த
ஒற்றைக்கால் பனைமரம்
ஓசையெழுப்பி
பின்சுருதி ஓட்டியது
வடிவழகி நிலாவை
வாலிப நதி......
இச்சொலிகள்
இன்பக் களியாட்டம்
முகில்திரைப் பின்னே
இடிந்த மாளிகை
என்னுள் அது
நான் அதுவாகி
அது நானாகி
இணைபிரியா நண்பர்கள்.

அக்பரும் தான்சனும்

ந. பிச்சமூர்த்தி

காவியம் — தனிப்பாடல், நாவல்—சிறுகதை போல நாடகம்—ஓரங்க நாடகம் என்ற பிரிவு. தமிழில் ஓரங்க நாடகம் ரொம்ப குறைவு. 1930—க்களில் ந. பிச்சமூர்த்தியும் கு. ப. ராஜகோபாலனும் ந சிதம்பரசுப்ரமண்யனும் ஓரங்க நாடகங்கள் சில எழுதினர்கள். ந. சி. சு. வின் 'ஊர்வசி' புத்தகமும் கு. ப. ரா. வின் 'அகல்யை' புத்தகமும் வெளியாகி இருக்கிறது. ந. பி. யின் ஓரங்க நாடகங்கள் எழுத்து பிரசுரம் வெளியீடாக வெளிவர இருக்கிறது.

பிச்சமூர்த்தியின் இந்த நாடகத்தை படிக்கும்போது, ஓரங்க நாடகம் எவ்வளவு சிறப்பாக கையாளப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும். நீர்க்காத, இறுக்கமான, வேகமும் உணர்ச்சியும் வாய்ந்த சம்பாஷணை விவகாரமாக நிகழ்வதை பார்க்கலாம். நறுக்குத் தெறித்தாற்போல் பேச்சும், ஆர்ப்பாட்டம் இல்லாத, பேசுவது போன்ற நடையும் நாடகத்துக்கு முக்யம். இந்த மாதிரி ஓரங்க நாடகங்கள் தமிழில் பெருக வேண்டும்.

காட்சி—1

(அக்பர் பளிங்கு மாளிகை முகப்பில் வெண்ணிலவில் சாளரத்தின் வழியாய் தோட்டத்தைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். முகம் அலுப்பினால் வாடியிருக்கிறது.)

அக்பர்: யாரடா சேவகன்?

(சேவகன் ஓடி வருதல்)

சேவகன்: ஹுஸூர்?

அக்: மணி என்ன?

சேவ: எட்டு ஹுஸூர்.

அக்: (அருவருப்புடன்) நமது ஆஸ்தான கவி இன்னும் என்ன செய்கிறான்? சோம்பேறி!

சே: மன்னிக்க வேண்டும், யார் ஹுஸூர்?

அக்: முட்டாள்! நமது கவி தான்ஸன் எங்கே?

சேவ: இன்னும் வரவில்லை.

அக்: (பொதுப்படையாய்) பொழுதே போகவில்லை.

சேவ: (விநயமாய்) நடனமாதர்கள் வந்திருக்கின்றனர். அழைத்து வரட்டுமா?

அக்: உஸ், வேண்டாம். தான்ஸனை அழைத்து வரச் சொல்லு.

(சேவகன் போதல்)

அக்: (தனிமையில்) தான்ஸனுக்கு சங்கீதத்தில் தெய்வப் புலமை இருந்தும் கூட அகம்பாவத்திற்கு மட்டும் குறைவில்லை.

(சேவகனும் தான்ஸனும் வருதல்)

சேவ: நான் அரண்மனை வாயில் வரையில் சென்றேன். எதிரே தான்ஸன் வேகமாக வந்து கொண்டிருந்தார். இதோ அழைத்து வந்திருக்கிறேன்.

(தான்ஸன் தன் பட்டுடையால் வியர்வையை துடைத்துக் கொள்கிறான்)

அக்: (பார்த்து விட்டு) (மனதிற்குள்) பாவம்! (வெளிப்படையாய்) ஏனய்யா காலத்தில் கிளம்பி இருந்தால் சிரமமின்றி வரலாமே! அதை விட்டு விட்டு ஊர் சுற்றித் திரிந்து நாழிகை கழித்துக் கிளம்பினால் உடலுக்கு வீண் வருத்தம் தான்.

தான்ஸன்: ஹுஸூர், நதிக்கரை யோரத்தில் உட்கார்ந்து நீரின் மேல் நிலாக் கதிர்கள் வெள்ளி வேலை செய்து கொண்டிருப்பதைப் பார்த்து மெய் மறந்து தன்மயமாய் விட்டேன். அரண்மனை தாஸ் பளீர் என்று கன்னத்தில் அறை விழுவது போல், எட்டு மணி அடித்ததும் விழுந்தடித்து ஓடோடியும் வந்தேன். ஹுஸூர், நேரமானதற்கு மன்னிக்க வேண்டும்.

அக் : போகட்டும். சேவகா, கவி தான்ஸனுக்கு பாரசீகத்து மாதுளையும் ரோஜா ஷர்பத்தும் கொண்டுவா—

(சேவகன் அவைகளை ஒரு தட்டில் கொண்டு வருகிறான்)

அக் : கொஞ்சம் சிரமபரிஹாரம் செய்து கொள்ளும்.

(தான்ஸன் அவைகளை ருசி பார்க்கிறான்)

அக் : ஐயா, பொழுதே நகரவில்லை. கொஞ்சம் பாடுங்கள்.

(தான்ஸன் தொண்டையை சரி செய்து கொண்டு சாரங்கியை வாசித்துக்கொண்டு பாடுகிறான்)

அக் : ஆஹா ! (மறந்து) அப்பா தான்ஸன் ! இந்த அமிருதத் தொனி எங்கே சம்பாதித்தாய் ?

தான் : இதென்ன பிரமாதம் ?

அக் : தன்னையே குறைவாகப் பேசிக் கொள்வது நல்லதல்ல. நினைப்பதற்கு எதிரிடையான பலன் கொடுக்குமே தெரியாதா ?

தான் : ஹுஸூர் ! சமஸ்தானத்திற்குள் நான் தான் மேதை என்று நீங்கள் நினைக்கிறீர்கள் போலும் ! ஆனால் உண்மை அப்படியல்ல சூரியன் முன் விளக்கு போல என்னை ஆக்கக் கூடிய ஒரு பெரியார் இருக்கிறார். அட்டா ! அவர் பாட்டுக்கும் என் பாட்டுக்கும் தெய்வக் கணிகையின் சிலம்பொலிக்கும் நாய் குரைப்பதற்கும் உள்ள தாரதம்யம். ஆலையில்லா ஊருக்கு இலுப்பப்பூ சர்க்கரையாம் !

அக் : (ஆவலுடன்) அந்த சூர்யன் யார் ?

தான் : என்னுடைய குரு மகராஜ்.

அக் : அவர் பெயர் ?

தான் : என் வாயால் சொல்லும் வழக்கமில்லை.

அக் : எழுதிக் காட்டலாமா ?

தான் : (ஸ்ரீ ஹரிதாஸ் ஸ்வாமி என்று எழுதிக் காட்டி விட்டு குருமகராஜ்! (என்று சொல்லி கண்ணீர் விடுகிறான்.)

அக் : ஆனால் தங்கள் குருவின் பாட்டை நான் கேட்க வேண்டாமா ?

தான் : கேட்கலாம்.

அக் : சரி, உடனே அவரை வரவழையும்.

தான் : ஹுஸூர் ஏதோ ராவணன் என்று ஒருவன் சந்திர சூர்யர்களை தன் பணிக்கென்று அமர்த்தியதாக கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த ராவணன் உயிருடனிருந்து கூப்பிட்டனுப்பினால் கூட என் குரு மகாராஜ் அசைய மாட்டார்.

அக் : ஏனோ ?

தான் : அவருக்கு இவ்வுலகமே துச்சம். நாம் சொல்லி அனுப்பியா அவர் வருவார்.

அக் : ஆனால் அவரும் அகம்பாவக்காரர் தானோ ?

தான் : (கடுமையாக) அவ்வார்த்தையை உடனே வாபீஸ் வாங்கிக் கொள்ளும். எங்கள் குரு மகராஜ் ஒரே அரசனுக்குத்தான் அடிமை. ஏக சக்ராதிபதி என்றால் ஒருவரைத் தான் அறிவார்.

அக் : (சிறிது அதட்டிய குரலில்) என்ன ?

தான் : ஆம் ஹுஸூர். அந்த ராஜாதிராஜன் பெயர் ஸ்ரீ கிருஷ்ணன்.

அக் : (உடனே தணிந்து) ஓ அப்படியா ? ஆனால் சரி.

தான் : அது மட்டுமல்ல. எங்கள் குருவுக்கு லோகப்பிரஞ்ஞை கூட அதிகமாகக் கிடையாது. அவர் ஸதா வசிப்பது பிருந்தாவனத்தில், அவர் சதா உரையாடுவது கிருஷ்ணனோடு, அவர் பாடுவது பக்தி பரவசத்தோடு.

அக் : ஆனால் அவருக்குத் தயை, தாக்ஷண்யம் ஒன்றும் கிடையாதா ?

தான் : உலகின் அம்புறாத்துணியிலுள்ள பல விஷ அம்புகளில் தயை, தாக்ஷண்யம் என்பதும் சேர்ந்திருக்கிறது. ஆண்டவனை நாடுபவருக்கு இந்த அம்புரா எதற்குத் தேவை ?

அக் : (திகைப்புற்று) அப்பொழுது என்ன செய்யலாம் ?

தான் : வேண்டுமென்றால் நாம் அங்கே போக வேண்டியது தான்.

அக் : சரி எப்போது போகலாம் ?

தான் : இஷ்டமிருந்தால் இப்பொழுதே போகலாம்.

அக் : எங்கே போக வேண்டும் ?

தான் : யமுனை நதிக்கு.

(இருவரும் கிளம்புகிறார்கள்)

காட்சி – 2

(ஸ்ரீ ஹரிதாஸ் ஸ்வாமி யமுனை ஆற்றங்கரையில் ஒரு கொன்றை மரத்தடியில் நின்று மரத்தை நோக்கி பாடிக் கொண்டிருக்கிறார்.)

ஸ்ரீ ஹரிதாஸ் :

தாமதம் ஏனோ ?
கண்ணா, கிருஷ்ணா (தா)
நானிங்கு நிலவினில்
மண்டிடும் காதல் கொண்டு
வீணிங்கு நின்று கொல்லும்
காலத்தை தூற்றிநிற்க (தா)
கண்ணும்தான் பூத்துப்போச்சு
காதும்தான் கும்மென்றாச்சு
மண்ணான ஏழை நெஞ்சம்
பதைக்குதே ஏக்கத்தாலே (தா)
இலைகள் பூ அசையவும்
பொன்னோசை பிறக்கவும்
கோலக் குழலிசை யென்று
ஆவிதான் மயங்கவும் (தா)
உடலில் பிரேமை வெப்பம்

கொண்டு குதித்து ஓட
கடலில் கலக்கும் நீர்போல
காதல் நான் தீர்வதெப்போ (தா)

(தான்சனும் அவனுடைய சாரங்கியை எடுத்துக் கொண்டு அவனுக்குப் பின்னால் ஒருவனும் வருகிறார்கள்.)

தான் : மஹாராஜ்! கேட்கிறதா கீதம்? தங்கள் நெஞ்சம் தங்கள் வசமிருக்கிறதா?

(அக்பர் ஆடி வழிந்து கண்களைமூடிக்கொண்ட வண்ணம் பதில் சொல்லவில்லை)

தான் : மகராஜ்!

அக் : (திடுக்கிட்டு) நண்பா! மஹராஜ் என்று அழைக்காதே. இங்கே என் வேஷம் ஞாபகம் இருக்கட்டும்.

தான் : அவருடைய குரலைப் பார்த்தீரா? கிருஷ்ண பரவசத்தில் உருகி ஓடும் உள்ளமல்லவா இன்ப ஒலியாய் மலர்கிறது, ஆ!

அக் : நண்பா இங்கே பார். இந்த ஊன் வீட்டிலிருக்கும் குருட்டுக் குளவி கூட ஆண்டவனின் இன்ப வெளியில் சிறகு விரிந்து விட்டதே. என்ன மகத்வம் தன் குருவுடையது!

(இருவரும் ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமிகள் சமீபத்தில் வருவதற்குள் பாட்டு நின்று போய் விடுகிறது)

அக் : என்ன துர்பாக்கியம் நமக்கு?

தான் ஆம், முற்றிலும் உண்மை. நாம் கதறினாலும் அவர் நமக்காக மறுபடி பாடமாட்டாரே. இனி ஒரு மணி நேரம் அப்படியே அழும் குழந்தை போல், மழைக்கால மேகம் போல், அவர் நெஞ்சில் சோகம் குமுறுமே. விம்மல் பாட்டை தடை செய்யுமே.

அக் : என்ன செய்வோம்?

தான் : அவரை வந்தனம் செய்வோம். பிறகு ஆண்டவன் அருள்?

(இருவரும் சுவாமிகளின் முன்னால் வந்து வந்தனம் செய்கிறார்கள். சுவாமிகள் கனவிலிருந்து திடுக்கிட்டு விழித்தவர் போல் தான்ஸனை பார்க்கிறார்.)

ஹரி : அப்பா இந்த நேரத்தில் எங்கே வந்தாய்?

தான் : தங்கள் தரிசனத்திற்காகத்தான்.

ஹரி மடப்பையா! என்னை என்னடா பார்வை? நீலமேக சியாமளனைப் பாரடா!...அதோ... பார்! சந்திரனென்னும் ஒளி மலையினின்று நீல நிற ஆகாயத்தில் குதிப்பதை...நீஞ்சுவதை...அட்டஹாசம் செய்வதை.. அதோ... இதோ (அப்படியே லயித்துப் போகிறார்) (தான்ஸனும் அக்பரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறார்கள்)

அக் : இது உன்னால் வந்த பிசகு.

தான் : ஆம். இனி என்ன செய்யலாம்? அவர் பிருந்தாவனத்திற்குப் போய்விட்டாரே.

அக் : அவர் பாட்டு இன்னும் கொஞ்சம் கேட்காவிட்டால் ஆசை தீராது.

தான் : (தலையை சொரிந்துகொண்டு) பின்னொரு நாள் பார்த்துக் கொள்வோமே.

அக் : பசி வேளையில் ஒரு கவளம் சாப்பிட்டால் காட்டுத் தீ போல் பசி கோரமாய் கிளம்புவது தெரியுமா? அதைப் போல் இருக்கிறது எனக்கு. மறுபடி பாட்டுக் கேட்காமல் திரும்பிப் போக இயலாது.

தான் : (பெருமூச்சுடன்) ஹூம்! பார்ப்போம். எங்கே அந்த சாரங்கியை கொடுங்கள். (தான்ஸன் பாடுகிறான்)

ஹரி : (திடுக்கிட்டு) கண் விழித்து (கோபமாய்) யாரடா அவன் கிருஷ்ணனை சித்ரவதை செய்வது? நீயா.. பாபி. மகா பாபி...சொல்லிக் கொடுத்த வித்தையை யெல்லாம் கும்பியில் கொட்டி விட்டாயே, (அமைதியாய்) ஹே! கிருஷ்ணா! பையனை மன்னித்து விடு. என்னையும் மன்னித்து விடு. (ஹரிதாஸ் அழுதுகொண்டே பாடுகிறார்.)

(அக்பர் கண்ணில் நீர் வடிகிறது ஸ்தம்பித்து நிற்கிறார். தான்ஸன் வணக்கமாக கை கூப்பி யிருக்கிறான்)

ஹரி : அப்பா தான்ஸன், அவர் யார்? பக்த லக்ஷணம் பொருந்த பரவச மடைகிறாரே.

தான் : குரு மகராஜ்! அவர் தான் டில்லி பாச்சா. மொகலாய ஏக சக்ராதிபத்யத்தின் தலைவர், அக்பர்.

ஹரி : அப்படியா? நான் கேள்விப்பட்டதே இல்லையே.

அக் : நல்லவேளை!

தான் : தங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

ஹரி : (சந்தேகத்துடன்) இவர் யாரென்று சொன்னாய்?

தான் . ஏக சக்ராதிபதி அக்பர் என்றேன்.

அக் ; மஹாராஜ்! தான்ஸன் சொல்வதைக் கேட்க வேண்டாம். நான் ஒரு செறுக்குப் படைத்த மூடன்.

ஹரி : ஆ, உம்முடைய பேச்சு எனக்குப் புரிகிறது. புத்தி உள்ளவன் ஒருவன் தான் உண்டு. செறுக்கில்லாதவன் ஒருவன் தான் உண்டு. அவனை நாங்கள் கிருஷ்ணன் என்போம். நீங்கள் ஆண்டவன் என்கிறீர்கள். அவனை உருகிப் புகழ்ந்து பாடினால் கடைத்தேறி விடலாம்.

அக் : தங்கள் அநுக்ரகம்.

ஹரி : (ஏதோ ஞாபகப்படுத்திக்கொண்டு) பையா இன்று வரையில் சங்கீதத்தில் பிசகு செய்யாதவன் இன்று ஏன் செய்தாய்?

தான் : மஹாராஜ்! அக்பர் மன்னர் தங்கள் கீதத்தை கேட்க வேண்டுமென்ற ஆவல் கொண்டார். இங்கு அவரை அழைத்து வந்தேன்.

ஹரி : சரி!

தான் : நாங்கள் சமீபத்தில் வந்த பொழுது 'தாமதம் ஏனோ' பாடி முடிந்து பிரேமை வெள்ளத்தில் மூழ்கி விட்டீர்கள். கால்வயிறு சாப்பிட்ட

வனுக்கு ஏற்படும் அதிருப்தி அரசனுக்கு ஏற்பட்டது. மறுபடி பாடும்படி தங்களை நானு கேட்பது என்று இந்தத் திருசமம் செய்தேன். மன்னிக்க வேண்டும்.

ஹரி : அட கிருஷ்ணு ! திருசமம் செய்தாலும் அப்பா ? கேவம் நரனுக்காகவா செய்ய வேண்டும் ?

அக் : மன்னிக்க வேண்டும். அந்தப் பாவம் என்னைச் சேரட்டும் (வந்தனம் செய்கிறுன்)

ஹரி : போகட்டும் (மறுபடியும் பாடுகிறுர்.)

(அக்பரும் தான்ஸனும் ஸ்வயப்ரக்ஞையை இழந்து போகிறுர்கள்)

காட்சி—3

(அக்பரும் தான்ஸனும் அரண்மனைக்குத் திரும்பிப் போய்க் கொண்டிருக்கும் பாதை)

அக் : நண்பா ! நீ கொடுத்து வைத்த மஹாராஜன்.

தான் : ஏன் ?

அக் : ஹரிதாஸரைப் போன்ற குருவை அடைய.

தான் : ஆண்டவன் அருள்.

அக் : அது மட்டுமல்ல. வேறு காரணமும் இருக்கிறது. ஒரு பாட்டுப் பாடு சொல்கிறேன்.

தான் : பிறகு ஆகட்டுமே.

அக் : கூடாது, இப்பொழுதே பாடு.

தான் : (அதிருப்தியுடன்) பாடத்தான் வேண்டுமா ?...சரி.

(பாடுகிறுன்)

(மேலே நடந்து போகிறுர்கள்)

அக் : நண்பா ! வாஸ்தவமாய் உன் பாட்டு உன்னுடைய குருவின் பாட்டிற்கு ஒருக்கால் அடுத்தபடியே அல்லாது அதற்கு வேறு ஈடில்லை.

தான் : அதுவும் அவர் அருள் தான்.

அக் : நண்பா ! அவருடைய பாட்டில் மட்டும் ஏன் அவ்வளவு இன்ப சோகமும் பூர்ண சுயேச்சையும் ததும்புகிறது ?

தான் : (வணக்கத்துடன்) எனக்குத் தெரியாது, மஹராஜ்.

அக் : (அவநம்பிக்கையுடன்) முகத்தைப் பார்த்தால் நீர் ஏதோ மறைப்பதாகத் தெரிகிறது. காரணத்தைச் சொல்லிவிடும்.

தான் : அதைச் சொல்லக் கூடாது. வேண்டாம்.

அக் : ஏனே ?

தான் : வீண் மனஸ்தாபம் வரும். வற்புறுத்த வேண்டாம்.

அக் : யாருக்குள் ?

தான் : நமக்குள்ளே, அதனுல் தான் வேண்டாமென்று சொல்லுகிறேன்.

அக் : சும்மா வரட்டும். வெறும் சொற்களைக் கூடத் தாங்காத நமது நட்பு ஒரு நட்பா ? உள்ளிப்பூண்டின் தோலைப் போல் நட்பு இருப்பதைவிட அது இல்லாமல் இருப்பது மேல். சும்மாச் சொல்லு.

தான் : மஹராஜ்.!

அக் : இனி உமக்கு நான் மஹ்ராஜனல்ல தெரிந்ததா ?

தான் : (ஒரு நிமிஷம் அக்பர் முகத்தைக் குறிப்பறியப் பார்க்கிறுன்.) சரி பாய் ! என் குருநாதர் கிருஷ்ணனைத் தவிர வேறு எவருக்கும் எவ்வித சேவையும் செய்வதில்லை. மனிதனை நம்பி அவர் வாழவில்லை. ஆகையால் தான் முக்தனுடைய இரண்டற்ற ஆனந்தமும் சுயேச்சையும் ஒளியும் அவர் பாட்டின் உயிர்ச்சத்தும் உணர்ச்சித் தீயுமாகி நிற்கின்றன. அவர் யாருக்கும் ஜவாப் சொல்லத் தேவையில்லை யல்லவா ? சித்தம் போக்கு சிவம் போக்கு.

அக் : ஆனுல் நீரோ ?

(தான்ஸன் மௌனமாய் நிற்கிறுன்)

அக் : ஒ ! அப்படியா விஷயம். அரண்மனைக்கு நீர் தினந்தோறும் வரவேண்டிய கடமையை இன்றுடன் ரத்து செய்து விட்டேன். உம்முடைய இஷ்டப்படி வரலாம் வராமலிருக்கலாம். உம்முடைய கீதம் கேட்க எனக்கு ஆசை உண்டாகும் போது நானே வந்து விடுகிறேன். தெய்வகீதம் பிறப்பதற்கு பூரண சுயேச்சையும் தேவை யென்று இது வரையில் அறியாத அக்பரை ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமிகள் மன்னிக்கட்டும். நண்பரே, நீரும் இனி ஸ்ரீ ஹரிதாஸர் போலாகி விடுவீர். இது வரையில் கவி உள்ளத்தை விலங்கிட்டு ஒடுக்கிட்டு ஒடுக்கிய குற்றத்திற்காக என்னை மன்னிப்பீரா ?

தான் : நண்பரே ! அது வெகு பெரிய பேச்சு மன்னிக்கும் தொழில் கடவுளுடையது, என் குரு போன்ற உண்மை பக்தர்களுடையது. பிரேமா பக்தியை போற்றுவோம். அது நமது உள்ளத்தில் பிறக்கட்டும்.

(தான்ஸன் பாடுகிறுன்.)

தோல்வி

எழில் முதல்வன்

குத்தின கண்ணியில் காடைகள் விழுந்தன
போட்ட தூண்டியில் மீன்கள் சிக்கின
பிடிபட்டன, கிடைத்தது வெற்றியே
ஆனுல்,

சொல்வலை சுழற்றி வீசியும்
பெருகும் எண்ணம் பிடிக்குள் விழவில்லையே
வழுக்கிச் சென்றன, வந்தது தோல்வியே

மூளைக்கு ஓய்வு தேவை

பு. ந. கண்ணன்

எங்கள் அலுவலகத்தில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த குமாஸ்தாவுக்கு தாளும் பென்சிலும் வேண்டும் என்று சக குமாஸ்தா என் மேஜைக்கு முன்னால் வந்து நின்றான். நான் அந்த அலுவலகத்தின் அலுவலக உபகரணப் பிரிவின் பொறுப்பாளி. பதவியின் நீண்ட பெயரைக் கண்டு பதவியின் அந்தஸ்தை கனமாய் மதிப்பிட்டு விடுவது ஓதிய மாத்தைக் கண்டு உத்திரத்திற்கு ஆகும் என்று சொல்வது போலத் தான். அவனைப் போல நானும் ஒரு குமாஸ்தா தான்.

குமாஸ்தா என்றால் என்ன; சுயமதிப்பு என்றுஒன்று இருக்கிறதல்லவா? அதை விட்டுக் கொடுக்காமல் :'போய் அந்த ஆளைக் கொண்டாய்யா, அந்தப் பயலை முதலில் எனக்கு அறிமுகப்படுத்தி வையும். பிறகு தாளும் பென்சிலும் தருகிறேன்'' என்று 'பயல்' என்றதற்காக அவன் தவறாக மதிப்பிட்டு விடக் கூடாது என்பதால் சிரித்துக் கொண்டே சொல்லி அவனை அனுப்பி வைத்தேன்.

அவன் போய்ப் புதியவனைக் கொண்டு வந்தான். பயல் எனக்குப் புதியவனல்ல. எங்கள் ஊர்க்காரன்.வேலைக்காக பேட்டிக்குவந்தவர்களில் இவன் ஒருவனல்லவே? இவன் எப்படி இங்கு இப்படித் 'திடீரென வந்து குதித்தான்?'

''டேய்'' என்னடாது புதிராயிருக்கு ''எப்படி இங்கு எப்படித் திடீரென்று?'' என்றேன்.

''சிபாரிசு'' என்று சிரித்துக்கொண்டே பக்கத்தில் நின்றவனைப் பார்த்தான் அவன்.

அவனைப் பார்த்து நான் சொன்னேன், ''எங்கள் ஊர்க்காரன். சின்ன வயசில் ஒன்றாக ஓடிப் புடுச்சு விளையாட கூறை மேலே காட்டுப் பூனையைப் போல ஏறியவர்கள் நாங்கள். எனக்குத் தெரியாமலே வந்து கூரையைப் பொத்துக் கொண்டு குதித்து விட்டான் பார். கடைசியில் உனக்கு இவனை நான் அறிமுகப்படுத்த வேண்டியதாயிற்று பார்த்தாயா?'' என்று.

''சரி . பேசிக் கொண்டிருங்கள்.. நான் போய் வேலையிருந்தால் பார்க்கிறேன்'' என்று அவன் போய் விட்டான். 'என்ன அப்படிச் சொல்லி விட்டுப் போகிறாரே!' என்பது போலப் பார்த்தான் என் நண்பன்.

நான் சொன்னேன். ''இங்கு வருபவர்கள் எவ்வளவு நேரமானாலும் நின்று கொண்டு பேசலாம். ஆனால், திடீரென்று ஆபீஸர்கள் யாராவது வந்து விட்டால் உடனே சட்டென்று 'நல்லா கறுப்பா எழுத, பென்சிலா இருந்தா கொடுங்க. நீங்க கொடுத்த பென்சில்லாம் வெள்ளையா எழுதரது' என்று மட்டும் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பவன் போல் இயல்பாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டும். இந்தக் கலை இங்கு எல்லோருக்கும் கை வந்த சரக்கு'' என்று.

''அந்த நாடகத்தை இன்றிலிருந்தேவா தொடங்க வேண்டும் என்கிறாய்'' என்றான் நண்பன்.

''இன்று முடியாது. இன்னும் உனக்கு நான் பென்சிலே தரவில்லையே...பிறகு எப்படிக் கருப்பாய் எழுதர பென்சிலாய்க் கேட்பது. பென்சிலையும் தாளையும் கொடுத்து அனுப்பி வைத்தேன்.

பயல் அன்று நடுப்பகலில் என் அறையில் சிகரெட் குடிக்க ஆரம்பித்து விட்டான். என் அறை எல்லோர் பார்வையிலிருந்தும் மறைவாக இருந்தாலும் ஒருக்களித்த கதவின் இடுக்கு வழியாகப் பிறர் நடமாட்டத்தைப் பார்க்க முடியும் என்பதாலும் எல்லோரும் என் அறையிலேயே சிகரெட்டுப் பிடிப்பார்கள். அறை ஒதுக்குப் புறமாய் இருந்தது. ஒருவகையில் வசதியாக இருந்தாலும் சிகரெட்டுப் பிடிப்பவர்களுக்கு நான் தீப்பெட்டி தர வேண்டியிருந்ததால் தினம் ஒரு பெட்டிவாங்க வேண்டிய நஷ்டம் இருந்தது. மறுநாளில் இருந்து இடை வேளையில் என் அறையிலேயே சாப்பிட ஆரம்பித்து விட்டான். பிறகு அவனுக்கு வசதி

யான போதெல்லாம் என் அறைக்கு எழுந்துவர ஆரம்பித்து விட்டான்.

சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் அவன் என் அறைக்கு வந்தபோது நான் எழுதிக் கொண்டிருந்தேன். அவன் நிழல் வாயிற்படியில் தட்டுப் பட்டவுடன் பிரித்து வைத்துக்கொண்டு எழுதின ஃபைலை மூடிவிட்டேன். (ஆண்டவன் மனித நிழலுக்கும் குணத்தைக் கொடுத்திருக்கக் கூடாதா?)

''வேலை ரொம்ப அதிகமோ?'' என்று சொல்லிக் கொண்டே வந்தான்.

''இல்லை, கதை தான் எழுதிக் கொண்டிருக்கிறேன்.''

''ஒகோ கதை கூட எதுதுகிறாயா? இது நல்ல உத்திதான். ஃபைலுக்கு இடையில் வைத்துக் குமுதம் படிப்பதைவிட இது இயல்பாக இருக்கும். கருப்பர்க எழுதும் பென்சிலாய் கணக்கு எழுதுவது போலவும் இருக்கும்'' என்று சிரித்தான். பிறகு ''இப்படி ஒன்று எழுதேன். 'மூளைக்கு ஓய்வு தேவை என்று' என்றான்.

''ஏன் உன் மூளை வேலை செய்து அலுத்து ஓய்ந்து விட்டதா?'' என்று நான் சிரித்தேன்.

''வேலை செய்யத் தொடங்கி இருந்தால் தானே அலுத்துப் போவதற்கு.''

''அப்பொழுது உனக்கு ஓய்வு தேவையில்லை.''

''ஓய்வு தேவையில்லை என்றால் தொடர்ந்து உழைக்க வேண்டும் என்று அர்த்தமில்லையா?''

''உன் மூளை தூங்கிக் கொண்டிருக்கிறது என்று பொருளாகுமே'' என்று சிரித்தான்.

''அதை எழுப்பிவிட வேண்டும்'' என்றேன்.

''அப்பொழுது உழைக்கச் சொல்கிறாய் அல்லவா'' என்றான்.

''ஆமாம். உன்னை மட்டுமல்ல தமிழர்களையே உழைக்கச் சொல்கிறேன். ஏனெனில் தமிழர்களின் மூளை காலக் கிரமத்தில் சிறுத்து விடுமோ என்று அஞ்சுகிறேன். மனிதனுக்கு வால்போன மாதிரி தமிழனுக்கு மூளைபோய் விட்டால் என்ன செய்வது என்ற பயம் தான் காரணம்'' என்றேன்.

''ஒகோ தமிழனைச் சிந்திக்கச் சொல்கிறாயா?''

''ஆமாம்.''

''அது கொஞ்சம் கஷ்டமான காரியம் தான். முதலில் சிந்தனை என்றால் என்ன என்று இலக்கணம் சொல்லித் தர வேண்டும் பிறகு இன்றைய மரபுக் கவிதை போல் அவர்கள் சிந்திக்க ஆரம்பித்து விடுவார்கள்'' என்றான் நண்பன்.

அப்பொழுது தான் என் நண்பன் மேல் எனக்குப் பயம் தோன்ற ஆரம்பித்தது. 'என்னைவிட அவனுக்கு நன்றாக எழுத வரும் போலிருக்கிறதே!

அவனுக்கு இலக்கணம், மரபுக் கவிதை என்றெல்லாம் பேசத் தெரிகிறது, ஆகவே, அவன் எழுத ஆரம்பித்தால் உடனே அவனை (அங்கீகரித்து) ஒப்புக் கொண்டு விடுவார்கள்,' என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும் போதே நண்பன் எதிரே சுட்டிக் காட்டினான். அங்கே எங்கள் அலுவலகத் தோட்டக்காரன் அழகாக வளர்க்கப் பட்டிருந்த புல் தரையின் ஓரமாய் சுவரின் பக்கம் ஒரு மூலையில் முளைத்திருந்த வேப்பங்கன்றை வெட்டிக் கொண்டிருந்தான்.

''அவனுக்கு வன மகோற்சவத்தைப் பற்றி என்ன தெரிந்திருக்கப் போகிறது'' என்றேன்.

''வன மகோற்சவத்தைப் பற்றி எனக்குக் கூட கவலை இல்லை. வேப்பங்காற்று உடம்புக்கு நல்லது என்று தான் கவலைப்படுகிறேன்'' என்றான்.

''வேப்பங்காற்றுக்கு ஆசைப்படுபவர்களாக இருந்தால் கூட வரவேற்க வேண்டியது தான், வேம்பாக இருந்தாலும் அது மரம் தானே அவை அடர்ந்து வளர்ந்தால் அது காடு தானே! இல்லையா?''

''இவன் கிராமத்துக்காரன் இல்லையா?''

''ஆமாம்...அதனால் தான் இத்தனை தூரம் அதுவரை விட்டு வைத்திருந்தான் என்று தோன்றுகிறது.''

'இப்பொழுது மட்டும் என்ன வந்து விட்டது?'' என்று கேட்டான் நண்பன்.

''ஆபீஸர்கள் பார்த்து வெட்டச் சொல்லியிருக்கலாம்.''

''ஆமாம்...அதுவும் சரிதான். அவர்களுக்கு அறையில் பச்சை வர்ணம் அடித்து அதில் சில கொடிகளை வரைந்து விட்டால் போதும் சில பீங்கான் பறவைகளை வரைந்த மேகங்களுக்கு இடையிலே ஒட்டி வைத்து விடலாம். பீங்கான் தொட்டிகளை அடித்து அதில் சில பிளாஸ்டிக்குப் பூக்களை சொருகி வைத்து விடலாம். குளிர்சாதன வசதி இருக்கவே இருக்கிறது பிறகு இளந்தென்றலில் பூமணம் கலந்து வரும்'' என்று சிரித்தான் நண்பன்.

''உங்கள் கிராமத்துக்காரர்கள் கூட அப்படித் தான் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.'' என்றேன் நான்.

''அதெப்படிச் சொல்ல முடியும். முன்பை விட கிராமம் இப்பொழுது பசுமையாகத்தான் இருக்கிறது பணப் புழக்கம் வந்து விட்டது.'

''ஆமாம் ஆமாம். நம் ஊர்ச் சிவன் கோயிலுக்குப் பக்கத்துத் தோப்பை—இலுப்பைத் தோப்பை—ஏலம் போட்டு பணம் பண்ணி விட்டார்கள் இல்லையா? அதை அவர்கள் பங்கு போட்டுப் புழங்கிக் கொண்டிருக்கிறார்கள் போலும்.'

''பத்து வருஷமாக அந்த இலுப்பைத் தோப்புக் காய்க்கவில்லை.' மரங்கள் கிழடு தட்டி

விட்டனர் என்று தெரியாதா உனக்கு" என்று கேட்டான் நண்பன்.

''தெரியும் இப்பொழுது வெட்டி ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. கீழ் நிலம் பொட்டையாகிவிட்டது. ஊர் மக்கள் அங்கு மலம் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அது போகட்டும். கோயிலுக்குப் போகும் வழியில் இருந்த பூவரசந்தோப்பு என்னவாயிற்று? இருட்டாக இருக்குமே. மழைக் காலத்தில் சதுப்பு நிலம்போல இருக்குமே. நாம் சின்னக் குழந்தைகளாக நடந்தபோது ஆடுமே. பூமி ஆடுவதைக் கண்டு இன்னும் வளைய வளைய வந்து குதிப்போமே அதை ஏன் வெட்டினார்கள்?''

''அது தனி மனிதனுக்குச் சொந்தமானது. அதை வெட்டுவதும் வெட்டாததும் அவன் இஷ்டம்' என்றான். பிறகு கொஞ்சம் யோசித்து விட்டுச் சொன்னான். ''அதில் கொசு உற்பத்தியாகிறது என்று நீண்டநாளாக ஊரில் பேசிக் கொண்டார்கள். அதையும் முதலில் கண்டுபிடித்தவர் நம் பஞ்சாயத்துப் போர்டு தலைவர்தான். நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். அவர் தான் கடைசியில் அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டார்.''

''அதுவும் உண்மைதான். அவருக்கு இரண்டாவது காளவாய் போடுவதற்கு மரம் தேவையாக இருந்தது. முதல் காளவாய்க்கு இலுப்பைத் தோப்பு. மூன்றாவது காளவாய்க்குச் சாலை ஓர மரங்கள். நாலாவது காளவாய்க்குள் அவர் திடல் நன்செய் நிலமாக மாறிவிடும். கிராம சுய ஆட்சி நல்ல திட்டம்தான். சில பெருமாள் பிள்ளைகள் பெத்த பெருமாள் பிள்ளைகள் ஆவதற்கு இந்த பஞ்சாயத்துப் போர்டுகள் மிகவும் வசதியாக இருக்கின்றன. பஞ்சாயத்துப் போர்டு குப்பை வண்டி நிலத்துக்கு எருவடிக்கவும் பயன்படும். பிரசிடெண்ட் வீட்டு மாடுகள்தான் கிராமத்தில் பருத்திக் கொட்டை தின்கின்றன. ஏன்னா பஞ்சாயத்து போர்டு மாடுகளுக்கு அரசாங்கத்தில் பருத்திக் கொட்டை கொடுக்கிறார்கள். பஞ்சாயத்துப் போர்டில் கிராமத் தொழிலை வளர்ப்பதால் காளவாய்போட முடிகிறது. காளவாய்க்கு பூவரசந்தோப்பை வெட்டும் போது மேஜை நாற்காலியும் செய்து கொள்ள முடிகிறது. இல்லேன்னா...அவருக்கு பத்துமா நிலம் ரெண்டு அஞ்சு வருஷத்திலே எப்படி ஒன்றறை வேலியாச்சு... கிராமம் சுபிட்சமா இருக்கு ..ரொம்பப் பசுமையாய் இருக்கு. அவரு வீட்டுக்குக் கூட பச்சை வர்ணம் தீட்டி இருக்காரு...கொடிபோட்டு இருக்காரு. மேஜை மேலே இரண்டு மாட்டுக் கொம்புக் கொக்குகள் குனிஞ்சு மீன் புடிச்சிக் கிட்டிருக்கு' என்று கொஞ்சம் கோபமாகவே சொன்னேன்.

''நண்பா எனக்கு ஒரு சந்தேகம்'' என்றான் அவன்.

''என்ன?'' என்றேன்.

''இதற்குப் பெயர் தான் சிந்தனையா? இது கவலையல்லவா? தமிழ்ச் சமுதாயம் இப்படி ஆகிவிட்டதே என்று நீ கவலைப்படுவதாக அல்லவா எனக்குப் படுகிறது. ''அதனால் உனக்குக் கோபம் வருகிறது'' என்றான் நண்பன்.

அப்பொழுது தான் எனக்கு உண்மை புரிந்தது. ''ஆமாம். அவன் சொன்னது உண்மை தான். இதற்குப் பெயர் எப்படிச் சிந்தனை என்று ஆகும். கவலைகள் அல்லவா?'' 'ஆமாம் நண்பா... உண்மை தான். மூளைக்கு ஓய்வு தேவைதான். நாளைக்குத் தமிழர்கள் மூளையில்லாமல் போவதை விட இன்று கவலைப்பட்டுப் பைத்தியம் பிடிக்காமல் இருப்பதுதான் உடனடித் தேவை. ஆமாம்.. மூளைக்கு ஓய்வு தேவைதான்'' என்றேன்.

''அதைத் தான் நான் செய்து கொண்டிருக்கிறேன்,'' என்று அவன் புறப்பட்டுப் போய் விட்டான்.

அவன் திரும்ப வரும் போது நான் என்பதை நாம் என்று திருத்திச் சொல் என்று அவனிடம் சொல்ல வேண்டும் என்றிருக்கிறேன்.

வியப்புகள்

கா. அரங்கசாமி

என்முன்
கொட்டிக் கிடக்கும் வெண்ணனித்திலங்கள்
விழியில் திரண்ட வேதனைக் கருக்கள்?
வெம்மையில் பிறந்த ஏக்கத் திரட்சி?
வியப்புகள்—பெருவியப்புகள்!

என் முன்
வெடித்துக் கிடக்கும் வெண்மொக்குகள்.
வீசும் தென்றலின் வெற்றிச் சிரிப்பு?
வீணையின் நாதம் விளைத்த விளைவு?
வியப்புகள்—பெரு வியப்புகள்!

என் முன்
இருள் மறைக்கும் வீழ்ந்த ஞாயிறு.
விண்ணில் படர்ந்த வேதனைக்கொடி?
மண்ணில் படர்ந்த மயக்கத் திரட்சி?
வியப்புகள்—பெருவியப்புகள்!

என் முன்—இப்படி
விரிந்து கிடக்கும் வாழ்க்கை வியப்புகள்.
விதை விதைப்பதும் விளைவறுப்பதும்
வினைவிதைப்பதும் பயன் அறுப்பதும்
வியப்புகள்—ஆமாம்—பெருவியப்புகள்!

லகு கவிதை

‘வெர்ஸ் லிப்ரே’’ என்று பிரஞ்சு மொழியிலும் ஃப்ரீவெர்ஸ் என்று இங்கிலீஷிலும் கூறப்படுவதின் தமிழ் அர்த்தம் லகு கவிதை. சென்ற நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்த ஜூலஸ் லா ஃபோர்க் (1860—1887) தான் இந்த வெர்ஸ் லிப்ரே அமைப்பை பிரஞ்சு மொழியில் கையாண்டவர். அது பின்னால் எஸ்ரா பவுண்டு, டி. எஸ். எலியட் போன்றவர்களால் இங்கிலீஷில் கையாளப்பட்டது. பிறகு மற்ற மொழிகள் பலவற்றுக்கும் பரவியது. நம் தமிழிலும் இந்த முறை கவிதைகள் நிறைய வெளி வந்திருக்கின்றன.

ஆனால் மற்ற மொழிகளில் அவ்வப்போது இந்தவித முயற்சிகளுக்கு எதிர்ப்பும் கண்டனமும் இருந்தது போலவே தமிழிலும் இன்று காணப்படுகிறது. திட்டவட்டமானதாக கருதப்படும் யாப்பு உருவத்துக்கு மீறிச் செய்வது அடாத செயலாக ‘கருதப்படுகிறது. இன்னும் ஏதோ தமிழ் கவிதை ஒன்றுக்குத்தான் மரபான, சத்தான யாப்பு இலக்கணம் இருப்பது போலவும் உலக மற்ற மொழிகளுக்கு அப்படி எதுவும் இல்லாதது போலவும் நினைப்பு.

எந்த ஒருமொழி இலக்கிய கவிதைக்கும் தன் தனக்கென யாப்பு அமைதி இருக்கத்தான் செய்கிறது. லா ஃபோர்க்கைப் பற்றி கூறும்போது, அவர், மரபான கவிதை உருவத்தை பெயர்த்து எறிந்து விட்டார் என்றும் ‘சின்டாக்ஸ்’ என்கிறோமே சொற்புணரிலக்கணத்தை சின்னாபின்னம் செய்து விட்டார் என்றும் துணிச்சலோடு அன்றைக்கு பழக்கத்தில் இருந்த சொற்களை புகுத்தினார் என்றும் சொல்லப்படுகிறது. இதே மாதிரி தான் எலியட், பவுண்டு போன்றவர்கள் இங்கிலீஷ் மொழியில் செய்தார்கள். ஆக, புதுக் கவிதை முயற்சி, தற்கால கவிதைப் போக்கு, தமிழில் செய்யப்படுகிறபோது ஏதோ புனிதம் கெடுக்கும் காரியமாக கருதுவது அர்த்தமற்றதாகும். உலக கவிதை மரபு அறிந்து செய்கிற காரியம். ஆகவே இந்த லகு கவிதை பற்றிய சில கருத்துக்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அமி லோவல் என்பவர் ஆயிரத்து தொளாயிரத்தி பத்துக்களில் இயங்கிய படிம இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர். அவருடைய கருத்து இது: ‘இலகு கவிதை என்பது பேசும் குரலின் ஒலிநயத்தின் அடிப்படையில் அமைக்கப்படுவது. திட்டமிடப்பட்ட சந்த அமைப்பை கடைப்பிடித்து உருவாக்குவது இல்லை. நம் சுவாசத்துக்கு ஏற்பவும் இருக்கும்’ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதை ஒட்டியே டி. எச். லாரன்ஸ் சொல்கிறார்: ‘ஒலிநயம் என்கிறபோது அகலமான இறக்கைகள் கொண்ட ஒரு பறவை வானில் பறந்தும் சறுக்கியும் வழுக்கிப் போவதையுமே நான் நினைக்கிறேன். எல்லாம் நாம் எடுத்துக் கொள்ளும் ஒரு நிறுத்தல், ஓய்வு, உணர்ச்சிக்கு ஏற்ப குரல் சுதாவாக இழுபடுவதைப் பொறுத்துத் தான் இருக்கிறது. கவிதையை ஆக்குவது துலக்கமாக உள்ள உருவம் இல்லை, உள்பொதிந்து மறைந்து நிற்கும் உணர்ச்சிப் பாங்குதான்.’

லாரன்ஸ் சிறந்த புதுக் கவிதைக்காரர்களுள் ஒருவர். அவரது ‘பாம்பு’ என்ற கவிதை மிகச் சிறப்பாக கருதப்படுவது. அவரைப் போலவே டி. எஸ். எலியட்டும் ஒரு கவி. அவர் கூறுகிறார்; ‘உருவத்திலிருந்து விடுதலை பெறுவது தான் லகு கவிதை என்றால் ஒரு மட்டமான கவிதான் அதை வரவேற்பான். அது செத்துப் போன, ஒழிந்த உருவவகைக்கு எதிரான ஒரு கலகம். புதிய உருவத்துக்கான ஒரு ஆயத்தம். அல்லது பழசை புதுப்பிப்பது ஆகும். வெளித் தோற்றமான ஒரு ஒருமிப்பு ஒரே மாதிரியாக இருக்கும். அதுக்கு எதிராக உள்ளமைந்த ஒருமிப்பைத்தான் இது வலியுறுத்தும். இந்த உள்ளார்ந்த ஒருமிப்பு ஒவ்வொரு கவிதைக்கும் தனி விதமானது.’

பாழ் நிலம் என்ற தன் சிறந்த கவிதை உள்பட புதுக் கவிதைத் துறையில் தலை சிறந்த சாதனை காட்டியுள்ளவர் எலியட். அவரைப் போலவே தான் எஸ்ரா பவுண்டும். அவர் கூறுகிறார்: ‘ஒருவர் எழுதித்தான் ஆக வேண்டும் என்ற நிலை ஏற்படுகிற போது தான் ஒருவர் லகு கவிதை எழுத வேண்டும் அதாவது, தீர்மானிக்கப்பட்ட சந்த முறைகளால் முடிவதை விட அதிக அழகுடன் ஒரு ஒலிநயத்தை பொருளை (கவிதை உள்ளடக்கம்) ஏற்றிக் காட்ட முடிகிற போது தான். அல்லது விதிமுறையான மாறாத, ஒலிக்குறி கொண்ட செய்யுளின் அளவைவிட அதிக இயல்பானதாக, பொருளின் உணர்ச்சித் தன்மையின் பகுதியாக அதிகம் இருக்கும், அதிக பொருத்தமானதாக உற்றதானதாக அர்த்தம் ‘சொல்லத் தக்கதாக இருக்கிற போது தான்.’

எஸ்ரா பவுண்டு தன் ‘கேன்டோ’ கவிதைகள் மூலம் புதுக் கவிதையை சிறப்பாக்கியவர். இப்படி லகு கவிதைபற்றி அந்த துறையில் சாதனை காட்டியவர்களே கூறி இருப்பதை நாம் பார்க்கிறபோது இந்த முயற்சி ஏதோ யாப்பு தெரியாமல் எழுதப்படுவது என்பதில்லை, யாப்பை மீற வேண்டும் என்பதுக்காக செய்யப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது...லகு கவிதை எழுதுபவர்களுக்கு ரொம்ப நுண்ணுணர்வுள்ள செவி தேவையாகும். நல்ல வேலை செய்ய விரும்புகிறவனுக்குத்தான் லகு கவிதை சாத்தியம். லகு கவிதையின் ஊடேயும் எளிமையான ஒரு சந்தப் போக்கின் சாயல் பதுங்கிச் சென்று கொண்டிருக்கும். ‘புதுக் கவிதை வாசகர்கள் இவைகளை மனதில் கொண்டால் லாபகரமானதாகும்.

எழுத்து அரங்கம்

'புத்தம் வீடு' விவகாரம்

ஆசிரியருக்கு,

"எழுத்து" டிஸம்பர் இதழில், பேராசிரியர் செ. ஜேசுதாசன் அவர்கள் ஸ்ரீ சி. சு. செல்லப்பாவின் 'புத்தம் வீடு' பற்றி எழுதிய கடிதம் விமர்சனத்தின் விமர்சனமாகும், கடிதத்தின் தோரணையும் நிதானமும் இலக்கியத் திறனும் ஆசிரியரின் பண்புமிக்க உள்ளத்தையும் தர்க்க ஞானத்தையும் நன்கு தெரிவிக்கின்றன. ஒவ்வொரு இலக்கிய மாணவனும் படிக்க வேண்டிய கடிதம் இது. கடிதம்--சி. சு. செ, வின் பதிலைப் பார்க்கும் பொழுது —அலசல் விமர்சனத்தின் குறைபாடுகளை நன்கு புரிந்து கொள்ள உதவுகிறது. ஜேசுதாசனின் கடிதத்தில் எழுப்பப்பட்ட சில கேள்விகளுக்குச் சி. சு. செ. வின் கட்டுரையில் பதில் இல்லை. (1) நாவல் வெறும் காதல் கதை என்ற சி. சு. செ.வின் கூற்றுக்கு ஜேசுதாசன் அது அவ்வாறு அன்று என்று தர்க்கரீதியாக காட்டியிருக்கிறார் இதற்குத் தன் கடிதக்—கட்டுரையில் சி. சு. செ. பதில் அளிக்கவில்லை. (2) நாவலின் சிக்கல் தீர்வதற்கு ஏசு அருள்தான் துணை புரிந்தது என்று சி. சு. செ. கூறியிருக்கிறார். இது இவ்வாறு அன்று என்பதையும் ஜேசுதாசன் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். இதைப் பற்றியும் சி. சு. செ. மௌனம் சாதித்திருக்கிறார். (3) ஒரு அத்தியாயத்தை எடுத்துவிட வேண்டுமென்று சி. சு செ. கூறுவது எவ்வாறு பொருத்தமற்றது என்பதையும் ஜேசுதாசன் தெளிவுபடுத்தியிருக்கிறார் இதற்கும் சி.சு.செ. பதிலளிக்கவில்லை.

சொல்கிறார் சி. சு. செ: "மாணவர்கள் எழுத்துக்கு மார்க் போடும் பேராசிரியரின் எழுத்துக்கு மார்க் போட்டுக் காட்டுவது பொருத்தமே. இதை நீங்கள் ஏற்காமல் என்னைக் குத்திக் காட்டும் நினைப்பில் சில வரிகளை எழுதியிருக்கிறீர்கள். அவசியமில்லாதவை; பண்பு காட்டாதவை." இங்கு பண்பாடு பற்றிய பிரச்னை எங்கு வந்தது என்றுதான் எனக்குத் தெரியவில்லை ! இங்கு சி. சு. செல்லப்பா என்பவரைப் பற்றிய பிரச்னையே இல்லை; ஸ்ரீ ஜேசுதாசன் குறிப்பிட விரும்புவது விமர்சகன் அப்படி ஒன்றும் முக்கியமானவன் இல்லை, அவனால் ஒரு படைப்பு இலக்கியத்தின் தரத்தையும் ஏற்றத்தையும் கணித ரீதியாக நிர்ணயித்துவிட முடியாது என்பதே. மேலும் ஜேசுதாசன் "விமர்சகர் கலைக்கு வெளியில் நின்றுகொண்டு கலையை அலசி ஆராயும்பொழுது அவருக்குச் சிறிது அச்சம் இருக்க வேண்டும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்." என்று கூறும் வாக்கியத்தில் ஒவ்வொரு வார்த்தையும் அக்ஷர லக்ஷம் மதிப்புடையது. நான் கோடிட்டுச் சுட்டிக் காட்டியிருக்கும் பகுதி அலசல் விமர்சனத்தில் உள்ள—சரியான முறையில் செயல்படாதபொழுது—குறைபாட்டைக் காட்டுகிறது, ஏனென்றால் கவி தேசிகவிநாயகம் பிள்ளை கூறிய மாதிரி பாலின் சுவையை மூக்கால் கொட்டி அளந்து காட்ட முடியாது; சுவைத்துத்தான் பார்க்க முடியும். ஒரு படைப்பின் தாரதம்மியத்தை நிர்ணயிக்கும் முன் அதன் இயல்பை ரஸானுபாவமாக உள்ளவாறு உணர்ந்த பின் தான் அதை விமர்சிக்க முடியும். ஜேசுதாசன் கூறிய மாதிரி இந்நாவலின் விஷயத்தில் 'புத்தம் வீட்'டைப் பற்றிய வரை சி. சு. செ. பாதை தவறி விட்டார் என்று தான் தோன்றுகிறது.

லிஸ்ஸியின் தந்தை தற்கொலை புரிந்து கொண்டு விட்டார் என்பது சி.சு.செ.வின் வாதம். "நான் தற்கொலை செய்து கொண்டதாகக் குறிப்பிட்டேன். அவன் தற்கொலை செய்து கொண்டதாகத் தகவல் ஏதுவும் கதையில் இல்லைதான்." என்கிறார் இது நூதனமான தர்க்கமாக இருக்கிறது. ஒரு ஆசிரியரைத் தமிழ் 'ஆசிரியர் என்றோ ஆங்கில ஆசிரியர் என்றோ எப்படிக் குறிப்பிட்டாலும் ஒன்றுதான் என்று கூறுவதைப் போல,! சொல்கிறார் சி.சு. செ: 'அவனுக்கு ஏற்பட்ட சோர்வில், உறுத்தலில் பீதியில் அவன் தன் மரணத்தை வருவித்து கொண்டதாகவே தான் படுகிறது......' இங்கு வருவித்துக் கொண்டதாக என்பதற்கு சி. சு. செ. பழைய உரையாசிரியர்களைப் போல தன் கொள்கையை நிலைநாட்ட வலிந்து பொருள் கொள்வதாகத் தோன்றுகிறது ! இல்லாவிட்டால் அந்த வார்த்தைப் பிரயோகம் அங்கு சரியில்லை ! இன்னும் ஒருகேள்வி—அலசல் பூர்வமான கேள்வி !—லிஸ்ஸியின் தந்தையின் வாயில் ரத்த நுரை எப்படி வந்தது ? ஆமாம், ஷேக்ஸ்பியர் 'ஒதெல்லோவில்' கதாநாயகி டெஸ்டிமோனாவின் கழுத்தை நெருக்கிய பிறகு அவள் பேசியதாகக் கடைசியில் ஒரு கட்டம்—இது எப்படி முடியும் என்று ஒரு நியாயமான கேள்வியை ஒரு விமர்சகன் கேட்டான் (அலசல் ஆசாமியாகத் தான் இருக்க வேண்டும் !) ஆனால் இன்று நமக்கு ஷேக்ஸ்பியர் பெயர்தான் நினைவில் நிற்கிறது; கேள்வி கேட்டவன் கேள்வி மாதிரி அவன் பெயரும் அர்த்த மற்றதாகி விட்டது !

கடைசியாக ஒரு வார்த்தை. இன்று எனக்கு அறிந்த வரையில் திருவனந்தபுரத்தில் கல்லூரி மாணவர்களிடை க. நா. சு.. ஜானகிராமன், அழகிரிசாமி, சுந்தர ராமசாமி, கிருஷ்ணன் நம்பி, ஜெயகாந்தன், 'கிருத்திகா,' கி. ராஜநாராயணன், ஏன், செல்லப்பாவும்தான், இவர்களுடைய பெயர்கள் 'பிராபல்யமா'வதற்குக் காரணம் பேராசிரியர் ஜேசுதாசன்தான். அவர் இலக்கிய வரலாற்றில் இவர்கள் பெயர்கள் குறிப்பிடாதது செல்லப்பா அனுமானிப்பது போல் விருப்பமின்மையன்று; சமகால ஆசிரியர்களைப் பற்றி அப்படி ஒன்றும் வரையறுத்து அபிப்பிராயம் சொல்வது விமர்சிப்பது அவ்வளவு எளிதன்று ! இது நமது விமர்சனத்திலிருந்து தெரிகிறது !

• இந்தக் கட்டுரையின் அடிப்படை நோக்கமே ரஸனையை மறந்து அலசல் விமர்சனத்தில் ஈடுபடக் கூடாது என்பதைக் காட்டவே என்று கூறி நிறுத்திக் கொள்கிறேன்.

திருவனந்தபுரம் டி. கே. துரைசாமி.

எழுத்து பிரசுரம் வெளியீடுகள்

1.	பதினெட்டாம் பெருக்கு (சிறுகதைகள்)	ந. பிச்சமூர்த்தி	ரூ.	4-00
2.	வழித்துணை (கவிதைகள்)	,,	ரூ.	2-00
3.	அகல்யை (ஓரங்க நாடகங்கள்)	கு. ப. ரா.	ரூ.	4-00
4.	ஆண்சிங்கம் (சிறுகதை)	வல்லிக்கண்ணன்	ரூ.	4-00
5.	சில விஷயங்கள் (கட்டுரைகள்)	சிட்டி	ரூ.	3-00
6.	சத்யாக்ரகி (சிறுகதைகள்)	சி. சு. செல்லப்பா	ரூ.	4-00
7.	வாடி வாசல் (நாவல்)	,,	ரூ	4-00
8.	கோடை வயல் (கவிதைகள்)	தி. சோ. வேணுகோபாலன்	ரூ.	1-25
9.	கனவுப் பறவை (சிறுகதைகள்)	கர்ணன்	ரூ.	2-50
10.	புதிய பாதை (நாடகம்)	கோமல் சுவாமிநாதன்	ரூ.	3-00

கிடைக்குமிடம் :

எழுத்து பிரசுரம்

19-A, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-5.

EZHUTTHU

TAMIL LITERARY MONTHLY

Subscription Rates

Annual	Rs. 6/-
Three Years	Rs. 15/-
Foreign Annual	Rs. 8/-
Three Years	Rs. 20/-
Single Copy	50 pisae

Published every first of the English month.

Ad: EZHUTTHU
19-A. Pilliarkoil Street,
Madras-5

EZHUTTHU

TAMIL LITERARY MONTHLY

Advertisement Tariff

Inside Page

Full Page	15 × 20 cms	Rs. 80/-
Half ,,	15 × 10 / 7½ × 20	Rs. 40/-
Quarter Page	7½ × 10 / 15 × 5	Rs. 20/-
Back Cover		Rs. 100/-
Inside Cover		Rs. 90/-

EZHUTTHU
19-A. Pilliarkoil St.,
Madras-5.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5
Printed by M, Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane Madras-5